கழக வெளியீடு—உ௪௦

கழகத் தமிழ்ப் பாடம்

ஏழாம் புத்தகம்

(இரண்டாம் பாரம்)

ஆசிரியர் :

திருவள்ளூர், வெஸ்லியன் மிஷன் ஹைஸ்கூல்

தலைமைத் தமிழாசிரியராயிருந்த

திருவாளர். S. சகதேவ முதலியார்.

:: திருநெல்வேலி, தென்னிந்திய ::

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,

திருநெல்வேலி & சென்னை

பதிப்புரிமை] 1937 [விலை அணா 8

1st Edition: Dec. 1937

Published by

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS
: PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD., :
TINNEVELLY, & MADRAS.
Dec. 1937

The Jupiter Press, Madras.

முகவுரை

தமிழ்மாணவர்கள் தமிழ்மொழியைச் செம்மையும் இனிமையுமுறப் பேசவேண்டும்; திருத்தமுந் திறமையும் பெற எழுதவேண்டும்; தமிழ்மொழியிலுள்ள உயரிய நூல்களிற் பழகி உட்கருத்துக்களையும், நுட்ப நுணுக்கங்களையும், அழகு நயங்களையும் அறிந்துணர்ந்துகொள்ள ஆவலும் ஊக்கமு முடையவர்களாக வேண்டும்; வெவ்வேறு கலையறிவுகளை யூட்டும் பற்பல நூல்களிற் காணப்படும் உண்மைகளையும் உயர்பொருள்களையுங் கண்டு தெளிந்து அறிவிற் பெருகவேண்டும். இச் சிறந்த நோக்கங்களுடனேயே இக் கழகத் தமிழ்ப்பாடப் புத்தகவரிசை எழுதப்பட்டிருக்கின்றது.


இதன்கண் ஒவ்வொரு பாடத்தின் அடியிலும் பயிற்சி எழுதிச் சேர்க்கப்பட்டிருப்பதோடு, நூலிறுதியில் செய்யுட்பாடக் குறிப்புக்களும் அருந்தொடர் மொழிப் பொருளகராதியும் எழுதிச் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

இவ் ஏழாம் புத்தகத்துக்கு நண்பர் திரு. அ. நடராசபிள்ளை அவர்களும், நண்பர் திரு. காழி. சிவ. கண்ணுசாமிபிள்ளை, பி.ஏ., அவர்களும், யானும் எழுதிய பாடங்களைச் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் கேட்டுக்கொண்டபடி யான், மேற்படி கழகத்தார்வழியாக முன்னரே வெளிப்படுத்தியுள்ள 4-வது, 5-வது பாடப்புத்தகங்களுக் கேற்பவும், ஆறும் புத்தகத்திற் கேற்பவும் திருத்தியும், புதுக்கியுஞ், செப்பஞ் செய்தும் முறைப்படுத்தி இதனை வெளியிட்டுள்ளேன். இதற்குரிய பாடங்களின் ஒரு பகுதியை எழுதித் தந்துள்ள மேற்படி நண்பர்களிருவருக்கும் எனது நன்றி எழுமையு முரியதாகும். இதனைப் பதிப்பிக்கும் போது, காழி. சிவ. கண்ணுசாமிபிள்ளை அவர்கள் விளக்கப்படங்கள் அமைத்தற்குக் குறிப்புக்கள் தந்தும், பிழைதிருத்தம் பார்த்து முதவியது பாராட்டுதற்குரியது.

சேலை, திருவள்ளூர்,
7—12—37.

சகதேவன்.

உள்ளுறை



1. பஞ்சவர்ணக்கிளி
2. சேவற் கோழி
3. மயில்
4. கற்பகப் பறவை
5. உங்காரப் பறவை
6. அரச மீன் கொத்தி
7. ஹூ போ

கடவுள் துணை

கழகத் தமிழ்ப் பாடம்

ஏழாம் புத்தகம்

௧. தமிழ்த்தெய்வ வணக்கம்

௧. நீராரும் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்,
தக்கசிறு பிறைநுதலும், தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநற் றிருநாடும்;
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற,
எத்திசையும் புகழ்மணக்க, இருந்தபெருந்
தமிழணங்கே!

௨. பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத்
துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன் னிருந்தபடி
யிருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையா
ளமுந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே யொன்றுபல
ஆயிடினும்,
ஆரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து
சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து, செயன்மறந்து
வாழ்த்துதுமே.

—பேராசிரியர் சுந்தரம் பிள்ளை.

உ. பன்னிறப் பறவைகள்

பறவைகள் பற்பல நிறமுடையன. செம்மை, கருமை, வெண்மை, பொன்மை, பசுமை ஆகிய நிறங்களைத் தனித்தும் விரவியும் கொண்டனவாய் அவை காணப்படுகின்றன. இவ்வைந்து நிறங்களையும் ஒருங்கே பெற்றிருக்கும் பறவைகளும் பலவுள. பஞ்சவர்ணக்கிளி யென்பது ஐந்து நிறங்களையும் பெற்றுள்ளதொரு பறவை யாகும். சேவற்கோழிகளிற் பல ஐந்நிற முடையனவா யிருப்பதை நீங்கள் பார்த்திருக்கலாம்.

தனிப்பட்ட ஓரே நிறம் வாய்ந்த பறவைகளிலும் சில பார்ப்பதற்கு அழகாக விருக்கின்றன; இருந்தாலும் நிறங்கள் பல விரவிய பன்னிறப் பறவைகளே கண்ணைக் கவருந் தகையனவா யிருக்கின்றன. இத்தகைய பன்னிறப் பறவைகள் இவ்வுலகில் வெப்பம் மிகுந்த பகுதிகளிலேயே தோன்றி வாழ்கின்றன. பறவையினங்கள் ஒவ்வொன்றிலுஞ் சேவல்களுக்கே அழகுகாட்டும் பலநிறங்கொண்ட இறகுக ளமைந்திருக்கின்றன; பேடுகளுக்கு அத்தன்மையவான இறகுகள் பெரும்பாலும் இருப்பதில்லை.

நமது நாட்டுப் பன்னிறப் பறவைகளில் மயிலே சிறந்தது. மயிலுக்குச் சிறப்புத் தருவது அதன் தோகையே. தோகையை விரித்து மயிலாடும் காட்சி பார்ப்போர் மனத்தைக் கவர்ந்து மிகுந்த மகிழ்ச்சியை யளிப்பதொன்றாகும். விரித்த தோகையிற் காணப்படும் **கண்கள்** என்ற வட்டப்பொட்டுக்கள் நேர்நேராகக் கோவைபட நின்று ஒளிர்வது மிகுந்த வியப்பைத் தரும். மக்கள் அழகுக்காகவே மயிலை நந்தனவனங்களிலும், கோவில்களிலும், வீடுகளிலும் வளர்க்கின்றார்கள்.

ஆனால் பார்க்க அழகாயிருக்கும் மயில் அகவும்போது கேட்பதற்கு அருவருப்பாகவிருக்கும். மயில்கள் கூட்டமாகக் கூடிக் கூவினாலோ மக்களுக்குச் சொல்லொணு அச்சத்தையே விளைக்கும்.

மேற்கிந்தியத் தீவுகளிலும், நியூகினியிலும், ஆஸ்திரேலியாவிலும் கற்பகப்பறவைகள் என்று சொல்லப்படும் பலநிறப் பறவைகள் மிகுதியாய்க் காணப்படுகின்றன. இவை பஞ்சவர்ணம் பொருந்தியவையே. புலி பூனையினினமாவது போன்றே கற்பகப்பறவைகள் காக்கையினினமாகும். இவற்றின் இறகுகளின் அமைப்பு மிக விந்தையானது. விரிக்கப்பட்ட சிறகுகளைப் பார்த்தால் அவை இரண்டு அரைவட்டங்கள்போல மிக அழகாகத் தோன்றும். இப்பறவைகட்கு நடனம் புரிவதில் மிகுந்த விருப்பம். அதற்கென்றே இவை தனியிடங்களைக் கண்டுவைத்திருக்கின்றன. ஆங்குச் சென்று கற்பகச் சேவல்கள் அழகு பொலியச் சிறகுகளை விரித்தாட, பேடுகள் திறந்தகண் மூடாது வியப்புடன் பார்த்துநிற்கும். சிற்சில வேளைகளில் மரக்கிளைகளின் மீதும் இவை இவ்வாறுடுவ துண்டு. இக்கற்பகப் பறவைகளிற் கணக்கற்ற வகைகள் இருக்கின்றன. இவைகட்குப் பழங்கள், கொட்டைகள், பூச்சிகள் முதலிய உணவாகும்.

இனி, ஐந்நிறம் வாய்ந்த உங்காரப்பறவைகள் என்ற ஒருவகைப் பறவைகளும் உள. இவை உருவிற் சிறியவையாயினும் அழகிற் சிறந்தவை. இவற்றின் இறகுகளின் நிறங்களை ஒளிர்கற்களின் நிறங்களுக்கே யொப்பிடல் வேண்டும். உங்காரப்பறவைகளிற் பசும்பொன்னிறத்தை மிக்குக் கொண்டு அழகிற் சிறந்தவையாய்க் காணப்படுவன மேற்கிந்தியத் தீவுகளிலும், தென்னமெரிக்காவிலும் வாழ்கின்றன.

பகலவனொளியிற் காணப்படும் பல நிறங்களையுங் கொண்ட இவ்வினத்தின் ஒருவகைப் பறவைக்கு வானவிற்பறவை என்று பெயர்.

உங்காரப் பறவைகள் வந்ததுபோனது தெரியாமலே கண்மூடிக் கண்திறப்பதற்குள் ஒரு மலரின்மே லிறங்கி அதிலுள்ள தேனைக் குடித்துவிட்டு மற்றொரு மலரை நாடியோடிவிடும். இவ்வாறு இவை மிக விரைவிற் பறந்தோடு வதனாலேயே "உம்" என்ற ஒலி அவற்றிடம் உண்டாகின்றது. இவ்வொலியேதான் இவற்றின் பெயர்க்குக் காரணமாயமைந்தது போலும்! இப்பறவைகள் ஓய்வில்லாமல் நாளெல்லாம் பறந்துகொண்டே யிருக்கும்; பறந்துகொண்டே தேனுண்ணும். இவை மலர்களின்மேல் விழுந்து தேனுண்ணும்பொழுது இவற்றின் சிறகுகள் மேலே கிளம்பியிருக்க, இவை காற்றின்கண் தொங்கிக்கொண் டிருப்பவைபோற் காணப்படும்; தேனுண்டு திரும்பும்போதோ சிறிது பின்னகவே போய்ப் பிறகுதான் மூக்கிற்கு நேரே பறந்து செல்லும். பின்னகப் பறக்கும் இத்தன்மை மற்றைப் பறவைகட்கில்லை. உங்காரப்பறவைக் குஞ்சிற்கு மூக்கு மழுங்கலா யிருக்கும்; ஆனாலும், அது வளர வளர மூக்கும் வளர்ந்து சிறு மலர்களிலும் உட்செல்லக் கூடியவளவிற்கு மிகக் கூர்மையாய்விடும். இப்பறவைகள் தேனையே யன்றிப் பூச்சிகளையுந் தின்னும். இவ்வினத்தில் நூற்றுக்கணக்கான பிரிவுகள் இருக்கின்றன; சிற்சில பெரியவையாகவும் வளர்கின்றன.

நமது நாட்டின்கண் மீன்கோத்திப் பறவை யென்றொன் றிருப்பதை நீங்க ளறிவீர்கள். இப்பறவை ஏற்றத் துலாவின் மீதிருந்து ஓரே பாய்ச்சலாய்க் கிணற்றினுட் பாயும்; பாய்ந்து, அங்குள்ள சிறுமீனைக் கொத்தி யெடுத்துக்கொண்டு

இமைகொட்டுமுன் இரைநீரினின் றெழும்பிப் பறந்து போய் விடும். ஐரோப்பாக் கண்டத்திலும் இங்கிலாந்திலும் இத்தகைய மீன்கொத்திப் பறவைகளுண்டு. அப்பறவைகள் பல நிறங்களோடுகூடி மிக அழகாகக் காணப்படும். அவற்றை அந்நாட்டார் அரசமீன்கோத்தி என்கின்றார்கள். மீன்கொத்திகள் ஆறுகுளங்கட்கு அணித்தாகவே தங்கள் கூடுகளைக் கட்டிக்கொண்டு வாழ்கின்றன. இப்பறவைகளின் கூடுகள் மீன்முட்களினாலேயே ஆக்கப்படுகின்றன என்பர்.

தலையிற் புள்ளிக் கொண்டையும் கூரிய மூக்குமுடைய ஹூபோ வென்று சொல்லப்படும் பன்னிறப் பறவையொன்று பெரும்பாலும் பாலைநிலங்களிற் காணப்படும். இது நந்நாட்டு மரங்கொத்தியைப் போன்றதொன்று. வல்லூறு இதற்கு நேர்பகை யாதலான் இஃது அதனைக் கண்டவுடன் தன் கொண்டையைத் தாழ்த்திக் கொண்டும், இரண்டு சிறகுகளையும் விரித்துப் பரப்பிக் கொண்டும் தரையோடு தரையாய்ப் படுத்துக் கொள்ளும்; இந்நிலையில் அதைப் பார்த்தால் ஒரு கந்தைத் துணிபோற் காணப்படும்.

இவ்வுலகிலுள்ள உயிர்த்தொகுதிகள் பற்பல வகையினவாம். அவற்றுள் ஒன்றற்கொன்று பகையாக ஏற்பட்டுள்ளவை பலவுள. அதனதன் பகையினின்றுந் தப்பித்துக் கொள்ள உதவக்கூடிய கருவிகள் ஒவ்வோருயிரினிடமும் இயற்கையாகவே அமைந்திருக்கின்றன. இக்கருவிகள் அதனதன் உடலமைப்புக்குத் தக்கவாறு வெவ்வேறு வகையாகக் காணப்படும். மான்களுக்குக் கொம்பும், புலிகளுக்கு நகமும், பாம்புகளுக்கு நச்சுப்பல்லும் போன்றன இத்தகைய உதவு கருவிகளாம். இவ்வாறே பல்வேறு வகையான பறவைகளுக்கும் அவ்வவற்றின் நிறவண்மைப்பே காப்பாகப் பொருந்தி

யிருக்கின்றது. அந்நிறங்கள் அவை வாழ்ந்துவரும் இடங்கட்குத் தக்கபடி வெவ்வேறு வகையாகக் காணப்படுகின்றன. இந்நிறவமைப்பு உயிர்க்காப்பு நிறவமைப்பு என்று கூறப்படும்.

பயிற்சி

1. விரவுதல், இடுக்கண், காப்பு, தோகை, கோவை, நந்தனவனம், அகவுதல், விந்தை, கணக்கறுதல், ஒளிக்கற்கள், நூற்றுக் கணக்கு, இமைகொட்டல், அணிமை, பாலை, நேர்பகை, தரையோடு தரை.
2. உயிர்கட்குத் தற்காப்பு இயற்கையிலேயே யமைந்திருக்கின்றது—இதனை உதாரணங்கள் காட்டி விளக்கு.
3. சேவற் பறவைகள் சிறகு விரித்தாடுகின்றன—இதில் ஒவ்வொரு மொழியிலுமுள்ள மாத்திரைகளின் தொகையென்ன?
4. உங்களூர்ப் பறவைகளைப் பற்றி உனக்கென்ன தெரியும்?

---

௩. புலியென்னுங் கிலி

(பிரதாப முதலியார் சரித்திரம்)

"ஒருநாள் நண்பகலில், இரண்டு பக்கமும் மலைகள் அடர்ந்த கானகத்தின் வழியாக, நாங்கள் (பிரதாப முதலியாரும், அவர் மனைவி ஞானம்பாளும், வேலைக்காரர்களும்) பயணஞ் செய்துகொண்டிருக்கையில் திடீரென்று வானம் இருண்டு பெருங்காற்றுடனே மழையும் துவங்கிற்று. நாங்கள் இருந்த வண்டியில், நாலு பக்கமும் தூவானம் அடித்து, நாங்கள் நனையும்படியான நிலையில் இருந்தபடியால், மழை விடுகிறவரையில், ஒரு மலைக்குகைக்குள்ளே இருக்கலாமென்று நினைத்து, வண்டியினின்று கீழே யிறங்கி, நானும்

ஞானம்பாளும் வேலைக்காரர்களும் அவர்களுடைய மனைவிமார்களுமாகச் சேர்ந்து மலை அடிவாரத்துக்குப் போனோம். வண்டிக்காரர்கள் வண்டிகளுக்குக் காவலாக இருந்தார்கள். நாங்கள் மலை அடிவாரத்தில், இருள் அடைந்த ஒரு கெபியைக் கண்டு, அதற்குள்ளே நுழைந்து, வாசற்படி யோரத்தில் உட்கார்ந்தோம். மழை நின்று, கொஞ்சம் வெளிச்சங் கண்டவுடனே, அந்தக் கெபிக்குள்ளாகப் பார்த்தோம். எங்களுக்குக் கொஞ்ச தூரத்தில் அந்தக் குகையில் இரண்டு புலிகளைக் கண்டு, நாங்கள் திகிலடைந்து, ஒருவர்மேல் ஒருவர் விழுந்து ஓட ஆரம்பித்தோம். எங்கள் வேலைக்காரர்கள், எங்களையும் அவர்களுடைய பெண்டாட்டிமார்களையும் விட்டுவிட்டு ஒரு நொடிப் போதில் போனவிடந் தெரியாமல், ஓடியொளிந்து கொண்டார்கள்.

நான் ஞானம்பாளையும் வேலைக்காரிகளையும் முன்னே ஓடச் சொல்லி, பின்னே ஓடினேன். ஓடச் சக்தியில்லாத அந்தப் பெண்களும் நானும் மழைபெய்த சேற்றிலே சறுக்கி விழுந்துகொண்டு, தள்ளாடித் தள்ளாடி ஓடும்பொழுது, பின்னே திரும்பிப் பார்த்தேன். அந்தப் புலிகள் குகையை விட்டு ஓடி வருகிறதைக் கண்டு, நான் அந்தப் பெண்களைப் பார்த்து, "புலிகள் நம்மைத் தொடர்ந்து வருகிறபடியால், சீக்கிரமாய் ஓடுங்கள்!" என்றேன். இதைக் கேட்டவுடனே அந்த வேலைக்காரிகள், கிலி பிடித்துக் கீழே விழுந்து உதைத்துக் கொண்டார்கள். அவர்களை அந்த நிலையில் விட்டுவிட்டு, எப்படிப் போகிறதென்று, நானும் ஞானம்பாளும் மலைத்து நின்றோம். புலிகள் சமீபித்தவுடனே, அவைகளைச் சுடலாமென்று, என் கையிலிருந்த துப்பாக்கியில் குண்டு போட்டுக் கெட்டிக்க ஆரம்பித்தேன்.

ஞானம்பாள் சற்று நேரம் அந்தப் புலிகளை உற்றுப் பார்த்து, "அவை நாலுகாற் புலிகளாயிராமல் இரண்டு காற் புலிகளாய்க் காணப்படுகின்றன; அவற்றை நன்றாய்ப் பாருங்கள்!" என்றாள். நான் திரும்பிப் பார்க்க ஆரம்பித்த வுடனே, அந்தப் புலிகளிடத்தினின்று சில வாக்கியங்கள் புறப்பட்டன. அவை யாவை யென்றால், "ஐயா! எங்களைச் சுடவேண்டாம்! நாங்கள் புலிகள் அல்லேம்! வெறும் வேடக்



காரர்களே!" என்பனவாம். சற்று நேரத்தில் அவ் வேடக் காரர்கள் எங்களை நெருங்கிவந்து, எங்களைப் பார்த்து, "நாங் கள் அல்லாப்பண்டிகைக்காகப் புலிவேடம் போட்டுக் கொண்டு, பல ஊர்களுக்குப் போய், யாசகம் வாங்குகிறதற் காகப் புறப்பட்டோம்! மழையினால் எங்கள் வேடம் கலைந்து போகுமென்று நினைந்து அந்தக் குகைக்குள்ளாக உங்களுக்கு முன்பாகவே நாங்கள் வந்து உட்கார்ந்து இருந்தோம்! இது

தான் நடந்த வரலாறு!" என்றார்கள். அவர்கள் புலிகள் அல்லர் என்றும் வேடக்காரர்களே என்றும் எங்கட்குப் பிரத்தியட்சமாய்த் தெரிந்தவுடனே, எங்களுடைய பயம் நீங்கிவிட்டது. கிழே விழுந்து கிடந்த அந்த வேலைக்காரிகளுடைய நடுக்கம் தீரவேயில்லை.

அவர்கள் நடுக்கந் தீர்ந்து எழுந்திருக்கும்படியாக, நாங்கள் பட்டபாடு கொஞ்சமன்று. அவர்களுடைய கணவன்மார்கள் போனவழி தெரியாமையினாலே, அவர்களை நாங்கள் நாலுபக்கமும் தேட ஆரம்பித்தோம். சற்று நேரத்திற்குப் பின்பு, எங்கள் சாமான்வண்டிக்குள்ளாகச் சத்தம் கேட்டு, நாங்கள் சாமான்களை விலக்கிப் பார்த்தோம். அங்கே அந்த வேலைக்காரர்கள் சாமான்களை வாரி மேலே போட்டுத் தம்மை மறைத்துக்கொண்டு படுத்திருந்தார்கள். அவர்களை நான் எழுப்பி வெளியே வரச்செய்து, "ஆபத்து வரும்போது நாங்கள் முன்னின்று தலைகொடுப்போம் என்று சொல்லிவந்த நீங்கள் இப்படிச் செய்யலாமா?" என்று கேட்டேன். அதற்கு அவர்கள் என்னைப் பார்த்து, "சுவாமி! எங்கள் மேலே குற்றமில்லை! ஆபத்து இல்லாத வேளையில், நாங்கள் நல்ல தைரியசாலிகளாகவே இருக்கின்றோம். ஆபத்தைக் கண்டவுடனே, எங்களுடைய கால்கள் நிலைகொள்ளாமல் எங்களையும் இழுத்துக் கொண்டு ஓடுகின்றன. நாங்கள் என் செய்வோம்!" என்றார்கள். அப்படிப்பட்ட சுத்த வீரர்களை வீணே கோபிப்பதில் பயனில்லை என்றும், ஆபத்து வேளையில் கைவிட்டு ஓடினதற்காக அவர்கள் மனைவிமார்களே அவர்களுக்கு நல்ல புத்தியைக் கொடுக்கட்டும் என்றும் நினைத்து நான் சும்மா இருந்துவிட்டேன். ஆனால், அந்த மூடப் பெண்களோ தங்கள் கணவன்மார்களைக் கோபிப்பதற்குப் பதிலாக அவர்

களைப் பார்த்து, "ஐயோ! நீங்கள் ஓடும்போது உங்கள் கால்களில் கல்லும் முள்ளும் தைத்திருக்குமே! சாமான்களைத் தூக்கி மேலே போட்டுக்கொண்டபோது தேகத்தில் காயங்கள் பல பட்டிருக்குமே!" என்று அனுதாபப் பட்டார்கள். "பட்சத்துக்குக் கண் இல்லை!" என்பது அப்பொழுதுதான் எனக்குத் தெரிந்தது."

—வேதநாயகம் பிள்ளையவர்கள்.

பயிற்சி

1. நண்பகல், கானகம், பயணஞ்செய்தல், துவானம், அடிவாரம், கெபி, மலைத்தல், யாசகம், தலைகொடுத்தல், ஆபத்து, பட்சம்.
2. பட்சத்துக்குக் கண்ணில்லை—இதனை விளக்கு.
3. தைரியசாலி—இச்சொல் என்ன பால்? இதுபோன்ற சொற்கள் சில சொல்லு.
4. இப்பாடத்தினால் நீ என்னென்ன உண்மைகள் தெரிந்து கொள்கிறாய்?

ச. குமரகுருபரர்

பாண்டிநாட்டுப் பழம்பதிகளுள் ஒன்று ஸ்ரீவைகுண்டம்; அதற்குக் கைலாசபுரம் என்று மற்றொரு பெயரும் உண்டு. அத் திருப்பதியின்கண் ஏறக்குறைய முந்நூறு ஆண்டுகட்கு முன்னர் சண்முகசிகாமணிக் கவிராயர் என்ற பெயர் தாங்கிய சைவவேளாளர் ஒருவரிருந்தார். தமிழிற் புலமை வாய்ந்திருந்த அப்பெரியாருக்கு மனைவியாராகிய சிவகாமி யம்மையார்பாற் குழந்தைகள் இருவர் பிறந்தனர்; அவர்கள் குமரகுருபரரும், குமாரகவிகளுமாம்.



குமரகுருபரர் கந்தர்கலிவெண்பா பாடியது.

குமரகுருபரர் தாம் பிறந்து ஐந்தாண்டுகள்வரை வாய் திறந்து பேசவில்லை. இது கண்ட தாய் தந்தையர் பெரிதும் மனம் வருந்தினார்கள்; எவ்வெவ்வகையிலோ முயன்று பார்த்தார்கள்; குமரகுருபரரின் மூங்கைத்தன்மை நீங்கவில்லை. அதுகண்ட அவர்கள் குழந்தையை யழைத்துக்கொண்டு திருச்செந்தூர் சென்றடைந்து முருகப்பெருமானை நாடோறும் வணங்கித் தம் குறையை நீக்கி யருளுமாறு வேண்டி வந்தனர். ஒருநாளிரவு குமரகுருபரரின் கனவில், முருகப் பெருமான் அக்கோவிலின் அர்ச்சகர் உருவந்தாங்கி வந்து தோன்றி, "குமரகுருபரா! நீ நாளை உன் பெற்றோருடன் நங்கோவிலுக்கு வருதி!" என்று பணித்தனர். திருவருள் வாய்க்கப்பெற்ற சிறுவரும் உடனே பேச்சுத்திறன் வாய்ப் பெற்று, கண்ட கனவைப் பெற்றோர்க் கெடுத்துரைத்தார். மூங்கைப் பிள்ளை பேசக்கண்ட தாய்தந்தையர் பெரு வியப் படைந்தனர். கட்டளைக் கிணங்கி மறுநாட் கோவிலுக்குச் சென்ற குமரகுருபரர் **கந்தர்கலிவெண்பா** என்ற நூலைப்பாடிப் பெருமானை வணங்கினர்.



குமரகுருபர சுவாமிகள்

பிறகு, குமரகுருபரர் பெற்றோருடன் தம்மூர் திரும்பினர். திரும்பியவர் அவ்வூரிலேயே சிலநாள் தங்கியிருக்கையில் ஆங்குள்ள கைலாயநாதர் என்ற சிவபெருமான்மீது **கைலைக் கலம்பகம்** என்ற நூலொன்றைப் பாடி முடித்தார். ஓதாதுணர்ந்த இச்சிறுவர், பின்னர் பெற்றோரிடம் விடை பெற்றுக்கொண்டு, தலயாத்திரை செய்ய விரும்பி, வடக்கே

நோக்கிப் புறப்பட்டுத் திருப்பரங்குன்றம் வந்தடைந்தார். அடைந்த அவர் மதுரையில் கோவில்கொண்டுள்ள மீனாட்சியம்மையார்மீது மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் என்ற அரிய செய்யுள் நூலொன்றைப் பாடினார். கடவுளன்பு கனியப் பாடிய அவ்வரிய நூலைத் தம் அவையில் வந்து பாடி அரங்கேற்றல் வேண்டுமென்று, அக்காலை மதுரையை அரசு புரிந்து வந்த திருமலைநாயகர் புலவர்பெருமானிடம் வந்து கேட்டுக் கொண்டார். அவ்வழைப்பிற் கிணங்கி நாடோறும் அரசவை போந்து குமரகுருபரர் தம் நூலிலுள்ள ஒவ்வொரு செய்யுளையும் முறையாகப் பாடிப் பொருளுரைத்துவந்தார். * "தொடுக்குங் கடவுட் பழம்பாடல்" என்று தொடங்கும் ஒரு செய்யுளை இவர் பாடுவித்துப் பொருளுரைக்கும் நாள் வந்தது.

---

* தொடுக்குங் கடவுட் பழம்பாடற்
றொடையின் பயனே! நறைபழுத்த
துறைத்தீந் தமிழி னொழுகுநறுஞ்
சுவையே! அகந்தைக் கிழங்கையகழ்த்
தெடுக்குந் தொழும்ப ருளக்கோயிற்
கேற்றும் விளக்கே! வளர்சிமய
இமயப் பொருப்பில் விளையாடும்
இளமென் பிடியே! எறிதரங்கம்
உடுக்கும் புவனங் கடந்துநின்ற
வொருவன் றிருவுள் ளத்திலழ
கொழுக வெழுதிப் பார்த்திருக்கும்
உயிரோ வியமே! மதுகரம்வாய்
மடுக்குங் குழற்கா டேந்துமிள
வஞ்சிக் கொடியே! வருகவே!
மலயத் துவசன் பெற்றபெரு
வாழ்வே! வருக! வருகவே!

அன்று, மதுரை மீனாட்சி யம்மையாரே கோவிற் குருக்களொருவருடைய பெண் குழந்தையின் உருத்தாங்கி வந்து அரசன் மடியிலமர்ந்திருந்து செவியாரக் கேட்டு இன்புற்று மறைந்ததாக அறிஞர் கூறுவர். அதன்பிறகு, மதுரையிற் சிலநாள் தங்கி மீனாட்சியம்மை குறம், மீனாட்சியம்மை இரட்டை மணிமாலை, மதுரைக் கலம்பகம் என்ற நூல்களைப் பாடினார் நம் குமரகுருபரர். திருமலை நாயகரின் வேண்டுகோளுக் கிணங்கித் திருக்குறள் போன்ற நூல்களிற் காணப்படும் நீதிகளை யெல்லாம் தொகுத்து நீதிநெறி விளக்கம் என்ற சிறு நூலொன்றையும் பாடினார். அறிவுப் பெட்டகமாய் விளங்கும் அந்நூலின் அருமை பெருமைகளை உய்த்துணர்ந்த அரசன் பரிசுகள்பல வழங்கினான்; அரியநாயகபுரம் என்னும் சிற்றூர் ஒன்றையும் புலவர்பெருமானுக்கு முற்றூட்டாக உவந்தளித்தான்.

பின்னர் குமரகுருபரர் மதுரையை யகன்று, ஊர்கள் பலவுங் கடந்து சென்று சோணாட்டிலுள்ள சைவப் பெருமடமாகிய தருமபுர மடத்தை யடைந்தார். அக்காலை அம்மடத்திற்குத் தலைவரா யிருந்தார் மாசிலாமணிதேசிகர் என்ற கல்விக் கடலின் கரைகண்ட பெரியார். அவரைச் சென்றடைந்த குமரகுருபரர் அவரையே தம் ஞானாசிரியராகத் தேர்ந்து கொண்டார். ஆசிரியர் கட்டளையிட்ட வண்ணம் அவர் சிதம்பரம் என்ற திருப்பதி சென்று சில நாட்கள் தங்கி, மீண்டும் தருமபுரம் சேர்ந்தார். சேர்ந்தவர் தம் ஆசிரியர்மீது பண்டார மும்மணிக் கோவை என்னும் செய்யுணூலொன்றைப் பாடி. ஆசிரியர் முன்னிலையிலேயே அதனை அரங்கேற்றினார்; அதன்பின் சிலநாள் ஆசிரியருடன் தங்கியிருந்து முறையாகக் கல்வி பயின்றுவந்தார்.

இவ்வாறிருக்கையில், காசிக்குச் செல்லல் வேண்டுமென்று ஆசிரியரிடமிருந்து இவருக்குக் கட்டளை யொன்று பிறந்தது. அக்கட்டளையை உவந்தேற்றுக் கொண்டு உடனே காசிநகர் சென்றடைந்தார் குமரகுருபரர். இவர் ஆங்கு. காசிவிசுவநாதர்மீது காசிக்கலம்பகம் என்ற நூலொன்றைப் பாடி அவரை வணங்கினார். அதன்பின் அவ்வூரை யாண்டிருந்த முகம்மதியத் தலைவரைக் கண்டு உதவிகள் சில பெற இவர் விரும்பினார். ஆனால் அத்தலைவருடன் இந்துஸ்தானி மொழியிலன்றி உரையாடல் முடியாது என்று இவருக்குத் தெரிவிக்கப்பட்டது. இவர் உடனே அம்மொழியினமைப்பை விளக்கியருளல் வேண்டுமென்று கலைமகளை நோக்கி வேண்டிக்கொண்டு, சகலகலாவல்லி மாலை என்ற நூலைப் பாடினர். கலைமகளும் மனமுவந்து அம்மொழி நுட்பத்தை விளக்கியருளினளென்றும், முகம்மதியத் தலைவருடன் அம்மொழியிலேயே உரையாடி இவர் திருமடமொன்று கட்டுதற்கான நிலம், பொருள் முதலியவற்றைப் பெற்றாரென்றுங் கூறுவர். அக்காலை இவரால் கட்டப்பெற்ற குமார சுவாமி மடமும், கேதார நாதர் திருக்கோவிலும் இன்றுஞ் சிறப்புடன் திகழ்கின்றன.

குமரகுருபரர் அதன்பின் காசியைத் தமது இருப்பிடமாகத் தேர்ந்துகொண்டார். ஆயினும் தம் ஆசிரியரை மட்டும் நாடிச் சென்று வணங்குவதை இவர் மறந்துவிடவில்லை. மும்முறை காசியிலிருந்து தருமபுரம் வந்து ஆசிரியரை இவர் வணங்கிச் சென்றுள்ளார். இறுதியில் இப்பெரியார் காசியிலேயே இவ்வுலக வாழ்க்கையை நீத்தார்.

இவர் செய்த வேறு நூல்கள், திருவாரூர் நான்மணி மாலை, முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ், சிதம்பர மும்

மணிக்கோவை, சிதம்பரச் செய்யுட்கோவை, சிவகாமி யம்மை யிரட்டை மணிமாலை முதலியவாம்.

பயிற்சி

1. பழம்பதி, அர்ச்சகர், திறன், மூங்கை, பெருமான், ஓதா துணர்தல், தலயாத்திரை, கோவில் கொள்ளல், கனிதல், அவை, அரங்கேற்றல், புலவர் பெருமான், அழைப்பு, இணங்கல், செவியாரக் கேட்டல், பெட்டகம், அருமை பெருமை, உய்த்துணர்தல், பரிசு, முற்றூட்டு, மடம், ஆசிரியர், மனமுவத்தல்.
2. அரங்கேற்றுதலாவது என்ன?
3. க்-ங், ச்-ஞ், ட்-ண்—இவ்விவ்விரு வெழுத்துக்களும் மொழிகளில் உடன்கூடியே வருமென்பதற்குச் சில மொழிகள் சொல்லு.
4. குமரகுருபரரை ஒரு தெய்வத் தன்மை வாய்ந்த புலவர் என்னலாமா?

ரு. கதிரியின் வரலாறு

"மாணவர்களே! நீங்கள் கடிகாரங்களிற் பலவகைகளைப் பார்த்திருப்பீர்கள். அவற்றுள் ஒருவகைக் கடிகாரத்தின் முகத்தட்டின்மீதுள்ள எண்களைச் சுற்றி மைபோன்றதொன்று தடவப்பட்டிருப்பதையும் நீங்கள் பார்த்திருக்கக் கூடும். பகற்பொழுதிற் கறுப்பாகத் தோன்றும் அப்பொருள் இருளில் ஒளிவீசித் தன்னிடையுள்ள எண்ணைப் பளிச்சென்று எடுத்துக் காட்டுகின்றது. அப்பொருள்தான் நான். என்னை "ரேடியம்" என்று ஆங்கிலத்திலும், "கதிரி" என்று தமிழிலும் அழைப்பார்கள்.

"கறுப்பான ஒரு பொருள் என்றால், நீ என்ன இரும்பா ஈயமா, மண்ணா பொன்னா, நீரா நெருப்பா?" என்று நீங்கள் கேட்கலாம். நான் அவற்று ளொன்றுமன்று; ஆனால் அவை யெல்லாவற்றுள்ளும் நானிருக்கிறேன். நிலத்தை யகழ்ந்து எடுக்கப்படும் பொருள்க ளெல்லாவற்றுள்ளும் நான் கலந்திருக்கிறேன். பிரிக்க முடியாத மூலப்பொருள் என்று கருதப்படும் அணுவினுள்ளும் நான் அணுவாக இருக்கிறேன்.

"உன் வயதென்ன?" என்று நீங்கள் கேட்கலாம். என் வயது எனக்குந் தெரியாது. இவ்வுலகம் என்று படைக்கப் பட்டதோ அன்றுமுதல் நானும் தோன்றியிருக்கிறேன். நான் சிறிது காலத்திற்குமுன்வரை மண்ணினுட் கேட்பா ரற்றுக் கிடந்தேன். நிலக்கனிகள் என்று சொல்லப்படும் சுரங்கங்களி லிருந்து தோண்டி யெடுக்கப்படும் பொன், இரும்பு முதலிய கனிப்பொருள்களோடு நானும் அவ்வப் போது வெளிவந்ததுண்டு. ஆயினும், வந்த என்னை யாரும் இன்னனென்று அப்போதெல்லாம் தெரிந்துகொள்ளவில்லை. இவ்வாறு எத்துணையோ காலமாக மறைந்துகிடந்த என்னை வெளியில் இழுத்துவைத்தவர் ஹென்ரி பெக்கரல் என்ற பாரிஸ் நகரத்துப் பேராசிரியர் ஒருவர். இவர் தேர்ந்த ஆராய்ச்சியாளர். ஒரு பொருளை ஆராய்ந்து உண்மை கண்டு பிடிப்பதற்காக இவர் ஒரு சமயம் நிழற்படங்கள் சில எடுத்துக் கழுவிக்கொண்டிருந்தார். அவ்வாறு கழுவுகையில் அந் நிழற்படத் தட்டுக்களின்மேற் காணப்பட்ட சில மாறுதல் களைக்கொண்டு கதிரியாகிய நான் ஒருவன் இருக்கிறே னென்று கண்டுபிடித்துக் குறிப்பிட்டார். இக்குறிப்பையே அடிப்படையாகக் கொண்டு என்னை எப்படித் தனி

யாகப் பிரித்தெடுப்பது என்று பத்துப் பதினைந்தாண்டுகள் வரை உழைத்து வந்தார் ஓரம்மையார்.

அறிவியற்றுறையிற் சிறந்த அவ்வம்மையார் போலந்து நாட்டைச் சேர்ந்தவர். அவர் பெயர் மேரி. அவர் பாரீஸ்



மேரிகியூரி அம்மையார்

நகரை யடைந்து அங்குள்ள ஒரு கல்லூரித் தலைவராகிய பியரி கியூரியை மணந்துகொண்டார். ஆகையால் அவர் மேரீ கியூரி என்றழைக்கப்படுவாரானர். மணந்த கணவரின் சலியாத ஆதரவும் ஒத்துழைப்பும் பெற்று அவர் என்னைப்

பற்றிய ஆராய்ச்சி பலவற்றைத் தொடர்ந்து நடத்தினர். இறுதியில் என்னை நிலக்கனிகளிலிருந்து தனித்தும் வெட்டியெடுக்கக்கூடும் என்ற உண்மையை அவர் கண்டார்.

மேரி கியூரி அம்மையாருக்குப் பிறகு அவர்தம் பெண்ணாகிய ஜோலியட் கியூரி என்பாரும் இன்னும் அறிஞர்கள் பலரும் ஆராய்ச்சி நடத்தி என் உண்மைநிலையைக் கண்டு கொண்டனர். வேறு எப்பொருளின் உதவியுமின்றி யானே ஒளிவிடும் ஆற்றல் வாய்ந்துளே னென்றும், அதனனே மற்றெத்தகைய கனிப்பொருள்களையும்விட நான் சிறந்தவன் என்றும் இப்பொழுது உலகத்தார் ஒருவாறு கண்டு கொண்டனர்.

மேலும், நான் மூவகையான ஒளிக்கதிர்கள் வீச வல்லேனென்றும், அக்கதிர்கள் ஒன்றினென்று ஆற்றலிற் சிறந்தன வென்றும், அவை முறையே ஆல்பா, பீட்டா, காமா கதிர்கள் எனப் பெயர்படுமென்றும் அவர்கள் கண்டு பிடித்துக் கூறியுள்ளார்கள்.

என்னை மக்கள் இக்காலைப் பல்வேறு முறைகளிற் பயன்படுத்திக்கொள்கின்றனர். என்னைக் காற்றோடு கலக்கச் செய்து மின்சாரஞ் செலுத்தியாகப் பயன்படுத்துகின்றூர்கள். என்னைக் கூட்டுப் பொருள்கள் சிலவற்றோடு சேர்த்துத் தடவினுல் உயிர்க்குக் கேடுபயவாத வகையில் இருளினும் ஒளிவிசிப் பொருள்களைப் புலப்படுத்துவேன்; இவ்வண்ணம் நான் ஒளிவிடுவதை யுணர்ந்த அறிஞர் என்னை இப்பொழுது வானலூர்திப்போருக்குப் பயன்படுத்துகின்றனர்.

நான் பல நோய்களைத் தீர்க்கவல்லேனென்றும் மக்கள் கண்டுகொண்டனர். பிளவை என்று சொல்லப்படும் படு

நோயைத் தீர்க்க என்னைப் பயன்படுத்துகின்றனர். முடக்கு வாயுவினால் உடலிற் கரடு கட்டிக்கொள்ளும் பகுதிகளைக் கரைப்பதற்கு என் உதவியை நாடுகின்றனர். ஜெர்மனி, மலேயா முதலிய நாடுகளிலுள்ள சில குறிப்பிட்ட நீரூற்றுக்களில் மக்கள் நீராடினால் நோய்கள் பல நீங்கி உடல் நலம் பெறுவர் என்று கூறப்படுவது ஏன் தெரியுமா? நான் அவ் வூற்று நீர்களிற் கலந்து வெளிவருவதனாலேயேதான்.

என் அருமை பெருமைகளை இவ்வாறு நன்கு கண்டு கொண்ட மக்கள் என்னைப் பிரித்தெடுக்க இதுகாறும் முயன்று ஏறக்குறைய ஒரு தேங்காய்ப் பருமனளவே பிரித்தெடுத்துள்ளார்கள். ஆனாலும் இச்சிறு அளவிற்கு எடுப்பதற்கே அவர்கள் செலவழித்துள்ள தொகையோ பலகோடி ரூபாக்களாகும். இதனாலேயே என் உண்மைப் பெருமையை நீங்கள் உய்த்துணர்ந்துகொள்ளலாம்."

பயிற்சி

1. அகழ்தல், அணு, படைத்தல், கிலக்கனி, சுரங்கம், வெளியிவிழுத்தல், ஆராய்ச்சியாளர், நிழற்படம், அடிப்படை, அறிவியற்றுறை, ஒத்துழைப்பு, பயன்படுத்தல், முறை, கரடு.
2. கதிரியின் உண்மைத் தன்மையை உழைப்பெடுத்துக் கொண்டு கண்டறிந்தவர்கள் எவ்வெவர்கள்?
3. பொறுள், சிரிது, பிறிக்க, தோன்ரியிறுக்கிரேன், தெறியாது, குரிப்பு, சுறங்கம், சிரந்தவன், மாருதல்—இவற்றைத் திருத்தி யெழுது.
4. கதிரி என்பது என்னவென்று நீ யறிந்துகொண்டாய்? அதனால் மக்கட்கு உண்டாகும் நற்பயன்கள் யாவை?

௬. இராசேந்திர சோழன்

முற்காலத்தில் தமிழ்நாடு முப்பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அம்முப்பிரிவுகளையும் சேரர், சோழர், பாண்டியர் என்ற முடிமன்னர்கள் மூவர் வழிவழியாக ஆண்டு வந்தனர். சோழர்கள் ஆண்ட பெரும் பிரிவு சோழநாடு எனப் பெயர்பெற்றது. சோழ நாட்டை ஆண்ட சோழ அரசர்களில் மேன்மையுற்று விளங்கியோர் மிகப்பலர். அப்பலருள் இராசேந்திர சோழன் ஒருவன்.

இராசேந்திரன் கி. பி. பத்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அரசு செலுத்திய இராசராசசோழ மன்னனின் மகனுவன். இராசராச சோழன் தஞ்சைமாநகரின்கண் இராசராசேச்சுரம் என்ற பெரிய கோவிலைக் கட்டுவித்தவனுவன். அவன் மனைவிமார் பலருள், சிறப்புள்ள தந்திசத்திவிடங்கி என்ற பட்டத்தரசிக்கு மகனுக இராசேந்திரன் பிறந்தான்.

பெருமை வாய்ந்த தந்தைக்கேற்ற மகனே திறமை வாய்ந்த இராசேந்திரன். இளமைப் பருவத்திலேயே இவன் நூற்கல்வியும், அரசர்க்குரிய படைக்கலப் பயிற்சியும் நன்கு பெற்றிருந்தான். அதனுல், இவன் தந்தையின் கட்டளை பெற்றுப் பன்முறை போர்க்குச் சென்று, பல விடங்களில் வெற்றி பெற்று வந்தான். கீழைச் சாளுக்கிய நாட்டரசனை விமலாதித்தனைப் போரில் வென்று சிறைபிடித்து வந்தவன் இவனே.

தந்தை பிறந்தபின், இவன் அரியணை யேறிப் பாண்டிநாடு, சேர நாடு ஆகிய இரண்டு நாட்டு மன்னர்களையும் போரில் தோற்கடித்துப் பின், ஈழம் என்ற இலங்கைத் தீவின் மன்னனையும் வென்றுன். போரிற் பாண்டிநாட்டு

மன்னன் மணிமுடியினையும், ஈழநாட்டரசன் பொன்முடியினையும் இவன் கவர்ந்து வந்தமையால் இவனுக்கு முடிகொண்ட சோழன் என் ஒருபெயர் வாய்ந்தது. இம் மூன்று மன்னர்களையே யன்றி, இன்னும் மன்னர் பலருடன் பொருது வெற்றிகள் பல பெற்றமையின் பரகேசரி யென்ற பட்டப்பெய ரொன்றும் இவனுக்கு உரித்தாயிற்று.

இவ்வாறு இராசேந்திரன் தென்னாடு முழுவதையும் தன்னுடாக்கித் தனியரசு புரிந்தும், அவன் வடநாட்டினையும் வறிதே விட்டவனல்லன். இராயச்சூர் என்ற இடைத்துறை நாட்டையும், மனவாசி, கொள்ளிப்பாக்கை, மன்னைக்கடகம் (மாங்கிர் அல்லது மானியகேட்டா) என்ற வடநாட்டுப் பகுதிகளையும் அவன் போரிட்டுக் கவர்ந்தான். மேலைச் சாளுக்கிய அரசனை செயசிம்மனையும் அவன் எதிர்த்து வெற்றிகொண்டான்; அதன்பின், ஒட்டரநாட்டரசனை இந்திரனையும், வங்காளநாட்டு மன்னனை கோவிந்த சந்திரனையும் போரில் வென்றான்.

கீழை வங்காளத்திருந்த பாலர் வகுப்பினரின் அரசனை மகிபாலன் அச்சமயம் கங்கையைக் கடந்துவந்து, இராசேந்திரனை எதிர்த்ததுமன்றி, ஏளனமாகவும் பேசினான். அதனால் சினங்கொண்ட இராசேந்திரன் அவனைப் போரில் கடுமையாகத் தாக்கவே மகிபாலன் போருக்காற்றாது, புறங்காட்டி ஓடியும் இராசேந்திரன் விடாது பின்தொடர்ந்து, அவனைச் சிறையாகக் கைப்பற்றினான். சிறைப்பட்டவன் தலையில் ஒரு குடம் கங்கைநீரை வைத்து, அவனைத் தன் தலைநகருக்குக் கொண்டுவந்தமையாலேயே இராசேந்திரனுக்குக் கங்கைகொண்ட சோழன் என்ற மற்றொரு காரணப்பெயர் வழங்கலாயிற்று.


இனி, வடநாடுகளில் மட்டுமன்றி, பர்மா, சுமத்திரா, மாநக்கவாரத் தீவுகள் முதலியவற்றின்மீதும் படையெடுத்துச் சென்றான் இராசேந்திரன். கி. பி. ஆயிரத்து முப்பத்து மூன்றாம் ஆண்டில், இவன் சீன அரசன் அவைக்கு ஒரு தூது அனுப்பி வைத்ததாகச் சீனவரலாற்று நூல்கள் கூறுகின்றன.

இராசேந்திரன் தன் தந்தையைப் போலவே சிறந்த சிவ வழிபாடுடையவனாக இருந்தான். இவன் தன் தலைநகரைக் கங்கைகொண்டசோழபுரத்துக்கு மாற்றி, அங்குக் கங்கை கொண்ட சோழேச்சுரம் என்னும் சிவன் கோயில் ஒன்று கட்டுவித்தான். இவனால், கட்டப்பட்ட ஓர் அரசமாளிகையும் அங்கு உண்டு.

இவனுடைய அரசியல் முறைகளைப்பற்றிப் பலர் வியந்து கூறுவர். இவன் தமிழ்க் கல்வியறிவு நிறையப் பெற்றவனாதலின், இவன்பாற் புலவர்கள் பலர் சிறப்புற்று விளங்கினர். பெரியபுராணம் பாடிய சேக்கிழார் பெருமான் இவன் காலத்தவரே என்று கூறுவாருமுளர். இவன் தந்தை இராசராசனைப் போலவே இவனுந் தனிப் புகழ்பெற்று விளங்கினான். இவனுக்குப்பின், இவன் மகன் இராசாதிராசன் அரசனானான்.

பயிற்சி

1. வழிவழி, பட்டத்தரசி, படைக்கலம், அரியணை, மணிமுடி தனியரசு, வறிது, புறங்காட்டுதல், வரலாற்று நூல்கள், வழிபாடு, தலைநகர், மாளிகை, அரசியல் முறை.
2. இராசேந்திரன் பெற்ற வேறு பெயர்களும், அவை ஒவ்வொன்றுக்கும் காரணமும் எவை?
3. த்-ந், ப்-ம், ற்-ன்-இவ்வினவெழுத்துக்கள் ஒன்றேடொன்று சேர்ந்தே வருமென்பதற்கு உதாரணங்கள் காட்டு.
4. இராசேந்திரனோடு பொருது தோல்வியுற்றவர்கள் எவ்வெவர்?



எ. ஆறு!

(கும்மி)

கல்லும் மலையுங் குதித்துவந்தேன்—பெருங்
காடும் செடியும் கடந்து வந்தேன்.
எல்லை விரிந்த சமவெளியெங்கும்—நான்
இறங்கித் தவழ்ந்து தவழ்ந்து வந்தேன். (க)

கட்டும் அணையேறிச் சாடிவந்தேன்—அதன்
கண்ணறை தோறும் நுழைந்து வந்தேன்.
திட்டுத் திடர்களும் சுற்றிவந்தேன்—மடைச்
சிப்புகள் மோதித் திறந்து வந்தேன். (உ)

காயும் நிலத்தழல் ஆற்றிவந்தேன்—அதில்
கண்குளி ரப்பயிர் கண்டு வந்தேன்.
ஆயும் மலர்ப்பொழில் செய்துவந்தேன்—அங்கென்
ஆசைதீர விளை யாடி வந்தேன். (ந)

ஏறாத மேடுகள் ஏறிவந்தேன்—பல
ஏரி குளங்கள் நிரப்பி வந்தேன்.

ஊறாத ஊற்றிலும் உட்புகுந்தேன்—மணல்
ஓடைகள் பொங்கிட ஓடி வந்தேன். (௪)
ஆயிரம் காலால் நடந்துவந்தேன்—நன்செய்
அத்தனையும் சுற்றிப் பார்த்து வந்தேன்.
நேயமுறப் புன்செய்க் காட்டினிலும்—அங்கங்கு
நீரை இறைத்து நெடுக வந்தேன். (௫)

பஞ்சையரைத்து நால் நூற்றுவந்தேன்—சீனி
பாக மாகச்செய்து கொடுத்து வந்தேன்.
நெஞ்சம் உலர்ந்த நெடுநகரிற்—குழாய்
நீராக வும்சென்று பாய்ந்து வந்தேன். (௬)

மாங்கனி தேங்கனி வாரிவந்தேன்—நல்ல
வாச மலர்களும் அள்ளி வந்தேன்.
தீங்கரும் பாயிரம் தள்ளிவந்தேன்—மிகத்
தேனும் தினையுமே சேர்த்து வந்தேன். (௭)

அல்லும் பகலும் அலைந்துவந்தேன்—எங்கள்
ஆழி இறைவனைக் காணவந்தேன்.
நில்லும் எனக்கினி நேரமில்லை—இன்னும்
நீண்ட வழிபோக வேண்டு மம்மா! (௮)

—தேசிக விநாயகம் பிள்ளை.

பயிற்சி

1. சாடுதல், கண்ணறை, திட்டுத்திடர், மடைச்சிப்பு, அழலாற்றுதல், கண்குளிர்தல், ஏருதமேடு, ஊறுதஊற்று, நன்செய், புன்செய், பொழில்செய்தல், வாசமலர், தீங்கரும்பு, ஆழி, இறைவன்.
2. பஞ்சை யரைத்து நால் நூற்று வந்தேன், ஆழி இறைவனைக் காணவந்தேன்—இவற்றால் குறிப்பிக்கப்பட்டவை எவை?

3. இகர உகர வீற்று வினையெச்சங்கட்கு நன்னான்கு உதாரணங்கள் காட்டு.

4. ஆறு மக்கட்குச் செய்யும் நன்மைகள் யாவை ?

அ. உடற்பயிற்சி

எல்லாம்வல்ல இறைவனால் நமக்குக் கொடுக்கப்பட்ட இவ் வுடலானது மிக வியக்கத்தக்கதோர் இயந்திரமாகும். இது மக்களால் உண்டாக்கப்பட்ட இயந்திரங்களைப் போன்று இருந்த இருப்பிலே இருக்கக்கூடியதன்று. இதன்கண் இறைவனால் அமைக்கப்பட்ட உயிர்க்குணம் என்னும் ஆற்றலினாலே இஃது யாதாமொரு செயலை மேற்கொண்டவண்ணமாக இருப்பதே இதன் இயற்கையாம். அவ்வாறிருந்தும் சிலர் அறியாமையினாலே இதனைச் சோம்பலென்ற தீய பழக்கத்திற்கு ஆளாக்கித் துன்புறச் செய்கின்றனர். மற்றுஞ் சிலர் படித்தல், எழுதுதல், ஆள்கள் பலரை வைத்து வேலைவாங்குதல் முதலிய தொழில்கள் காரணமாக, தம் உடற்கு உழைப்புக் கொடுத்தலின்றி, நோய்வாய்ப்பட்டுத் துன்புறுகின்றனர். கையாளப்படாத பண்டமும் பயன்படுத்தப் படாத இயந்திரமும் நாளடைவில் பாழ்படுமாறு போல, உழைப்பில்லாத உடல் நாளடைவில் நோய்க்காளாவது திண்ணம். ஆகவே, தொழில்முறையில் உடற்கு உழைப்புக் கொடுக்க வியலாத மாணவர்கட்கும், ஆசிரியர்கட்கும், அதிகாரிகட்கும், பணக்காரர்கட்கும் உழைப்பினை யுண்டாக்கும் உடற்பயிற்சி மிக இன்றியமையாததாகும்.

இவ்வுடற்பயிற்சியானது விளையாட்டு, பெருநடை, ஓட்டம், சிலம்பம், மற்போர், "தண்டால்", "பஸ்கி" போன்ற கசரிப்பயிற்சி எனப் பலவகைப்படும். இவற்

றுள் விளையாட்டும், ஓட்டமும் மாணவர்கட்கு மிக இன்றியமையா உடற்பயிற்சிகளாம். சிறுவர்களாகிய மாணவர்கள் அனைவரும் இயல்பாகவே ஓடுதலிலும், குதித்தலிலும், விளையாடுதலிலும், மிகுதியும் விருப்பமுடையவர்களா யிருப்பது யாவரும் அறிந்ததே. மாணவர்கள் ஆசிரியர்களால் கட்டாயப் படுத்தப்பட்டுக் "கவாத்து", "கசரத்" முதலிய உடற்பயிற்சிகளை மேற்கொள்வதைவிட விருப்பம்போல் விளையாடுவதும்



புரொபெசர் இராமமூர்த்தி

ஓடுவதுமே பெரும்பாலும் நன்மை பயப்பதாகும். வயது வந்த பெரியோர்கள் சிலம்பம், மற்போர் முதலியவற்றை மேற்கொள்ளல் நலமாம்.

பொதுவாக உடற்பயிற்சி காற்றோட்டமான இடங்களிலேயே செய்யப்படுதல் வேண்டும். எனினும், நமது நாட்டில்

வெயிற் கொடுமை மிக்கிருப்பதால், பெரும்பான்மையான உடற் பயிற்சிகள் அடக்கமான இடங்களிலேயே செய்யப்படு கின்றன. மேலும், நமது நாட்டு விளையாட்டுக்களிற் பல, வீட்டளவில் நிற்பதும் இதனாலேயே என்று எண்ணக் கிடக்கின்றது. குளிர்மிகுந்த மேனாட்டில், மக்கள் விளை யாடும் விளையாட்டுக்களிற் பல, திறந்தவெளிகளில் விளையாடப் படுமாறும், உடற்பயிற்சிகள் காற்றோட்டமான இடங்களிற் செய்யப்படுமாறும் கூர்ந்து சிந்திக்க வேண்டியனவாம். கடல் நீரிலே தோய்ந்துவரும் கடற்காற்று மக்கள் வாழ்க்கைக்கு மிக இன்றியமையாத தொன்றாகும். அது கருதியே, மேனாட்டார் தம் விளையாட்டிடங்களைக் கடற்கரையினை யடுத்து அமைத்துக்கொள்ளப் பெரிதும் விரும்புகின்றனர். விளையாடுவதிலும் ஓடுவதே நன்கு மூச்சை விட்டு வாங்குதற் குரியதாக அமைந்துள்ளது. அதனாலேயே மேனாட்டாரின் விளையாட்டுக்களிற் பலவற்றினிடத்தே ஓட்டமே மிகுதி யும் சிறந்து காணப்படும். இவற்றையெல்லாம் நோக்கு மிடத்து, சீட்டாடல், பம்பரமாடல், கோலியாடல் முதலியன பயிற்சி யாகா வென்பது தெளிவாகும். ஆகையால் இவ்வாட் டங்களை விடுத்து உழைப்புமிக்க விளையாட்டுக்களையே மாண வர்கள் மேற்கொள்ளல் வேண்டும்.

"உடம்பார் அழியின் உயிரார் அழிவர்," என்ற முது மொழியை மக்களாய்ப் பிறந்த ஒவ்வொருவரும் எண்ணிப் பார்த்து, உடற்பயிற்சியாலே உடலைப் போற்றி உயர்வடை தல் வேண்டும். பயிற்சியில்லா உடல் பருத்துக்கொழுத்தோ, சிறுத்து இளைத்தோ பல நோய்களுக்கு இடமாகின்றது. பருத்த உடலினை யுடையார் பலர், நல்ல உடற்பயிற்சி இல்லாமையாலே, உடலில் வலுவில்லாதவர்களாய் சிறு வேலை செய்யவும் இயலாமல், மூச்சு விரைந்தோடப்

பெற்றுக் களைப்பினை யடைகின்றனர். அவர்களால் நன்கு மூச்சுவிட்டு வாங்க இயலாமையாலே, இரத்த வோட்டம் உடலிற் குறையத் தொடங்குகிறது. அதனால், உடலில் உண்டாகும் நச்சுநீர், நன்கு வெளிப்படுதலின்றிச் செந்நீராகிய இரத்தத்தில் கலந்து பலவகையான நோய்களை யுண்டாக்குகின்றது. நோய் மிகப்பெற்ற ஒருவன் எவ்வளவு செல்வமும் சிறப்பும் கொண்டிருந்தாலும், அவற்றால் உண்மையான நற்பயன் ஒன்றையும் எய்தான். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வமன்றோ? பொதுவாக, உணவுக்குத் தக்க உழைப்பு வேண்டும்; உழைப்பாகிய உடற்பயிற்சியாலே சுறுசுறுப்பு, வலிமை, மகிழ்ச்சி, அழகு, நீண்ட வாழ்நாள் முதலியன உண்டாம்.

"கல்விக்கும் உடற்பயிற்சிக்கும் தொடர்பேதுமில்லை என யான் முன்னர்த் தவறாகக் கருதியிருந்தேன். அறிவு வளர்ச்சி விரும்புவோன் பாடுபட்டுப் படிக்க வேண்டியது எவ்வளவு இன்றியமையாததோ, அவ்வளவு இன்றியமையாததே உடற்பயிற்சி அவ்வறிவுவளர்ச்சிக்கும். இளமையில் உடற்பயிற்சியில் ஈடுபடாததால் எனக்கு உண்டான கேட்டையும் நான் இப்பொழுதுதான் நன்கு உணருகிறேன்" என்று காந்தியடிகள் கூறியுள்ளமை போற்றற்பாற்றும்.

இனி, பெண்மக்களும் தமக்கேற்ற முறையில் உடற்பயிற்சியினையோ, அன்றி விளையாட்டினையோ மேற்கொள்ளுதலும் வேண்டற்பாலதாம். ஆகலின், பெண்மக்களும் தக்கதொரு முறையிலே உடற்பயிற்சியை மேற்கொண்டு, நோயின்றி வலுவோடுகூடிய மக்கள் பலரைப் பெற்றெடுக்க வேண்டுவதும் பெரிதும் விரும்பப்படுவதாம். உடல்வலியுள்ள இளைஞர்களே பின்னர் வீரர்களாய் விளங்குவர். உடல் நலமும் ஆற்றலுங்

கொண்ட இளைஞர்களாலேயே ஒரு நாடு முன்னணிக்கு வரும். இவை அறிஞர்கள் கண்ட அரிய உண்மைகளாம்.

நந்நாட்டு உடற் பயிற்சிகளாகிய 'தண்டால்', 'பஸ்கி,' 'கசரத்', மற்போர் முதலிய மிகச் சிறந்தன என்பதனை அண்மையில் கலியுகவீமன் எனப் பெயர் வாங்கிய புரோபேசர் இராமமூர்த்தி என்னும் பெரியாரால் நாம் நன்கு உணரலாம். அவர் பொதுமக்களால் செய்ய முடியாத காரியங்களாகிய விரைந்து செலுத்தும் மோட்டாரினை நிறுத்துதல், மார்மீது யானையினை ஏறிச் செல்ல விடுதல், பெரும்பாறையினை ஏற்றிவைத்துக்கொள்ளுதல் முதலிய அரிய செயல்கள் பலவற்றைச் செய்தார். மேலும், அவர் மேனாடு, கீழ் நாடுகளில் உள்ள மல்லர் பலரோடும் மற்போர் புரிந்து வெற்றிகொண்டார். அவர் புகழ் உலகெங்கும் பரவி மக்கள் பலரும் அவரைக் கொண்டாடினார்கள். ஆதலான், நந்நாட்டு உடற் பயிற்சிகளும் முறையாக்கைக்கொள்ளப் பட்டால் பெரிதும் பயன் தரும் என்பது இப்பெரியார் செயலாற் பெறப்படுகிறதன்றோ?

பயிற்சி

1. இருந்த இருப்பு, உயிர்க்குணம், ஆளாக்குதல், கையாளுதல், தொழின் முறை, முன்னணி, அரியசெயல், வெற்றி பெறப் படுதல்.
2. 'கலியுக வீமன்' என்று சொல்லப்படுவார் எவர், என்?
3. வன்றொடர், மென்றொடர், இடைத்தொடர்க் குற்றியலுகரங் கட்கு உதாரணங்கள் கொடு.
4. விளையாட்டுக்களிற் சிறந்தது எதுவென்று உனக்குத் தோன்றுகிறது? காரணங்கள் காட்டு.

௩. வீர மகளிர்

௧. அல்லி

தென்பாண்டி நாட்டிலே, தென்மதுரையில், சித்திராங்கத பாண்டியன் என்ற அரசனொருவன் முன்னொரு காலத்தில் அரசு புரிந்துவந்தான். அவனுக்குப் பிள்ளையில்லை. அவனுடைய பங்காளிகளாயிருந்தோர் பலருக்கும் பிள்ளை யில்லாமலே இருந்தது. ஆகவே, அவன் தன் பங்காளிகளுடன் புறப்பட்டுக் கானகமடைந்து மகப்பேறு கருதித் தவங்கிடப்பதென முடிவு செய்துகொண்டான். அம்முடிபிற் கேற்ப நாட்டை விட்டுப் புறப்படுமுன், அரண்மனையில் ஏவற் பெண்ணாயிருந்தா ளொருத்தியின் மகனை நீன்முகன் என்பானிடம் அரசாட்சியை ஒப்புவித்து, அவன் புறப்பட்டுச் சென்றான்.

தன் பங்காளிகளுடன் இவ்வாறு கானகமடைந்த பாண்டியன், பலநாள் கடுமையாகத் தவங்கிடந்து வந்தான். அவன் தவங் கிடந்த இடத்திற்கருகில் அல்லிக்கேணி யொன்றிருந்தது. அவ் அல்லிக்கேணியிற் படர்ந்திருந்த அல்லி இலைகளொன்றின்மீது ஒருநாள் அவன் பெண்மகவொன்று கிடந்து அழக்கண்டான். கண்டவன் களிப்பெய்தியவனாய், அதனை வாரி யெடுத்து உச்சிமோந்து தன் உறவினர்களிடம் தூக்கிச் சென்று, "கடவுள் அருள் சுரந்துவிட்டார்; பாண்டியன் குலந்தழைக்க இக்குலக்கொடி அகப்பட்டிருக்கிறாள். அல்லிநாப்பண் தோன்றிய இவளை அல்லி யென்றே அழைப்போம்." என்று கூறினான். அவ்வுறவினர்களும் கடவுளருளால் கிடைத்த அக் குழந்தையை உவந்தேற்றுக் கொண்டாட, சித்திராங்கதன் குழந்தையோடு அவர்களையுமழைத்துக்கொண்டு மதுரைக்குத் திரும்பினான்.

ஆனால் இவ்வாறு அவன் திரும்புவதற்குள், அவன் சார்பாக அரசாண்டுவந்த நீன்முகன் நாட்டைத் தனதாக்கிக் கொண்டான்; பல்வகைத்தான சூழ்ச்சிகளைச் செய்து, காடு சென்ற பாண்டியன் திரும்பிவந்து நாட்டினுள் அடிவைப்பதற்கும் வகையில்லாத ஒரு நிலைமையை யுண்டுபண்ணிவிட்டான்.



ஆகவே, அவனை நம்பி அரசிழந்த பாண்டியன் தன் உறவினருடன் சோழநாட்டை அடைந்து குடிமக்களைப்போல நாட் கழித்து வந்தான். எனினும், குழந்தை அல்லியைமட்டும் அரச பதவிக்குரிய வகையில் பாராட்டிச் சீராட்டி வளர்த்து

வருவாளாயினள். அல்லியும் கல்விகேள்விகள் நிறைந்து போர் முறைகளிலும் தேர்ந்த பயிற்சியுற்று ஆண்மை மிகுந்த அரசிளஞ் செல்வியாய்த் திகழ்ந்தாள். பின், அவள் தக்க பருவமெய்தியவுடன், தன்னுடைய வரலாற்றினைத் தந்தையார்பாற் கேட்டறிந்து சினமிக்குப் போர்க்கோலங் கொண்டு மதுரைமீது படை திரட்டிச் சென்றாள்; சென்று நீன்முகனைப் போருக்கிழுத்து வென்று அவனையுங் கொன்று மதுரைக்கு அரசியானாள்.

மகாபாரத காலத்தில் தென்னாட்டில் தனியரசு ஓச்சிய இப் பெண்ணரசியின் ஆட்சியின்கீழ் நாடு பல்வளனும் பல நலனும் பெற்றுச் செழித்திருந்தது; பருவ மழை பொய்யாமற் பெய்துவந்தது; உழவு, வாணிபம், கைத்தொழில், கல்வி முதலிய யாவும் சிறப்புற்று ஓங்கின; வறுமை, கொடுமை என்பன தலைகாட்டா தொழிந்தன; உள்நாட்டுக் குறும்பரும் அயல்நாட்டுப் பகைவரும் அல்லி யென்ற பெயரைக் கேட்டாலும் அஞ்சி நடுங்குவாராயினர்.

இவ்வாறு பலவகையிலும் திறம்பட அரசாட்சியை நடத்திவந்த அல்லியின் புகழ் வடநாட்டிலுஞ் சென்று பரவுவதாயிற்று. ஆண்மக்களெல்லாரும் அரசாளு வகைதெரியாமல் அடித்துப் பிடித்துக் கொண்டிருக்கிற காலம் அக்காலம்; அத்தகைய காலத்தில், பெண்மக்களையே மந்திரத் துணைவராகக் கொண்டு நாட்டில் ஒரு பெரும்பகுதியை எழில்மிக்க ஓர் இளவரசி அரசுசெய்துவருகின்றாள் என்பது கேட்டவர்க்கெல்லாம் வியப்பாக விருந்தது. அழகிலும் ஆண்மையிலும் விற்போரிலுந் தனக்கு நிகரில்லை யென்று பெயர் பெற்றிருந்த **அர்ச்சுனன்** என்ற பாண்டவன் காதிற்கும் அல்லியின் புகழ் எட்டிற்று. அவன் உடனே புறப்பட்டு மதுரையை யடைந்து,


கண்ணன் உதவியைக் கொண்டு பல சூழ்ச்சிகளைச் செய்து, அல்லியை மணம் புரிந்துகொண்டான். ஆனால், அவ்வாறு மணம் புரிவதற்குள் அவன் அல்லியிடம் பட்ட பாடு பெரும் பாடாகும். ஆணிலழகனை வில்விஜயனும் அருச்சுனனையுந் திகைத்து மலைக்க வைத்த அல்லியின் ஆண்மையே ஆண்மை!

உ. போடீஷியா்

கிறித்து பிறந்த முதல்நூற்றாண்டில் இங்கிலாந்தின் பெரும்பகுதி இத்தாலிநாட்டு உரோமர் ஆட்சியின்கீழ் இருந்துவந்தது. நார்போக் என்று இக்காலை அழைக்கப் பெறும் ஐஸ்நி என்ற ஒரு பகுதிமட்டும் போடீஷியா என்ற ஆங்கில மங்கை யொருத்தியின் ஆட்சியிலிருந்தது. இம் மங்கையும் அல்லியைப்போன்று அஞ்சாநெஞ்சு படைத்த வள்; ஆண்மை மிக்கவள்; அறிவிற் சிறந்தவள். உரோமர்கள் தம் ஆட்சிக்குட்பட்ட நாடுகளைக் கொடுமையாக நடத்தி வருவதை இவள் வெறுத்தாள். அவர்கள் கட்டாய வரி வாங்குவதும், நிலங்களையும் பொருள்களையும் வற்புறுத்திப் பறிமுதல் செய்வதும், குடிமக்களைக் கொள்ளையடித்துப் பொருள் திரட்டுவதும் ஆங்கிலக் குடிமக்களுக்கே பிடிக்கவில்லை என்பதை இவள் அறிவாள். அதனால், உறுமீன் வருமளவும் வாடியிருக்குங் கொக்கைப்போன்று, உரோமராட்சியிலிருந்து இங்கிலாந்தை மீட்க ஏற்றகாலம் பார்த்துக் காத்திருந்தாள்.

இந்நிலையில் சுடோனியஸ் பாலினஸ் என்ற உரோம் நாட்டுப் பெருமக னொருவன் இங்கிலாந்தின் தலைவனாக வந்துசேர்ந்தான். இவன் ஈவிரக்கமற்றவன்; அதிகார வெறிபிடித்தவன்; எப்படியாவது ஐஸ்நிப் பகுதியையும் உரோமர் ஆட்சிக்குக் கீழ்ப்படுத்த வேண்டுமென்ற நோக்கங் கொண்டவன். கொண்ட நோக்கத்தை

நிறைவேற்றக் கருதி, இவன் திடீரென ஐஸ்நியைத் தாக்கி பொடீஷியாவையும் அவள் தம் பெண்மக்களையும் அடித்துத் துன்புறுத்தினன். இதுகண்ட பொடீஷியா அடங்கா வெகுளிகொண்டு, உரோமரை ஊரைவிட்டு உடனே எப்படியும் ஓட்டிவிடுவது என்ற முடிவிற்கு வந்தாள்.



அது கருதி, அவள் இங்கிலாந்தின் தென் பகுதியிலிருந்த மக்களையெல்லாம் தன்வசப் படுத்திக்கொண்டாள். உரோமர் கொடுங்கோலாட்சியை வெறுத்திருந்த ஆங்கிலக் குடிமக்களும் பேருவகையோடு பொடீஷியாவின்பக்கல் சேர்ந்தனர்.


குடிமக்களின் ஆதரவை இவ்வாறு பெற்ற பொடீஷியா உடனே இலண்டன் நகரைத் தீக்கிரை யாக்குமாறு கட்டளை

யிட்டாள். மேலும், எழுபதினாயிரம் உரோமர்களும், அவர் பக்கஞ் சேர்ந்திருந்த ஆங்கிலேயர்களும் கொலை செய்யப் பட்டுச் செந்நீர் வெள்ளம் புரண்டோடுமாறும் செய்தனள். இச் செய்தி உரோம் நகரத்திற்கு எட்டவே, அங்கிருந்து எண்ணிறந்த தேர்ந்த உரோம் வீரர்கள் வந்து புரட்சிக்காரர் களை வன்மையுடன் தாக்க, பொடீஷியாவை உள்ளிட்ட ஆங்கி லேயர்கள் உரோமர்களை எதிர்க்க வியலாது பின்வாங்கினர். தோல்வி உறுதி என்று கண்டுகொண்டாள் வீரமங்கை. உடனே போர்க்களத்தில், உரோமர்படைகளுக்கு எதிரே சென்று நின்று, “ இரக்கமற்றவர்களே ! வஞ்சகர்களே ! இறு மாப்புக் கொண்டவர்களே ! நாங்கள் இன்று தோல்வியுற்றாலும் நாளை உங்களைக் கடவுள் ஒறுக்காது விடார். அழிவும் மானக்கேடும் உங்களுக்கே! தோல்வியுற்றாலும் எல்லா உலக மும் அதிகாரமும் எங்களுக்கே!” என்று வீரமொழி பகர்ந்து தன் கையிலிருந்த நஞ்சூட்டிய ஈட்டியைத் தன் மார்பிற் பாய்ச்சிக்கொண் டிறந்தாள். இங்கிலாந்திலிருந்த உரோமரா திக்கம் அதுமுதற் குறையத் தொடங்கிச் சில காலத்திற் குள் ஒழிந்தது.

ந. ஜோன் டி ஆர்க்

பதினைந்தாம் நூற்றாண்டில் பிரான்சு நாட்டின் வட பகுதி ஆங்கிலேயர் ஆட்சிக்குட்பட்டிருந்தது. தென்பகுதி யிலோ பிரான்சுக்காரருக்குள்ளேயே பல கட்சிப் பிளவுகள் ஏற்பட்டிருந்தன. அவர்களுட் பெரும்பான்மையோர் ஆங்கி லேயரின் சார்பாகவே யிருந்தனர். பிரான்சு அரசனாகவிருந்த சார்ல்ஸ் என்பவன் சோம்பேறியாகவும் நாட்டின்மீது பற்றுங் கவலையும் அற்றவனாகவு மிருந்ததே இந்நிலைமைக்குத் தலையாய காரணமாகும்.

இந் நிலைமை கண்ட ஆங்கிலேயர் 1429-ஆம் ஆண்டில் பிரான்சுக்காரருக்குரிய ஆர்லியன்ஸ் நகரை முற்றுகையிட்டனர். அம் முற்றுகையில் ஆங்கிலேயர் வெற்றிபெறின்



அக்நாடு முழுதும் அவர்கள் கைப்படுவது திண்ணம். ஆங்கிலேயர் கொண்ட இந்நோக்கம் எதிர்பாராத வகையில் ஒரு பெண்மணியின் வீரச்செயலாற் றடைப்பட்டது. அப் பெண் மணியே ஜோன் டி ஆர்க் என்பவள்.

ஜோன் டி ஆர்க் பிரான்சுநாட்டில் டாம்ரீமி என்னும் சிற்றூரின்கண் பிறந்தவள்; அவள் ஆடுமாடு மேய்க்குமோ ரேழை மகள். ஆனால், இளமையிலிருந்தே அவளுக்குக் கடவுட்பற்றும் நாட்டுப்பற்றும் மிகுந்திருந்தன. பிரான்சின் வடபகுதி பகைவரிடமிருந்து மீண்டு என்று தன்னரசு பெறுமோ வென்பதே அவளுக்குப் பெருங் கவலை. “ பகையைக் கெடுத்து நாட்டை மீட்டு நலம்பெறச் செய்வது நின் கடனே.” என்று வானினின்றும் ஒரு கட்டளை தன் காதில் விழுவதாக அவளுக்குப் பன்முறை தோற்றியதுண்டு.

இத்தகைய உள்ளப்பான்மைகொண்ட ஜோன் ஒரு நாள் தன் ஆட்டு மந்தையை வழக்கம்போல் புல்வெளியில் மேயவிட்டுப் பார்த்துக்கொண்டிருந்தாள். அப்படி யிருக்கையில் ஆர்லியன்ஸ்நகரை ஆங்கிலேயர் முற்றுகையிட்டுள்ள செய்தி வழிப்போக்கர்களால் அவள் காதுக் கெட்டிற்று. ஜோன் உடனே பதைபதைத்துத் துடிதுடித்து, ‘பகையைக் கெடுப்பேன், நாட்டைக் காப்பேன்!’ என்று உரத்துப் பலகாற் கூவினள். இதைக் கேட்டோர் யாவரும், ‘ இவள் பித்துப் பிடித்தவள் ’ என எண்ணி நகைத்துச் சென்றனர்.

இரண்டொரு நாட்களுக்குள் ஜோன் ஓட்டமும்நடையுமாகச் சென்று, பிரான்சு அரசனைக் கண்டு, “ ஆர்லியன்ஸ் நகரை ஆங்கிலேயர் முற்றுகையிட்டிருக்கின்றமை உமக்குத் தெரியுமே; நாட்டை மீட்கக் கடவுள் எனக்குக் கட்டளையளித்திருக்கின்றார்: யான் போர்முனைக்குச் சென்றால் வெற்றி நமதே; வெற்றிபெற்று யானே உமக்கு ரீம்ஸ் நகரில் முடிசூட்டுவேன்; யான் உடனே போர்வீரர்களுடன் புறப்படவேண்டும்”, என்று மருளுற்றவள்போன்று உதடு துடிக்க உரத்துக் கூறினள்.

அரசனும் அவளைப் பைத்தியக்காரி யென்றே முதலில் எண்ணினன்; பிறகு அவளுடைய அஞ்சா நெஞ்சையும், அழுத்தமான மொழிகளையும், வீரம்பொலியும் முகக் குறிப்பையும் நோக்கி நீளநினைந்தான்; நினைந்து ஒருவாறு உளந் தேறி அவள் தலைமையில் படையொன்று திரண்டு செல்லுமாறு கட்டளையிட்டான். ஜோன் ஓராண் போர்வீரனுக்குரிய உடை தரித்துத் தனக்கெனச் செய்த ஒரு கொடியுடன் படைத்தலைவியாய்ப் புறப்பட்டு விரைந்து சென்று ஆங்கிலேய சேனையைத் தாக்கினள். போர்க்களத்தில் அவள் காட்டிய வீரம் எதிரிகளாலும் புகழப்பட்டது. போரில் எதிரிகள் விட்ட அம்புகளிலொன்று ஜோனின் மார்பிற்றுக்கிப் புதைபட்டது. அதனை யுடனே பிடுங்கி யெறிந்துவிட்டு, அப்புண்ணைப் பொருட்படுத்தாமலே, சற்றும் பின்வாங்காது அவள் போரை முன்னின்று நடத்தினள். இவ்வாறு இரண்டு நாட்கள் அவள் கடும்போர் புரிந்து பகைவரைப் புறங்காட்டியோடச் செய்தாள்.

அதனோடு நிற்காமல் ஜோன் மேலும் மேலும் ஆங்கிலேயரைப் பலவிடங்களில் தாக்கித் தோற்றோடச் செய்து, கடைசியாகத் தன் கோரிக்கைப்படியே ரீம்ஸ் நகரில் அரசனுக்கு முடியுஞ் சூட்டிவைத்தாள். ஆங்கிலேயர் போரில் ஜோனுக்குப் பலவகையிலும் கொடுமை யிழைத்தாராயினும் அவளைத் தெய்வமாதென்றே கொண்டனர். ஆனல் பிரான்சுக்காரர்களிற் பலர் அவளை அவ்வாறு தெய்வமாதெனக் கொள்ள இசைந்திலர். பிரான்சு நாட்டுக் குருமார்கள் அவளைத் தெய்வப் பற்றற்றவள், சமயக் கோடரி, கருமாயக்காரி என்றெல்லாம் பழித்துக் கூறினர்; இன்னும் அவளை அதற்கு மேலும் உயிருடன் விட்டுவைத்தால் தெய்வம் சீறுதல் உறுதி யென்றும் அரசனுக்கு எடுத்துரைத்தனர்

இறுதியில், நாட்டுப்பற்றுக்கொண்டு தன்னுயிரையும் வெறுத்துப் போர்முனை சென்று பேராண்மை காட்டிய ஜோன் சிறைப்படுத்தப்பட்டுத் தீக்கிரையாக்கப்பட்டாள்.

பயிற்சி

1. தவங்கிடத்தல், கேணி, மகவு,குல்க்கொடி, நாப்பண், போருக்கிழுத்தல், பருவமழை, தலைகாட்டல், குறும்பர், ஆணிலழகன், உறுமீன், ஈவிரக்கம், அதிகாரவெறி, புரட்சி, இறுமாப்பு, வீரமொழி, ஆதிக்கம், தன்னரசு, உள்ளப்பான்மை, மருள், பொருட்படுத்தல், கோரிக்கை,
2. நீன்முகன், சுடோனியஸ் பாலினஸ், சார்ல்ஸ்-இவர்கள் ஒவ்வொருவரைப் பற்றியும் உனக்கென்ன தெரியும்?
3. (a) உயிர்த்தொடர், நெடித்தொடர்க் குற்றுகரங்கட்கு உதாரணங்கள் காட்டு.

   (b) அது, இது - குற்றியலுகரமா? ஏன்?
4. அல்லி, பொடீஷியா, ஜோன்-இவர்கள் ஒவ்வொருவரைப் பற்றியும் நன்னான்கு வாக்கியங்கள் எழுது.





௧௦. பெண்கள் வீரம்

மீனுண் கொக்கின் றூவி யன்ன
வானரைக் கூந்தன் முதியோள் சிறுவன்
களிறெறிந்து பட்டன னென்னு முவகை
ஈன்ற ஞான்றினும் பெரிதே கண்ணீர்
நோன்கழை துயல்வரும் வெதிரத்து
வான்பெயத் தூங்கிய சிதரினும் பலவே.

—பூங்கணுத்திரையார்





"மீனுண் . . . பலவே"

[இதன் பொருள்]

மீன்களைப் பிடித்துண்ணும் கொக்கின் வெண்மையான சிறகுகளைப் போன்ற வெள்ளிய நரைத்த கூந்தலோடு கூடிய கிழவி பொருந்தி அக்காலத்தே இருந்தாள். அவள் மிகுந்த நாட்டுப்பற்றுக் கொண்டவளாய்த் தன் சிறுமகனைத் தன் நாட்டு அரசன் நிகழ்த்திய போரொன்றிற்கு அனுப்பியிருந்தாள். அவன் அப்போரில், களிற்றின்மீது அமர்ந்து வந்த எதிரிவீரன் ஒருவனை எதிர்த்து அக் களிற்றினைக் கொன்றான். அவ்வளவில் களிற்றின்மீதிருந்த வீரன் கீழே குதித்து அச் சிறுமகன் மார்பில் அம்பொன்றெய்து கொன்று விட்டனன். அச் செய்தி உடனே அக் கிழவிக்குத் தெரிவிக்கப்பட்டது. அதனைக் கேட்ட கிழவி சிறுவனின் தறுகண்மையை யெண்ணி அவனைப் பெற்றெடுத்த காலத்தினுண்டாய மகிழ்ச்சியினும், மிகப் பெரிதாக மகிழ்ந்து கண்ணீர் பெருக்கினாள். அம் மகிழ்வுக்கண்ணீர்த் துளிகளோ பெரிய மூங்கிற்புதர்கள் வானுற வளர்ந்து தொங்கும் மலைக்கண்ணே பெய்யத் தொடங்கிய மழைத்துளிகளினும் பலவாகக் காணப்பட்டன.

பயிற்சி

1. வால்நரை, களிறெறிதல், படுதல், ஈன்றஞான்று, கழை, துயல்வருதல், தூங்குதல், சிதர்.
2. தூவியன்ன வானரைக் கூந்தல், நோன்கழை துயல்வரும் வெதிரம் - இவற்றை விளக்கு.
3. பொருள் இடம் காலம் சினை குணம் தொழில்-இவ்வறுவகைப் பெயர்கட்கும் உதாரணங்கள் எடுத்துக் காட்டு.
4. முதியோளின் வீரத்தன்மையை எடுத்துக் காட்டு.


கக. உணவுறுப்புக்கள்

உண்ணும் உணவைச் செரிப்பிக்கும் உறுப்புக்களில் முதன்மையானவை வாயும், இரைப்பையும், குடர்களுமாம். பேருறுப்புக்களாய இவ் வொவ்வொன்றின்கண்ணும் உள்ளுறுப்புக்கள் பலவுள. இவ்வுறுப்புக்கள் உண்ட உணவைச் செரிப்பிக்கச் செய்யும் வேலைகள் யாவை?

உணவு வாய்க்குள் சென்றவுடனே ஆங்குள்ள பற்களால் மெல்லப்பட்டு மாவாக அரைக்கப்படுகின்றது. வாயில் உண்டாகும் உமிழ்நீர் ஆங்கே அவ்வுணவுடன் கலக்கின்றது. உமிழ்நீரானது உணவிலுள்ள கஞ்சிப்பசையைச் சர்க்கரையாக மாற்றுவதாகும். நாம் உண்ணும் உணவு நன்றாகப் பற்களால் மென்று அரைக்கப்பட்டும், நாவினால் நிரம்ப உமிழ்நீர் சேர்க்கப்பட்டும் இருத்தல் உடல்நலத்திற்கு இன்றியமையாததாகும். வாயின்கண் நடைபெறவேண்டிய இவ்வேலைகளிற் குறைவு நேரின் வயிற்றின்கண் உணவு செவ்வையாகச் செரிக்கப்படமாட்டாது. ஆகையால் உண்ணும் உணவை விரைவென்பதில்லாமல் மெதுவாகவே உட்கொள்ளல் வேண்டும்.

வாயினின்றும் உணவு தொண்டையின்வழிச் சென்று வயிற்றிற்குள் ளிருக்கும் இரைப்பையைச் சேர்கின்றது. இரைப்பையின் சுவர்கள் உணவு செல்வதற்குமுன் ஒன்றோடொன்று ஒட்டிக்கொண் டிருக்கும். உணவு செல்லச்செல்ல அவை விரிந்து அதனை ஏற்றுக்கொள்ளும். இரைப்பையானது வயிற்றுக்கு இடப்பக்கத்தில் கல்லீரலை வலமாகக்கொண்டு நிற்கின்றது. இரைப்பைக்கு இரண்டு வாயில்களுள: ஒன்று மேற்புறத்திலமைந்து தொண்டைவழி வரும் உணவை உட்செலுத்துகின்றது; மற்றொன்று அதன் கூர்மையாகிய வலப்

பக்கத்திலமைந்து அதனினின்றும் உணவைக் குடர்களுக்குச் செலுத்துகின்றது. இரைப்பையின் சுவரமைப்பு மூன்று பகுதிகளையுடையது ; பக்க உறுப்புக்கள் ஊறுபடாதபடி



இரைப்பையின் மேற்பகுதி மெல்லிய தோலால் மூடப்பட்டிருக்கின்றது ; அதன் நடுப்பகுதி நார்போன்ற சதைப் பற்றுக்கொண்டது ; உட்பகுதி சளிபோன்ற பசைப்பற்றுக் கொண்டது.

இரைப்பைச் சுவரின் நடுவுறுப்பானது உணவுப்பொருள்களைக் கீழ்மேலாகவும் வலமிடமாகவும் அடித்துத் தள்ளுகின்றது. பசைப்பற்றுக்கொண்ட உட்பகுதியின்கண் இருவகையான புளிப்பு நீர்களைச் சொரியும் சிற்சிறு பைகள் காணப்படுகின்றன. சில்லிகள் போன்றும், புள்ளிகள் போன்று முள்ள இவை உணவுப்பொருள்களைச் செரிப்பிக்க உதவுகின்றன. உணவு செரிக்காமல் மக்கள் நோயடையும்போது வைத்தியர்கள் இந்நீர்கள் போன்ற மருந்துகளைக் கொடுத்து உணவைச் செரிக்கும்படி செய்கின்றார்கள். மக்கள் இவ்வாறு அடிக்கடி நோயடைந்து மருந்தருந்துவது தவறு. ஏனெனின், இப்படிச் செய்தால் இரைப்பை சோம்பலுறும்; வரவா அந் நீர்களைத் தன்னிடமுண்டாக்கிக் கொள்ளுஞ் செயலும் அதற்கு அற்றுப் போய் விடும். இதைப்போன்றே மற்றெவ் வுறுப்பும் ஏற்ற வேலையின்றேல் சோம்பலுறுவ தியற்கை. ஆகையினால் உடலின்கண்ணுள்ள ஒவ்வோருறுப்பும் தன்தன் வேலையைத் தானே செய்து முடித்துக்கொள்ளத்தக்க நிலையில் ஊறுபாடறாதபடி வலிவு பெற்றிருக்குமாறு வைத்துக்கொள்ள வேண்டியது மக்கட்கு இன்றியமையாத கடமையாகும்.

வாயினின்றும் உணவுடன் கலந்துவந்த உமிழ்நீரானது இரைப்பையிற் சேர்ந்தபோதுதான் அஃது உணவைச் சர்க்கரைப் பொருளாக மாற்றுகின்றது. உமிழ்நீரின் வேலை முடிந்த பிறகே மேற்சொன்ன இருபுளிப்பு நீர்களும் சேர்ந்துமுறையே முன்னும் பின்னுமாகத் தனித்தனியே தம் வேலைகளைச் செய்கின்றன. ஆகவே, உமிழ்நீரும், இருவகைப் புளிப்புநீர்களும் ஆகிய மூன்றும் வேலைசெய்தபிறகே உணவுப் பொருள்கள் சரிவரச் செரிப்பிக்கப்பட்டுக் குடர்களுக்குச் செல்லும் பக்கு

வத்தை யடைகின்றன. இவ்வாறு பக்குவப்படுத்தப்பட்ட அவை இரைப்பையினிடமிருந்து சிறிது சிறிதாகவும், இடைவிட்டும் குடர்க்குள் முற்றும் சென்றுவிடுகின்றன.

நமது உணவில் மூவகைச் சத்துப் பொருள்கள் சேர்ந்திருக்கின்றன: அவை முட்டையின் வெண்கரு போன்றதும், சர்க்கரை போன்றதும், கொழுப்புப் போன்றதுமாம். முதலது முற்றும் இரைப்பையின்கண்ணேயே செரிப்பிக்கப்பட்டு விடுகின்றது; இரண்டாமது அதன்கண் அரைகுறையாகவே செரிப்பிக்கப்படுகிறது; மூன்றாமதோ அங்குச் செரிப்பிக்கப் படாமலேயே நின்றுவிடுகின்றது. பாலேடு போன்ற இக்கொழுப்பு இரைப்பையிலிருந்து மிதந்துகொண்டே குடருக்கு வந்துசேர்கின்றது; இஃது இங்கேதான் செரிப்பிக்கப்படல் வேண்டும்.

குடரோ வளையங்களாலாகிய நீண்ட குழாய் போன்றதொன்று; இஃது இருபத்தைந்தடிச் சிறுமையும் முப்பதடிப் பெருமையுங் கொண்டது. குடர் தனக்கேற்பட்ட வேலையைச் செய்து முடிக்க நெடுநேரம் ஆகுமென்பதை அதன் நீட்சியே தெரிவிக்கின்றது. அரைகுறையாய்ச் செரிப்பிக்கப்பட்டு வந்த உணவை முற்றச் செரிப்பிக்கச்செய்யவும், அதனை உடலுக்கு உதவியாகும்படி பதப்படுத்தவும், அவ்வாறு உதவியாகாத சக்கையை வெளியே தள்ளிவிடவும் குடர் ஒன்று அல்லது ஒன்றரைநாள் வேலைசெய்யவேண்டியிருக்கின்றது.

இரைப்பைச்சுவர்போன்றே குடர்ச்சுவரும் மூன்று பகுதிகளையுடையது. நடுப்பகுதி சிறிது சதைப்பற்றுக் கொண்டது. இதன் வேலை உணவைப் புரட்டிக் கொடுப்பதன்று; அதனைச் சிறிது சிறிதாகக் கீழே தள்ளிக் கொடுப்பதே. இவ்வாறு குடரின்கண் உணவு தள்ளப்

படுங்கா லுண்டாகும் ஓசையை நாம் சில நேரங்களில் சிறிது கேட்கலாம். செவ்வனே செரிக்கப்படாத உணவு குடருக்குள் செல்லின் இவ்வோசை மிக்குக் கேட்கப்படும். அப்போதுதான் குடர் நோயடைந்துள்ளதென்று நாம் சொல்லுகின்றோம்.

குடர்ச்சுவரின் பசைப்பற்றுள்ள மூன்றாவதாகிய உள் ளுறுப்பே ஆங்குச் சிறந்த வேலை செய்கின்றது. இவ்வுறுப் பின்கண்ணே தனிப்பட்ட சொரிநீர்ப்பைகள் பலவுள. அவை-களிற் சிறந்தது **கணையம்** என்று சொல்லப்படுகின்றது. இது முதுகெலும்புள்ள எல்லாவுயிர்களிடத்தும் காணப்படும். இது நால்வகையான புளிப்புநீர்களைக் குடரிற் கொட்டு கின்றது. இந்நீர்களில் ஒன்றே உணவிலுள்ள கொழுப்புப் பொருளைச் செரிப்பிக்கின்றது. உணவு செரிப்பிக்கப்படும் தொழில் கணையத்தினாலேயே முடிவடைகின்றது. கணைய மின்றேல் உணவுச் செரிப்புக் குறைவடைந்து உடல் ஊறு படவேண்டியதே.

குடர்க்குள் இக்கணையம் நீர்சொரிகின்ற அதே இடத் தில் கல்லீரலும் தனது சொரிநீராகிய பித்தநீரைக் கொட்டு கின்றது. இப்பித்த நீர்ச் சுரப்பிற் சிக்க லுண்டாகும்போது மக்கள் மயக்கநோயால் வருந்துகின்றனர். இந்நீர் கொழுப்புப் பொருளைச் சிற்சிறு துளிகளாகப் பிரித்துக்கொடுத்துக் கணை யத்தின் வேலைக்கு உதவிசெய்கின்றது. பித்த நீரும் மற்றைச் சொரிநீர்களும் உணவின்கண் காணப்படும் நச்சுப் பூச்சிகளைக் கொன்றுவிடுகின்றன. ஆகவே கல்லீரலும் இரைப்பையும் நன்னிலையில் இருக்குமானல் உணவின்கட் கலந்துவரும் நச்சுப்பூச்சிகளால் நமக்கு ஒருவகையிலும் ஊறுபாடு நேரா தென்பது திண்ணம்.

உடலுக்குள் உணவு செல்வதும், அஃது அங்கே பக்குவமாக்கப்படுவதும் எற்றுக்கோ? அதனை உடல் உட்கொண்டு உறுதி பெறுவதற்கன்றோ! இவ்வுணவை உடலுக்கு உண்மையில் ஊட்டுவது எஃதெனின், குடர்ச்சுவரின் பசைப்பற்றுள்ள உள்ளுறுப்பே. இவ்வுறுப்புக்கண்ணுள்ள கணக்கற்ற சிற்றறைகள், குடர்க்கண் பக்குவப்பட்டு நிற்கும் நீர் வடிவான உணவைத் தாம் உட்கொண்டு சேர்த்துவைத்துக் கொள்கின்றன. பின்னர் ஆங்குவந்து புகும் கணக்கற்ற மயிர்க்குழாய்களின் மூலம் அவை அவ்வுணவைச் செலுத்திவிடுகின்றன. இக்குழாய்கள் அவ்வுணவை உடலெங்குங் கொண்டுபோய் ஆங்காங்குள்ள உறுப்புக்களுக்கு ஊட்டுகின்றன. எனினும், கொழுப்பு நீருணவை மட்டும் குடர்ச் சிற்றறைகள் மயிர்க்குழாய்களுக்குள் செலுத்துவதில்லை. தனிப்பட்ட வேறு பாற்குழாய்கள் அக்கொழுப்பு நீருணவை ஏற்றுக்கொண்டுபோய்க் கண்டத்தின்கண்ணுள்ள வடிகுழாய்களிற் செலுத்திவிடுகின்றன. இவ்வாறு கொழுப்பு நீர் செந்நீர்க்குள் தனிப்பட்ட முறையில் ஏன் செல்லவேண்டுமென்பதை எவரும் அறியார்.

மக்கள் தத்தம் உடற்கூறுபாட்டிற்குத் தக்கபடி உடலிற் செரிக்கத்தக்க உணவையே உட்கொள்ளல்வேண்டும். சிலர் வாய்க்குணவையே யன்றி உடற்குணவை உண்பதில்லை. உணவைச் சிறந்ததாகவும் அளவானதாகவும் உண்ணுமல் கண்டபடி கூட்டியோ குறைத்தோ உண்பது உடலுக்கு ஊறுபாட்டினையே தரும். செரிக்காத உணவுகொள்வது பட்டினி கிடப்பது போலாம்; ஏனெனின், அவ்வுணவு உடலால் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை யாகையினாலேயே. மேலும் அத்தகைய உணவினால் உடலுறுப்புக்கள் வீணாக வேலைசெய்ய வேண்டியிருப்பதால் அவை நாளுக்குநாள் நலிந்துவிடும்.

உணவு மிகுந்தாலும் குறைந்தாலும் உடலுக்கு நோய் செய்யும்; அருந்திய உணவு அறவே செரித்த பின்னர் உண்பவனுக்கு மருந்தென்கின்ற தொன்று மிகையாகும்; அவ்வாறு உண்பவன் அளவறிந்துண்பானாயின் அவன் நெடுநாள் வாழ்வான்; உணவு அறச் செரித்துவிட்டமை பசியெடுத்தலால் அறியலாமாதலால், ஒருவன் நன்றாய்ப் பசித்த பிறகே மாறுபாடில்லாத உணவை உட்கொள்ள வேண்டும்; பேருண்டி கொள்பவன் பெருநோயடைவான்—என்ற இவ்வுண்மைகள் திருவள்ளுவ நாயனாரின் வாக்குக்கள். இவை நன்கு போற்றப்படின், உடலுறுப்புக்கள் நோயடையாமல் வேலை செய்ய, மக்கள் நிறைநாட் பெற்றுக் குறைவற்று வாழ்வர் என்பது திண்ணம்.

பயிற்சி

1. உடல்நலம், ஊறுபாடு, பதப்படுதல், தனிப்பட்ட, உடற்கூறுபாடு, மாறுபாடு, போற்றப்படுதல், நிறைநாள்.
2. i. குடர் இருபத்தைந்தடிச் சிறுமையும், முப்பதடிப் பெருமையுங் கொண்டது.

   ii. சிலர் வாய்க்குணவையே யன்றி உடற்குணவை யுண்பதில்லை.—இவற்றை விளக்கு.
3. உமிழ்நீரானது உணவிலுள்ள கஞ்சிப்பசையைச் சர்க்கரையாக மாற்றுகின்றது—இதனை இரண்டு வாக்கியங்களாகப் பிரித்தெழுது.
4. உணவு உடலில் எங்கெங்கே எவ்வெவ்வாறு செரிப்பிக்கப் படுகின்றது?

கஉ. தஞ்சைப் பெருங்கோவில்

தஞ்சை,
15—11—1937


அன்பார்ந்த நண்ப!

நலம்; நலமே கேட்க விழைகின்றேன். நேற்றிரவு திருச்சியைவிட்டுப் புறப்பட்டு இன்றுகாலை இவ்விடம் வந்து சேர்ந்தேன். சோழநாட்டுத் தலைநகராய் ஒரு காலத்தில் மிளிர்ந்த இவ்வூரைப் பார்க்கவேண்டும் என்ற ஆவல் எனக்கு நெடுநாளாக இருந்துவந்தது. எல்லாம்வல்ல இறைவனருளால் அஃது இன்று ஒருவாறு தீர்ந்தது.

தஞ்சாவூர் என்று இவ்வூருக்குப் பெயர் வருவானேன் என்று நீ கேட்கலாம். ஆவூர் என்பது இவ்வூரின் பண்டைப் பெயர். இதை முன்னொரு காலத்தில் தஞ்சன் என்ற அசுரன் ஒருவன் ஆண்டு வந்தானாம்; அவனைத் திருமால் நீலமேகப் பெருமாள் என்ற பெயருடன் வந்து போரிட்டுக் கொன்றாராம்; அவன் இறக்குந்தருவாயில் தன் பெயராலேயே இவ்வூ ரழைக்கப்படல்வேண்டுமென்று கேட்டுக் கொண்டானாம். அதனாலே தஞ்சன் + ஆவூர்—தஞ்சாவூர் என்று பெயர் வழங்கிவருவதாக அறிஞர் கூறுவர்.

ஊரின் தென்மேற்குப்புறத்தே கண்ணைக் கவரும் வகையிற் சிறந்த வேலைப்பா டமைந்த கோவிலொன்றுள்ளது. இது பிரகதீசுரர் ஆலயம் என்று வழங்குகிறது. இந்திய நாட்டிலுள்ள பெருங்கோவில்கள் சிலவற்றுள் ஒன்றாகக் கருதப் படுவது இக்கோவில். இதனைச் சூழ்ந்து கோட்டை யொன்றும் அகழொன்றும் உள்ளன. கோட்டையைச் சிவகங்கைக் கோட்டை என்று ஊரார் அழைக்கின்றனர். கோவிலின் வடபுறம் சிவகங்கைத் தோட்டமும் குளமுங் காணப்படும்.

கி. பி. பதினோராம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அரசு புரிந்துவந்த இராசராசன் என்ற சோழன், இக்கோவிலைக் கி. பி. 1010-ஆம் ஆண்டில் தொடங்கி ஆறு ஆண்டு



களிற் கட்டிமுடித்தான். அவன் பெயராலேயே இக்கோவில் இராசராசேச்சுரம் என்று முதலில் அழைக்கப்பட்டுவந்தது. கோவில்கொண்டுள்ள பெருமானைப் பெருவுடையார் என்றும் அம்மையைப் பெரியநாயகி என்றும் அவ்வரசன் அழைத்துக் கொண்டாடினனும்.

கோவிலின் வாயிற்கோபுரம் தொண்ணூறடி உயரமுள்ளது. அதன்வழி யுட்சென்றால் பெரிய முற்றமொன்று காணப்படும். அம்முற்றம், பதினெட்டாவது நூற்றாண்டினிறுதியில் பிரெஞ்சுக்காரருக்கும் ஆங்கிலேயருக்கும் முறையே போர்க்கருவிச்சாலையாக இருந்துவந்ததாம். அம்முற்றத்தைக் கடந்துசென்றால் அழகு பொருந்திய உட்கோபுரம் ஒன்று காணப்படும். அதனுட் சென்றால் அங்கு மற்றொரு பெரியமுற்ற முண்டு. அம்முற்றம் ஏறக்குறைய ஐந்நூறடி நீளமும் இருநூற்றைம்பதடி யகலமுங் கொண்டதாய்ப் பாவுகற்கள் பரப்பப் பெற்றுள்ளது. அதன் நாற்புறமும் சுற்று மாளிகைகள் கட்டப்பட்டுள்ளன. மடைப்பள்ளி, பண்டசாலை, உணவுச்சாலை, வேள்விச்சாலை முதலியனவும் இதன்கண் கட்டப்பட்டுள்ளன. மேற்புறத்திலும் வடபுறத்திலும் சிவலிங்கங்கள் பல காணப்படும். மதிற்சுவரில் சிவபெருமானின் அறுபத்துநான்கு திருவிளையாடல்களை விளக்கும் ஓவியங்கள் தீட்டப்பெற்றுள்ளன.

இம்முற்றத்தின் மேற்புறத்தில், கோவில் மிக அழகாக அமைந்துள்ளது. கர்ப்பக்கிரகம் என்னும் கருவீட்டில் சிவபெருமான் இலிங்க வடிவிற் பேருருவினராய் அமைந்துள்ளார். பெருவுடையார் என்ற பெயர் பொருத்தமான பெயரே என்பது இலிங்கத்தைக் கண்டால் தெரியவரும். அர்த்தமண்டபம், மகாமண்டபம், தாபன மண்டபம், நர்த்தன மண்டபம், வாத்திய மண்டபம் என்ற ஐந்து மண்டபங்கள் இக் கோவிலின் மற்றைப் பகுதிகளாகும். இக் கோவிலுக்கு மூன்று வாயில்களுண்டு. கேரளாந்தகன், இராசராசன், திருஅணுக்கன் என்று அம்மூன்று வாயில்களும் முறையே அழைக்கப்படுகின்றன. இவ்வாயில்களின் வெளிச் சுவரை

யழகுசெய்துநிற்கும் வாயிற்காவலராகிய துவாரபாலகர்களின் சிலைகள் வீரஞ்செறிந்து பேருருவினவாய்ப் பொலிகின்றன. அவை ஒவ்வொன்றின் உயரம் பதினெட்டடியும், அகலம் எட்டடியுமென்றால் அவற்றின் பெருமையை நீயே ஊகித்துக்கொள்ளலாம்.

கோவிலின் கருவீட்டின்மே லமைந்துள்ளது அழகிலும் தொழிற்பாட்டிலுஞ் சிறந்ததொரு கோபுரம். இக் கோபுரமே பண்டைத் தமிழ்மக்களின் சிற்ப ஓவியக் கலைகளுக்கு எடுத்துக்காட்டாக இலங்குவதாகும். இதன் உயரம் 216 அடி; இது பதினன்குமாடங்கள் கொண்டது. நாற்பட்டை வடிவினதாய் அமைந்துள்ள இக்கோபுரத்தின் உச்சியில் இருபத்தைந்தரையடிச் சதுரங்கொண்ட பெருங் கருங்கல்லொன்று ஏற்றப்பட்டுள்ளது. அக் கருங்கல்லின் நான்கு மூலைகளிலும், ஆறரையடி நீளமும் ஐந்தரையடியகலமுமுள்ள நான்கு நந்திச் சிலைகள் மூலைக்கொன்றாக நிறுத்தப்பட்டுள்ளன. இக்காட்சி மிகவும் வியக்கத்தக்கதொரு காட்சியாம். ஏறக்குறைய எண்பது டன் எடையுள்ள அப்பெரிய கல்லைப் பொறிவசதியில்லாத அக்காலத்தில் எவ்வாறு 216 அடியுயரம் ஏற்றச் செய்தார்கள் என்பது பொறித்துறை வல்லார்க்கே திகைப்பைத் தருவதொன்றாம். தஞ்சாவூரின் வடகிழக்கில் நான்கு கல் தொலைவிலுள்ள சாரப்பள்ளம் என்ற ஊரிலிருந்து அக் கல்லைச் சாய்வாகச் சாரங்கட்டிக் கோபுரத்தி னுச்சிக்கு ஏற்றி வந்ததாகச் சொல்லப்படுகிறது.

இனி, இக்கல்லின் மேற்கொடுங்கை எண்கோண வடிவினதா யமைந்து அழகுற விளங்குகிறது. அதனுச்சியிலுள்ள பொற்கலசம் பன்னிரண்டரை அடி யுயரமுள்ளது. அஃது இருநூற்று முப்பத்தைந்து இராத்தல் எடையுள்ள செம்பி

ளுற் செய்யப்பட்டு, முப்பத்தைந்து இராத்தல் கொண்ட பொற்றகட்டினுல் மூடப்பட்டுள்ளது.

அழகும் தொழிற்பாடும் சிறந்து விளங்கும் இக் கோவி லின் வடமேற்கு மூலையில் முருகன் கோவிலொன்று சிற்றுரு வினதாய் அணிசெய்து நிற்கிறது. இச் சிறு கோவில் பிற் காலத்தே வந்த நாயக்கமன்னர்களில் ஒருவராற் கட்டப்பட்ட தாகச் சொல்லப்படுகிறது.

இனி, கோவிலின் எதிரே மிகப் பெரிய நந்தி யொன் றுண்டு. இச்சிலை ஒவ்வொருவருங் கண்டு மகிழவேண்டிய தொன்ருகும். இது பத்தொன்பதரையடி நீளமும், எட் டரையடி அகலமும், பன்னிரண்டடி உயரமும் உள்ளதாய் ஒரே கல்லிற் சமைக்கப் பட்டதாகச் சொல்லப்படுகிறது. இதன் நிறை இருபத்தைந்து டன்களாம். இதனைச் செய்வ தற்குத் தேர்ந்துகொள்ளப்பட்ட கல் வடக்கேயுள்ள நருமதை யாற்றுப் படுகையிலிருந்து கொண்டுவரப்பட்டதாம். வட இந்தியாவிலுள்ள இந்துப்பூரைச் சேர்ந்த லீபட்சி என்னும் ஊரிலுள்ள கோவிலி லிருக்கும் நந்திச்சிலையொன்றே இதை விடப் பெரியதாம்.

புகழ்மிகும் இக்கோவிலைக் கட்டுவித்த இராசராசனுக்குக் கோவில் கட்டுங்கால் உடனிருந்து உதவியவர் கருவூர்த் தேவர் என்ற பெரியார் ஒருவர். அவருக்கும் இக்கோவிலின் பின் புறத்தேயுள்ள ஒரு வேப்ப மரத்தடியிற் கோவிலொன்று கட்டப்பட்டுள்ளது.

தமிழ்க் கலைக்கும், பண்டைத் தமிழர் நாகரிகத்திற்கும் மறுக்கொணுச் சான்று பகர்ந்து நிற்கும் இத்தஞ்சைக் கோவிலை, நீயும் ஒருமுறை வந்து நேரிற் கண்டு களிப்புற வேண்டு மென்று கருதியே இத்துணை விரிவாக எழுதினேன். நானே

நான் குடந்தைநகர் செல்கிறேன். அங்கிருந்து சிதம்பரம் போய் ஊர் திரும்புவேன். மற்றவை நேரில்.

இங்ஙனம்,
உன்னருமை நண்பன்,
சி. குமரவேள்.


பயிற்சி

1. விழைதல், வேள்விச்சாலை, கர்ப்பக்கிரகம், துவாரபாலகர் கருவீடு, தொழிற்பாடு, பொறித்துறை, சாரம், கொடுங்கை, படுகை, சான்றுபகர்தல்.
2. தஞ்சைக் கோவிலின் நந்தியைப்பற்றி உனக்கு என்ன தெரியும்?
3. ஒன்றன்பால், பலவின்பாற் பெயர்களுக்கு உதாரணங்கள் காட்டு.
4. தமிழ்நாட்டுச் சிற்பிகளின் வியத்தகுதிறமை எவ்வாறு விளங்குகின்றது?

கரு. முதுகுரங்கின் முறையீடு

பொற்புறு மாந்தர்காள் போற்றிக் கேண்மின்!
கற்பொலி சோலைவாழ் கானவன் யானே,
எனினு மெனைவே றென்றெண் ணுதீர்;
பனிமொழி கொண்டியான் பகர்வேன் கேளீர்!
விலங்கென வென்னை விலக்கிவைத் துள்ளீர்;
விலங்கலாத் தன்மை விளக்குவேன் பாரீர்!
ஈர்புறப் பார்வை யென்னிட மில்லை,
பார்முகம் பாரேன், நேர்முகம் பார்ப்பேன்;
கூர்ஞ்செவிச் செல்வங் கொண்டா ருண்டோ?

யார்தாம் பெற்றார், யாதாம் பெற்றன ?
என்னை நாற்கா லுயிரென் றதீர்!
முன்னங் காலே துன்னுங் கைகள் !
பற்றுதல் செய்வேன், பறித்தல் செய்வேன்,
ஏற்றுதல் செய்வேன், ஏந்துதல் செய்வேன்;



எதுசெய் தாலு மிமைப்பிற் செய்வேன்;
இதுபோது மென்று இரேன்யா னேய்ந்து;
எண்ணிய வுடனே நண்ணுஞ் செயலே,
பண்ணிய தொன்றைப் பார்த்தறப் பண்ணுவேன்.
நினைவற லென்பதென் கனவிலு மில்லை;
இனையன வல்லா வின்னுங் கேளீர்!

பன்னிய வீருருள் பகட்டா யுருட்டுவேன்,
துன்னூசி கோப்பேன், தொடுமுடி யவிழ்ப்பேன்,
தச்சர் வேலையு மெச்சச் செய்வேன்,
அச்சமொன் றின்றி யாட்டுவேன் தொட்டில்.
இன்னுஞ் சொல்வேன் என்றன் தன்மை:
இன்னலி விரக்க மின்னல் களைதல்,
திட்டுதல் புகழ்தல் தெரிந்து கொள்ளுதல்,
நட்டா ரன்பு நாடுதல், சோதனை
பார்த்தா ராய்தல் பலவுஞ் செய்வேன்;
பார்த்திவை யெல்லாம் பகர்விர்யான் விலங்கோ?
கான்வரு விராமன் கட்டிய அணையும்,
கோனெனும் விஜயன் கொடும்போர் வென்றதும்,
என்னு லென்றே யெவரு மறிவீர்!
பன்னிப் பன்னிப் பகர்வதென்? மற்றும்
உயர்ந்தவோ ருண்மை உரைக்குவன் கேளீர்!
உயர்மதி டார்வின் உயிருட லாய்ந்து
கண்டவோ ருண்மை மண்டல மறியுமே:
மக்க ளெல்லா மந்தியின் மக்களே;
தொக்க வுடல்கள் தோன்றலெவ் வாறெனின்,
ஒன்றினின் றொன்று வுருவெடுப் பதுவே.
புன்புல் முதலா மன்னுயி ரீரு
இன்ன வாறே இயங்கிடு மென்று
மணிவா சகரும் வாய்மலர்ந் தருளினர்;
துணிவுடன் யானுந் தோன்றச் சொன்னேன்.
மதிகொடு மதித்திதில் மன்னிய திறத்தை
விதிகொடு வோர்ந்து வெறுப்பினை யகற்றுமின்!

விலங்கென வென்னை விலக்குத லொழிமின்!
துலங்குறு கேளெனத் துன்னுமி னென்னை;
இருதிறத் தவரும் இன்புட னட்பும்
மருவி வாழ மனம்வீழ்ந் துள்ளேன்;
ஆழிசூழ் புவியி லகன்று
வாழி வாழியென் வழிவரு மக்காள்!

பயிற்சி

1. பொற்பு, பனிமொழி, செவிச்செல்வம், நினைவறல், ஈருருள், துன்னூசி, இன்னல்களைதல், வாய்மலர்தல், கேள், மனம் வீழ்தல், ஆழி.
2. டார்வினைப்பற்றி உனக்கென்ன தெரியும்?
3. எண்ணியவுடனே நண்ணுஞ் செயலே-இதனை விளக்கு. இதில் எழுவாய் பயனிலைகள் எவை? 'உடனே' என்பதனை நீக்கிப் பொருள் கெடாதபடி வேறு சொல்வைத்துக் காட்டு.
4. தான் மனித வினத்தைச் சேர்ந்ததே யென்பதற்குக் குரங்கு சொல்லும் நியாயங்கள் எவை?

கசு. செடிகொடிச் சித்தர்

பிள்ளைகளே! செடிகொடிச் சித்தர் என்ற பெயரைக் கேட்டவுடன் உங்களுக்குத் தமிழ்நாட்டுப் பதினெண் சித்தர்களின் நினைவு எழக்கூடும். அச் சித்தர்கள் பச்சிலைகளினாற் பலநோய்கள் தீர்த்தார்கள்; மண்ணைப் பொன்னாக்கினார்கள்; சுவையற்ற பொருள்களை இன்சுவைப் பொருளாக மாற்றினார்கள்; இன்னும் இவைபோன்ற பல விந்தைகளை யியற்றி அக்கால மக்களை இறும்பூதடையச் செய்தனர். இச் செடிகொடிச் சித்தரோ இயற்கையிற் சிற்றுருவினவாய்த் தோன்றியுள்ள காய்கனிகளைப் பேருருவினவா யாக்கினார்; சுவையற்ற கனி

களைச் சுவையுறும்படி செய்தார்; நிறங்குலைந்து கிடந்த மலர்களை நிறங்கிளரச் செய்தார்; அதற்குமுன் படைப்பிற் காணப்படாத பற்பல புதுமையான பூஞ்செடிகளை உண்டுபண்ணினார்; இன்னும் இவைபோன்ற செயற்கரிய விந்தைச் செயல்கள் பலவற்றைச் செய்துகாட்டி இக்காலமக்களை இறும்பூதெய்தச் செய்தனர். இதனாலேயே இவர் செடிகொடிச் சித்தர்-லூதர் பர்பாங்க் என்று பெயர் சூட்டப்பெற்றனர்!

அமெரிக்கப் பெருநாட்டிலுள்ள மஸ்ஸாச்சூஸெட்ஸ் பகுதியைச் சேர்ந்தது லன்காஸ்டர் என்னும் நகரம். அந்நகரத்திலே 1849-ஆம் ஆண்டு இச் செடிகொடிச்சித்தராகிய லூதர் பர்பாங்க் பிறந்தார். 'விளையும் பயிர் முளையிலே தெரியும்' என்றபடி இவர் இளமையிலிருந்தே மரஞ்செடிகொடிகளிற் கருத்தைச் செலுத்திவந்தார். அவற்றைக் கூர்ந்து நோக்குவதும், அவற்றின் அமைப்புக்களைக் கண்டு மகிழ்வதும், அவற்றுடன் அடிக்கடி நெருங்கிப் பழகுவதுமாக இவர் வளர்ந்துவந்தார். இவர் பள்ளியிற் பயிலுங்காலத்திலும் செடிகொடிகளைப்பற்றிய செய்திகளென்றால் மிகவுங் களிப்புடனும் ஊக்கத்துடனுங் கற்பார். விடுமுறை நாட்களிற் பெரும்பகுதியினை இவர் நூல்நிலயங்களிலுள்ள இயற்கைப்பொருள் நூல்களைப் படிப்பதிலேயே செலவழித்துவந்தார். இவ்வாறிருந்தும் பெற்றோரின் ஏழ்மைத் தன்மையால் உயர்தரக் கல்லூரிக் கல்விப்பயிற்சி இவருக்குக் கிட்டாதாயிற்று; அன்றியும், ஒரு தொழிற்றுறையி லிறங்கிக் கூலிவேலையும் செய்யவேண்டியவரானார்.



பர்பாங்க் தொழிற்சாலையொன்றிற் சேர்ந்து வேலை செய்து வந்தார். ஒருநாள் அத்தொழிற்சாலையி லிருந்த புல்லரியுங் கருவி யொன்றைப் பிரித்த தொழிலாளிகளிற் சிலர் அதனை மீண்டும் பொருத்த முடியாது திகைத்திருந்தனர். அப்போது அதனைக் கூர்ந்து நோக்கிக்கொண்டிருந்த பர்பாங்க் சட்டென முன்வந்து, அப்பகுதியை யெப்படிப் பொருத்துவதென்பதை அவர்களுக்கு விளக்கிப், பொருத்தியுங் காட்டினர். அதனைக் கேள்வியுற்ற அத்தொழிற்சாலை யதிகாரி, இவருக்கு அங்குள்ள பொறிகளை மேற்பார்வை பார்க்கும் வேலைகொடுத்து இவரை ஊக்கினர். இவ்வேலையில் அமர்ந்து அத்தொழிற்சாலையில் பணியாற்றிக்கொண் டிருக்கும்போது, பலர் வருந்திச் செய்யவேண்டிய ஒரு வேலையினை ஆட்கள் உதவி யில்லாமலேயே மிக எளிதிற் செய்துவிடக்கூடிய ஒரு பொறியை இவர் புதிதா யமைத்துக் காட்டினர். பர்பாங்கின் புதுப்புனைவுத் திறனைக் கண்ட அத்தொழிற்சாலை முதலாளிகள் அவர்தம் ஊதியத்தை உயர்த்திக்கொடுத்தார்கள்; அன்றியும் இத்தகைய அரிய பொறிகளைச் செய்துகொடுத்தால் அவருக்குப் பெரும்பொருள் வழங்குவதாகவும் வாக்களித்தார்கள். எனினும், பர்பாங்க் செடிகொடிகள்போன்ற இயற்கைப் பொருள்களில் விருப்பும், பொறிகள் போன்ற செயற்கைப் பொருள்களில் வெறுப்புங் கொண்டவராதலால், சில நாட்களுக்குள் அத்தொழிற்சாலையினின்றும் விலகினர்.

உலகத்தில் இயற்கையாக உண்டாகிற பொருள்கள் எழிலோடு விளங்குகின்றன என்றாலும், அவற்றினும் எழில் மிகுந்த புதுப்பொருள்களைக் கண்டுபிடிக்க இயலுமா? அஃதியலாவிடத்து இயற்கையாக உண்டாகிற அப்பொருள்களையேனும் அழகு மிகுந்து விளங்குமாறு திருத்தி யமைக்க

முடியுமா? முடியும் என்பதே பர்பாங்கின் கோட்பாடு. அக்கோட்பாட்டைச் செய்கையிற் செய்துமுடித்துக் காட்டுவதே இவர்தம் நோக்கம். இந் நோக்கத்தை நிறைவேற்ற இவர் முதன்முதலாகச் செய்யத்தொடங்கிய வேலை சந்தை விற்பனைக்காகுங் காய்கறி வகைகளைப் பயிரிடுதலே. ஒரு சிறு தோட்டத்திற் பல காய்கறி வகைகளுடன் உருளைக் கிழங்கையும் இவர் பயிரிடத் தொடங்கினர்; வளப்பமுடனும் உருட்சியாகவு மிருந்த ஒருவகை உருளைக்கிழங்கினைத் தேர்ந்தெடுத்து அதற்கு ஏற்ற உரமிட்டுக் கருத்தோடு பார்த்துவந்தார். அதனால் அது சுவையிலும் மணத்திலும் சிறந்து, மக்கள் உடலுக்கும் நன்மை தருவதாயிற்று; பார்ப்பதற்கும் அஃது உண்டையும் உருளையுமாக வில்லாமல் மழமழவென்றிருந்தது. விரைவில் அதன் சிறப்பு எல்லோருக்குந் தெரியவே, யாவரும் அதனைப் பரிந்து வாங்க முன்வந்தார்கள். அதனால் பர்பாங்குக்கு நல்ல வருமானங் கிடைத்தது. 'பர்பாங்க் உருளைக் கிழங்கு' என்றே அது பெயரும் பெறுவதாயிற்று.

பின்னர், பர்பாங்க் தோட்டப்பயிர்த் தொழிலுக்கும் உடல்நலத்துக்குந் தக்கவிடம் காலிபோர்னியாவே எனக் கண்டறிந்து, ஆங்குச் சென்றார்; சென்று, அதன் ஒரு பகுதியாகிய சான்பிரான்ஸிஸ்கோவிற்கு வடக்கேயுள்ள ஒரு பள்ளத்தாக்கைத் தேர்ந்துகொண்டார். அப் பள்ளத்தாக்கில் தமக்கு வேண்டிய நிலத்தை உரிமைப் படுத்திக்கொள்ளத் தக்க தொகை கையில் இல்லாமல் அதனைச் சேகரிக்க இவர் பட்டபாடு சொல்லுந்தரத்த தன்று: சுமை தூக்கினர்; மரம் பிளந்தார்; கோழிக்கூடு துடைத்தார்; குடியிருக்க நல்ல இடம் தேடிக்கொள்ள முடியாமல் ஈரந்தாங்கிய இருட்டறையொன்றில் காலங்கழித்துவந்தார்; ஒருவேளை உணவிற்கும்

வகையின்றிச் சிலநாட்கள் பட்டினியாகவுங் கிடந்தார்; நாய்க்கு இடப்படும் எலும்புத் துண்டுகளைப் பொறுக்கி அவற்றில் ஒட்டியிருக்கும் தசைப்பற்றினை யுண்டு பசியாற்ற முயன்றுள்ளார் சிலநாட்க ளென்றால், இன்னுங் கூறவும் வேண்டுமோ?

ஆனால், இவருக்கு இடையிடையே சிற்சிறு தொகை மிஞ்சத்தக்க வேலைகளும் சில கிடைத்துக்கொண்டுவந்தன. உண்டுடுத்து மிஞ்சியது மிகச் சிறு தொகையாயினும் நாளடைவில் அதனை விடாமற் பிடித்துச் சேர்த்துப் பெருந் தொகையாக்கி, அதனைக் கொண்டு, இவர் அப்பள்ளத்தாக்கிற் சாந்தரோஸா என்னுமிடத்தில் இருந்த சிறு நிலப் பகுதியொன்றை வாங்கித் தமது பயிர்த்தொழிலினைத் தொடங்கினார். சிறந்த விதைகள் சேகரிப்பதும், மரஞ்செடி கொடிகட்குரிய கன்றுகள், பதியன்கள், நாற்றுக்கள் பயிர் செய்வதும், அவற்றை விற்பனை செய்வதுமாகிய தொழில்களே இவர் இப்பொழுது மேற்கொண்டவை. இவர் தம்புலத்தில் வரவர நேர்த்தியான காய்கனிகளும், அழகிய மலர்வகைகளும் உண்டாக்கப்பட்டன. முதற்கண் அத்தொழில்களாற் பேருதிய மடையா விட்டாலும், இவர்தம் வாழ்க்கையினைக் கவலையின்றி நடத்திக் கொள்ளப் போதுமான வருவாய் பெற்று வந்தனர்.

இவ்வா றிருந்துவருகையில், பர்பாங்கின் காலசக்கரம் நன்முறையிற் சுழலத் தொடங்கிற்று. ஒருநாள் செல்வரொருவர் தமது வாதுமைப் பண்ணைக்கு இருபதினாயிரம் வாதுமைக் கன்றுகள் ஒன்பது திங்களில் வேண்டுமென்றும், அதற்கு எவ்வளவு தொகை பிடித்தாலும் அதனைத் தாம் கொடுத்து விடுவதாகவும் பர்பாங்கிற்குச் செய்தி யனுப்பினர்.

வாதுமைக் கன்றொன்றைப் பெயர்த்துநடக்கூடிய அளவிற்கு அதனைப் பயிர் செய்வதற்கே குறைந்தது இரண்டரை யாண்டுகளாவது பிடிக்கும் என்பதை, பர்பாங்க் அறிவார். எனினும், மரஞ்செடி நூலாராய்ச்சியில் தாம் இதுகாறும் ஆராய்ந்து வைத்திருந்த ஒட்டுமுறையைக் கையாண்டால் குறித்த காலத்திற்குள் கன்றுகளைப் பயிர்செய்து கொடுக்கலா மெனத் துணிந்து பர்பாங்க் ஒப்புக் கொண்டார். உடனே ஏற்ற வேலையாட்களைத் தேர்ந்துகொண்டு, இரவும்பகலும் ஓயா துழைத்து ஒன்பதாந் திங்கள் முடிவில் இருபதினாயிரங் கன்றுகள் கேட்ட செல்வர்க்குக் கேட்டவாறே யனுப்பிவைத்துப் பைந்நிறையப் பணத்தையும் பெற்றார். இவ்வரிய செயலைக் கண்ட ஊராரெல்லாரும் பர்பாங்கைப் பாராட்டிப் புகழ்வாராயினர். புகழ் பரவப்பரவ இவர் தொழிலும் மேன் மேலும் ஓங்கி வளர்வ தாயிற்று; ஊதியமும் பெருகுவ தாயிற்று.

பர்பாங்கின் வருவாய் பெருகவே, இவர் விதை சேர்த்துக் கன்று நாற்றுகள் பயிரிட்டு விற்பனை செய்வதைவிட்டு, தாமே செடி கொடி மரங்களை வளர்த்து வருவதென முடிவு செய்துகொண்டார். ஆகவே, இவர் சாந்தரோஸாவிற்கு எட்டுக்கல் தொலைவில் ஸெபாஸ்டபோல் என்ற விடத்தில் ஒரு நிலப்பகுதியை விலைக்கு வாங்கி ஆங்குத் தமக்கென ஓர் ஆய்வுபுலத்தை அமைத்துக்கொண்டனர். நெடு நாளாகச் செய்துபார்க்க வேண்டுமென்று கருதியிருந்த நுட்பமான முறைகளை யெல்லாம் கைகண்டறியச் சமயம் இவருக்கு இப்போதுதான் வாய்த்தது. வாய்க்கவே, இவர் இங்குப் பல வகையான மரஞ் செடி கொடிகளைப் பயிர்செய்து அதன் மூலம் புதுப்புதுப் பொருள்களைக் கண்டுபிடித்தார். கன்

டார் வியக்குமாறு இவர் இயற்கையில் தோன்றிய மலர்கள், இலைகள் முதலியவற்றிற் பலவகை மாறுதல்கள் உண்டாகச் செய்தார். இதனால் இவர் புகழ் அமெரிக்காடேயன்றி ஏனைய பெருநிலப் பகுதிகளிலும் பரவலாயிற்று. இவர்தம் அருஞ் செயல்களைக் கண்டு வியந்த கார்னீஜி அறநிலையத்தார் ஆண்டொன்றுக்குப் பதினாயிரம் டாலர்கள் வீதம் பத்தாண்டுகள் தொடர்ந்து நன்கொடை கொடுத்து, இவர்தம் ஆராய்ச்சித் தொழில் முட்டுப்பாடின்றி மேன்மேலும் வளரச்செய்தனர்.

பர்பாங்க் தமது செடிகொடிமரங்களின் ஆராய்ச்சியின் பயனாக இயற்கையிற் காணப்படும் பூ காய் கனிகள், புல் வகைகள், மரங்கள் ஆகியவற்றின் தோற்றம், நிறம், மணம், சுவை முதலியவற்றைக் கூட்டியும், திருத்தியும், மாற்றியும் செம்மை செய்தனர்; அதுவரையில் உலகிற் காணப்படா திருந்த பல்வகையான புதிய செடி கொடி மரம் மலர் காய்கனி முதலியவற்றை யுண்டுபண்ணினர். இவர் காட்டுச்செடி யினங்களையும், பயன் குறைந்துவரும் செடியினங்களையும் நாட்டில் வளர்க்கப்படும் செடிகொடி யினங்களோடு ஒட்டி, அம் முறையினால் இரண்டினங்களையும் பயன்தரச் செய்தார். மேலும், இவர் ஒன்றின் பூவிலுள்ள பூந்தாதை யெடுத்து மற்றொன்றின் மலரிடத்தே யுட்செலுத்திவைத்து, பூத்துங் காய்க்காத மரஞ் செடி கொடிகளைக் காய்த்து வளம்பெறச் செய்தார். இவர் முட்கள் நிறைந்த நாகதாளிச் செடியினை ஒட்டு முறையால் முள்ளற்றதாகவும், சுவையுள்ளதாகவும் மாற்றி, மக்களுக்கும் விலங்குகளுக்கும் உணவாகப் பயன்படுமாறுஞ் செய்தார்; அதனால் அக்காலத்தே அமெரிக்காவில் நேர்ந்தநேதார் உணவுப்பஞ்சம் நீங்கலாயிற்று. இன்னும் இவர் செய்து காட்டிய புதுமைகள் பலப்பல.

செயற்கரிய செய்த இப் பெரியாராகிய செடிகோடிச் சித்தர் தமது எழுபத்தேழாவது அகவையாகிய 1926-ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள், பதினோராம் நாளில் மண்ணுலகு நீத்து விண்ணுலகடைந்தார். இவர் வேலையும் அதன் விளைவுகளும், இவர்தம் ஆராய்ச்சிகளும் இயற்கைக்கு எழிலை யளித்துள்ளன; இவர் பிறந்த நாட்டிற்குப் பெருமையை அளித்துள்ளன; மக்கட்டொகுதிக்கு நலத்தை யளித்துள்ளன; "உழைப்பின் வாரா உறுதிக ளுளவோ!" என்றஆன்றோர் கூற்றையும் மெய்ப்பித்துள்ளன.


பயிற்சி

1. சித்தர், இறும்பூது, மலிதல், நூல்நிலயம், பணியாற்றல், புதுப் புனைவு, எழில், கோட்பாடு, சந்தை, பள்ளத்தாக்கு, பதியன் காலச்சக்கரம், ஒட்டுமுறை, ஆய்வுபுலம், முட்டுப்பாடு.
2. பர்பாங்க் பேருழைப்பாளி யென்று எவ்வாறு அறிகிறாய்?
3. இரண்டாம் வேற்றுமை மொழிகள் சில வெடுத்து ஒவ்வொன் றுக்கும் பொருள் தெரிவி.
4. பர்பாங்க்குக்குச் செடிகோடிச்சித்தர் என்ற பெயர் தக்கதே யெனக்காட்டு. அவர்செய்த வேலைகளின் பயனை இப்போது இங்கே நீ காண்கின்றாயா? அவை எவை?

கரு. ஹாம்லெட்

ஐரோப்பாவைச் சேர்ந்த டேன்மார்க் நாட்டை ஹாம்லெட் என்ற அரசனொருவன் முன்னொருகாலத்தில் ஆண்டு வந்தான். அவன் ஒருநாள் பூங்காவிற் பாம்பு கடித்து இறந்துவிட்டதாக நாடெங்குஞ் செய்தி பரவியது. இறந்த அரசனை அடக்கஞ் செய்து சிலநாட்கள் கழிவதற்குள்ளாகவே அவன் மனைவியான கேர்ட்ரூடேஅரசி அவனுடைய தம்பி

கிளாடியஸ் என்பவனை மணந்துகொண்டாள். கிளாடியஸும் மணமானதுமுதல் அந்நாட்டுக்கரசனாகி அரசுபுரிந்துவந்தான். பூங்காவிற்குச் சென்ற அரசன் பொட்டென மாண்டதும்,



ஹாம்லெட் கெர்ட்ரூடு கிளாடியஸ்

அவன் மாண்ட ஒரு திங்களுக்குள்ளேயே அவன்மனைவி மைத்துனனை மணந்துகொண்டதும் அந்நாட்டுமக்கள் மனத்திடைப் பல்வேறு ஐயங்களைக் கிளப்பிவிட்டன. ஹாம்லெட் அரசன் பாம்பு கடித்து இறந்தது மெய்தானே என்ற

ஐயமும், அரசைக் கைப்பற்றக் கருதி வஞ்சகம் நிறைந்த கிளாடியஸே தன் தமையனைக் கொலைபுரிந்திருக்கலாகாதோ என்ற ஐயமும், இந் நிச்செயலுக்கு கெர்ட்ரூடும் உடந்தையாயிருந்திருக்கக்கூடாதோ என்ற ஐயமும் ஆகப் பலவேறு வகையான ஐயங்கள் போராடின. மாண்ட அரசனின் ஒரே மைந்தனை ஹாம்லெட் என்ற இளங்கோவின் மனத்திலும் இத்தகைய ஐயங்கள் குடிகொண்டன. நாட்டினர் கூற்றை முற்றும் நம்பமுடியாதவனும், உண்மை இன்னதென்றறிய வகையற்றவனும் இவ்விளங் குமரன் மனம் மாழ்கியிருந்தான்.

இவ்வாறு சில நாட்கள் சென்றபோது, ஒருநாள் அரண்மனைக் கொத்தளத்தின்மீது மாண்ட அரசனது உருவெளித் தோற்றம் இராக்காலத்தில் நடமாடுவதாக ஒரு செய்தி பரவிற்று. இச் செய்தியைக் கேள்வியுற்ற இளங்கோ இதனுண்மையை அறிய ஒருநாளிரவு தன் நண்பர்களிருவருடன் கொத்தளத்தருகில் வந்து காத்திருந்தான். நள்ளிரவு கழியுந் தருவாயில் உருவெளித்தோற்றம் அவனுக்குத் தென்பட்டது. தென்பட்ட அவ்வுருவம் தன்னை அழைப்பது கண்ட ஹாம்லெட், நண்பர்கள் தடுத்துங் கேளாது, அதனைச் சேர்ந்து பின் தொடர்ந்து சென்றான். தனியான ஓரிடம் அடைந்ததும் ஹாம்லெட்டைப் பார்த்து அவ்வுருவம் பின் வருமாறு கூறிற்று :—

“மனம் வாடும் மைந்தா! என்னைப் பாம்பு தீண்டியதென்பது வீண் புரளி. உன் சிற்றப்பனே என் காதில் பச்சிலையொன்றின் சாற்றைப் பிழிந்து நஞ்சூட்டிக் கொன்றான்; நீ உண்மையாக என் மகனானால் அவன்மீது பழிதீர்க்கவேண்டியது உன் கடன்; அதுவே என் விருப்பம். ஆனால் உன் தாயை நீ ஒன்றும் ஒறுக்கவேண்டா; அவள் வினையே அவளைச் சுடும். நீ பழிதீர்த்த பிறகுதான் நான் அமைதியுறுவேன்.”

இவ்வாறு கூறி முடித்த அவ்வுருவம் பழிக்குப்பழி வாங்குவதாக உறுதிசெய்து கொடுக்குமாறு இளங்கோவை வற்புறுத்தி, அவன் உறுதி கூறியவுடன் மறைந்தது.

அன்றுமுதல் ஹாம்லெட்டினிடம் பெரிய மாறுத லொன்று ஏற்பட்டது. மங்கி மாழ்கியிருந்த அவன், பல வகையிலும் ஆராய்ந்து, தன் தந்தை சூழ்ச்சியாற் கொல்லப் பட்டிருத்தல்வேண்டுமேயன்றிப் பாம்புகடித் திறந்திருக்க முடியாது என்ற முடிவிற்கு வந்தான்; அம் முடிபின்படி கொலை செய்தவன் தன் சிற்றப்பனும், உடந்தையாயிருந்தவள் தன் தாயுமே ஆகுமென்று கண்டுகொண்டான். ஆயினும் இம் முடிபை நம்பி எவ்வாறு பழிதீர்த்துத் தான் கடமையை ஆற்று வது என்பது அவனுக்கு விளங்கவில்லை. ஆகவே உண்மை ஒரு வாறு புலப்படும் வரையில் தன் உறுதிமொழியை நிறைவேற் றாது காத்திருப்பதென்றும், அதற்குள் தன் உட்கருத்தை யாரும் உணர்ந்துகொள்ளாதபடி பித்தம்பிடித்தவன் போன்று நடந்துகொள்ள வேண்டுமென்றும் முடிவுசெய்துகொண் டான். அதன்படியே, ஒன்றினும் பற்றற்றவனும் மகிழ்ச்சி யென்பதே யில்லாதவனும் அவன் நடந்துவந்தான்.

டென்மார்க்கின் முதன்மந்திரி பொலோனியஸ் என் பானுக்கு ஒபீலியா என்னும் அழகிற் சிறந்த மகளொருத்தி யிருந்தாள். அவளுக்கும் ஹாம்லெட்டிற்குமிடையே காதல் தோன்றி மலர்ந்திருந்தது. ஆகவே, தான் மேற்கொண்டுள்ள பித்துப்பிடித்த நிலையில், தன் உயிர்க்காதலி எங்கே தன் காதலின் உண்மையை ஐயுற்றுவிடுவாளோ என அஞ்சி, ஹாம் லெட் தன் நடைமாறினும் அவளிடம் தான்கொண்ட காதல் மாறவில்லை என்பதை விளக்கிக் கடிதமொன் றெழுதினான். அக்கடிதத்தைக் கண்டு மனந்தேறிய ஒபீலியா மகிழ்வுடன்

அதனைத் தன் தந்தை பொலோனியஸுக்குக் காட்டினன். அவன் அதனை அரசிக்கும் அரசனுக்குந் தெரிவித்தான்.



ஒபீலியாவும் ஹாம்லெட்டும்

ஹாம்லெட் காதற்பித்தே கொண்டுள்ளானெனக் கிளாடியஸ் கருதி விரைவில் மணமுடிப்பதெனத் தீர்மானித்தான்.

இவ்வாறிருக்கையில், ஒருநாள் அரண்மனைக்கு நாடகக்காரர் சிலர் வந்திருந்தனர். அவர்களைக் கண்ட ஹாம்லெட்டிற்கு ஓரெண்ணந் தோன்றியது; அதன்படி, ஓரரசனை அவனுடைய இளவல் நஞ்சூட்டிக் கொன்றுவிட்டு அரசியையும் மணம்புரிந்து, அரசாட்சியையுந் தானே கைப்பற்றிக் கொண்டதாக ஒரு கதையைக் கற்பனை செய்து, அதனை அந் நாடகக்காரர்களைக் கொண்டு அரசன்முன் நடிக்கச் செய்தால் உண்மையை உய்த்தறியலாமென அவன் முடிவு செய்துகொண்டான். நாடகக்காரர்களுடன் அவ்வாறே ஏற்பாடு செய்துகொண்டு ஒருநாள் அவன் அந் நாடகத்தை அரண்மனையில் நடத்திவைத்தான். நாடகம் நடக்கும்போது, ஹாம்லெட் அடிக்கடி அரசன் முகத்தையும் அரசியின் முகத்தையும் கூர்ந்து நோக்கிவந்தான். நாடக நடுவில் அரசனை நஞ்சூட்டிக் கொன்ற பகுதி நடிக்கப்பட்ட போது கிளாடியஸ் முகம் முற்றும் மாறிக் கறுத்தது; கெர்ட்ரூடின் முகமும் வேறுபட்டது; உடனே அவ்விருவரும் தாங்கள் திடீரென நோயுற்றதாகச் சாக்குச்சொல்லி அகன்றனர். குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்குமென்பதற்கு இதைவிட வேறு சான்றும் வேண்டுமோ! தந்தையைக் கொன்றவன் சிறியதந்தையே என்பது ஹாம்லெட்டுக்கு உள்ளங்கை நெல்லிக்கனிபோல் உறுதியாய்விட்டது.

அரசனும் அரசியுமோ ஹாம்லெட்டுக்கு உண்மை தெரிந்துவிட்டதெனக் கண்டுகொண்டனர். ஆகவே, மகனுக்கு ஆறுதல் சொல்லி அவன் மனத்தை மாற்றவேண்டுமென எண்ணி அரசி அந்நாளே ஹாம்லெட்டைத் தன் னறைக்கு வரவழைத்தாள். தாய்க்கும் பிள்ளைக்கும் நடந்த பேச்சில், ஹாம்லெட் தாயின்செய்கையைக் கண்டித்துக் கடிந்

சொற்கள் சில சொல்ல, குற்றமுள்ள நெஞ்சுடையவளாதலால் கெர்ட்ரூடு தனக் கென்ன நேரிடுமோ வென்றஞ்சி அலறிக் கூவினாள். அவள் கூவியது கேட்டு, அரசன் ஆணைப்படி அரசிக்குப் பாதுகாவலாக அவ்வறையின் திரைமறைவி லொளித்திருந்த பொலோனியஸ் அதட்டிக்கொண்டு திரையைத் தள்ள, ஹாம்லெட் சட்டென முன்பின்பாராது வெளியி லிருந்தபடியே திரையினூடு தன் சுரிகையாற் குத்தினான். உடனே திரைக்குள் ஒருவன் குத்துண்டு விழவே, அவன் திரையை நீக்கிப்பார்த்தான்; பார்த்தவன் திகைத்துவிட்டான். ஏன்? குத்துண்டு மாய்ந்தவன் தன்னுடைய காதலியின் தந்தையான பொலோனியஸே! செய்வதின்னதென்று தெரியாமல் மனங் கலங்கினவனாய் ஹாம்லெட் உடனே வெளியேறினான்.

ஹாம்லெட் எவ்விதத்திலும் தன்னுயிரைப் போக்கி விடுவான் என்று மன்னனுக்கு இப்போது நன்கு புலப்பட்டு விட்டது. மன்னனும் மாசுற்ற மனத்தினனாதலின், பொலோனியஸைக் கொன்றமைபற்றி ஹாம்லெட்டுக்குக் கொலைத் தீர்ப்புக் கொடுக்க அஞ்சினான்; மேலும், நாட்டார் ஹாம்லெட்டின்மீது பற்றுவைத்திருந்ததையும் அவன் அறிவான். இருந்தாலும் ஹாம்லெட்டை நாட்டினுள் வைத்துக்கொண்டிருப்பதற்கும் அவன் மனம் ஒப்பவில்லை; தன்னுயிருக்கு எங்குக் கேடு நேருமோ என அஞ்சினான். ஆகையால் அரசன் ஹாம்லெட்டைக் கொலைக்குற்றத்தினின்றும் தப்பவிடுபவன்போல மேலுக்குக் காட்டி, அவனைக் கப்பலேற்றி இங்கிலாந்துக்கு அனுப்பிவிட வேண்டுமென்று தீர்மானித்தான். இங்கிலாந்து அப்போது டென்மார்க் அரசனுக்குக் கீழ்ப்பட்டிருந்தது. இங்கிலாந்தில் ஹாம்லெட் கொலைசெய்யப்படவேண்டும் என்று

அந்நாட்டு அரசனுக்குக் கட்டளை யொன்றை, ஹாம்லெட்டிற்குத் தெரியாமல், தான் அனுப்பிவைத்தால் அவ்வரசன் அக்கட்டளையை நிறைவேற்றிவைப்பானென்பது கிளாடியஸுக்குத் தெரியும். ஆகவே, கிளாடியஸ் அவ்வாறே செய்து முடித்தான். ஹாம்லெட்டும் இரண்டு அதிகாரிகள் பின் தொடர இங்கிலாந்துக்குக் கப்பலிற் புறப்பட்டான்.

கப்பல் இங்கிலாந்து நோக்கிச் சென்றுகொண்டிருக்கையில், கடற்கொள்ளைக்காரர்கள் அதனைத் தாக்க ஹாம்லெட் அவர்கள் கையிற் சிக்கிக்கொண்டான். அவனைப் பின் தொடர்ந்த அதிகாரிகள் கொள்ளைக்காரர்களுடன் போராட முடியாமல் தப்பித்துக்கொண்டு தங்கள்கப்பலுடன் டென்மார்க்குக்கே திரும்பிவந்து சேர்ந்துவிட்டனர். சிறைப்பட்ட ஹாம்லெட் டென்மார்க்கரச குமாரனெனக் கொள்ளைக்காரர்கள் கேட்டறிந்ததும், அவர்கள் அவனை மிகுந்த பணிவுடன் டென்மார்க்கிற் கொண்டுவந்து சேர்த்துவிட்டனர். ஹாம்லெட் டென்மார்க்குக் கரைசேர்ந்தவுடன், தான் திரும்பிவந்து விட்டதையும், மறுநாளே தான் அரசனைக் காணக் கருதியிருப்பதையும் அரசனுக்குக் கடிதமெழுதித் தெரிவித்தான். அவ்வாறே அவன் மறுநாள் புறப்பட்டு அரண்மனை நோக்கிச் செல்லும்வழியில், கண்ணராவிக் காட்சி ஒன்றைக் கண்டான்.

தன் தந்தை தன்காதலனாலேயே கொல்லப்பட்டதை எண்ணி யெண்ணி மனம் புண்பட்டு உன்மத்தங்கொண்டிருந்த ஒபீலியா, ஒரு நீர்நிலையில் தவறிவீழ்ந்து உயிர்நீத்தாள். அவளை அடக்கஞ் செய்யக்கொண்டுவந்த பிணக்காட்சியே ஹாம்லெட் கண்டதாகும். ஹாம்லெட் பிணத்தைத் தொடர்ந்து பிணக்குழியண்டை வந்துநின்றான். அப்போது ஒபீலியாவின் உடன்பிறந்தானாகிய லேயர்ட்டீஸ் என்பவன் தன்

தங்கையின் பிரிவுக்காற்றாமற் குழியிற் பிணத்தருகிற் குதித்தான். ஹாம்லெட்டும் அவனுடன் குதித்தான். தன் தந்தை முதலிற் குத்துண்டிறந்ததற்கும், பின் தங்கை இறந்ததற்கும்



உன்மத்தம் பிடித்த ஒபீலியா

ஹாம்லெட்டே காரணம் எனக் கருதியிருந்த லேயர்ட்டீஸ் உடனே ஹாம்லெட்டை அப் பிணக் குழியிலேயே சண்டைக்கிழுத்தான். ஆனால், ஆங்கிருந்தவர்கள் இருவரையும் தடுத்து விலக்கி ஈமக் கடனையும் முடித்துச் சென்றனர்.

பிணக் குழியிற் சண்டை நிகழவிருந்ததைக் கேள்வியுற்ற கிளாடியஸ் லேயர்ட்டீஸைக்கொண்டே ஹாம்லெட்டுக்குக் கேடு சூழ வெண்ணினன். எனவே, லேயர்ட்டீஸை அவன் மறைவில் வரவழைத்து, ஹாம்லெட்டினிடம் சூதாக முன்போல் நட்புப் பாராட்டி, அவனை வேடிக்கையாக வாட்போருக்கு அழைக்குமாறு தூண்டினன். லேயர்ட்டீஸ் அவ்வாறே ஹாம்லெட்டிடம் நட்புக்கொண்டவன்போல் பேசி அவனை வாட்போருக்கு இணங்குவித்தான். வாட்போர் நடத்த நாளுங் குறிக்கப்பட்டு, விளம்பரமுஞ் செய்யப்பட்டது. போரன்று அரசன் லேயர்ட்டீஸைத் தனியே வரவழைத்து அவனிடம் கூரிய நஞ்சூட்டிய கத்தியொன்றைக் கொடுத்து, இரண்டொருதடவை தோற்றுப்போகிறவன்போல் நடித்துப் பிறகு அக் கத்தியால் ஹாம்லெட்டைக் குத்தி விடுமாறு கேட்டுக்கொண்டான்; லேயர்ட்டீஸும் இச்சூழ்ச்சிக் கிணங்கினன். இவ்வேற்பாடு ஒருவேளை தவறிப் போய்விட்டால் என் செய்வதென்று கருதி, அரசன் நஞ்சு கலந்த கொடிமுந்திரிச் சாற்றைப் போரிற் களைத்து நீரருந்தவரும் ஹாம்லெட்டுக்குக் கொடுப்பதற்கென ஒரு திரை மறைவிற் கலந்து வைத்திருந்தான். இவ்வாறு தான் செய்ததை அவன் அரசிக்கு அறிவிக்க மறந்துவிட்டான்.

வாட்போருந் தொடங்கிற்று. லேயர்ட்டீஸ் அரசன் சூழ்ச்சியின்படி முதலில் தோற்றுவிடுபவன்போற் போக்குக் காட்டிச் சரேலென ஹாம்லெட்டைக் குத்திவிட்டான். ஹாம்லெட் அடங்காவெகுளிகொண்டு லேயர்ட்டீஸின் கத்தியையே பிடுங்கி லேயர்ட்டீஸைக் குத்திவிட்டான். அக் கத்தி நஞ்சூட்டப்பட்ட தன் கத்தியே யென்றறிந்த லேயர்ட்டீஸ், தான் இறப்பது உறுதியெனக் கண்டுகொண்டான்; உடனே நல்லறிவு

பீக்கூர, உண்மைகளை யெல்லாம் ஹாம்லெட்டினிடம் ஒன்றும் ஒளியாமல் வெளியிட்டுவிட்டான். அவ்வளவுதான்; ஹாம்லெட் சிங்கம்போற் சீறி யெழுந்து ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து நஞ்சூட்டப்பெற்ற அக்கத்தியினாலேயே கிளாடியஸை அடிவயிற்றிற் குத்தித் தள்ளினன். இதற்குள் வாட்போரை மறைந்து நின்று பார்த்துக்கொண்டிருந்த கெர்ட்ரூடு, நீர் வேட்கை மிகுதியினால், அரசன் மறைவில்வைத்திருந்த நஞ்சு கலந்த கொடிமுந்திரிச் சாற்றைக் குடித்து இறந்தாள். ஹாம்லெட் தன் நண்பனாகிய ஹொரேஷியோ என்பவனைக் கூப்பிட்டு, "நான் இறக்கப்போகின்றேன், நீ உயிரோடிருந்து இதுகாறும் இவ்வரண்மனையில் நடந்த செய்திகளை யெல்லாம் உலகத்தாருக் கறிவிக்கக் கேட்டுக்கொள்கின்றேன்," என்று சொல்லி உயிர்துறந்தான்.

பயிற்சி

1. ஐயம், பூங்கா, இளங்கோ, உருவெளித்தோற்றம், புரளி, மங்கி மாழ்கி, உடந்தை, காதல் மலர்தல், இளவல், கற்பனை, உள்ளங்கை நெல்லிக்கனி, சுரிகை, கண்ணராவி, உன்மத்தம், நஞ்சூட்டுதல்.
2. தன் தந்தையின் இறப்பைப்பற்றிய ஐயத்தை ஹாம்லெட் எவ்வாறு நீக்கி உண்மையை அறிந்துகொண்டான்?
3. நஞ்சு, பிறகு, முடிவு, ஏற்பாடு, குறுகுறு, நன்கு, கேடு, மறு, பரவிற்று, விடு, பிரிவு, இரண்டொரு, மறைவு—இவை ஒவ்வொன்றும் குற்றியலுகர மொழியாயின் அதன் வகையும் அன்றென்றால் காரணமுங் கூறுக.
4. ஹாம்லெட்டைக் கொல்லக் கிளாடியஸ் செய்த இரண்டு சூழ்ச்சிகள் யாவை?

—

கசு. குறத்தி குறிசொல்லுதல்
(திருக்குற்றாலக் குறவஞ்சி)

என்னகுறி யாகிலும்நான் சொல்லுவேன் அம்மே! சது
 ரேறுவேன் எதிர்த்தபேரை வெல்லுவேன் அம்மே!
மன்னவர்கள் மெச்சுகுற வஞ்சிநான் அம்மே! என்றன்
 வயிற்றுக்கித் தனைபோதும் கஞ்சிவார் அம்மே!
பின்னமின்றிக் கூழெனினும் கொண்டுவா அம்மே! வந்தால்
 பெரியகுடுக் கைமுட்ட மண்டுவேன் அம்மே!
தின்னஇலை யும்பிளவும் அள்ளித்தா அம்மே! கப்பற்
 சினச்சரக் குத்தக்கிணி கிள்ளித்தா அம்மே! (க)

மாறாமல் இருநிலத்தில் அறம்வளர்க்குங் கையே!
 மனையறத்தால் அறம்பெருக்கித் திறம்வளர்க்குங் கையே!
வீறாக நவநிதியும் விளையுமிந்தக் கையே!
 மேன்மேலும் பாலமுதம் அளையுமிந்தக் கையே!
ஆறாத சனங்கள்பசி யாற்றுமிந்தக் கையே!
 அனங்கனைபார் வணங்கிநித்தம் போற்றுமிந்தக் கையே!
பேறாக நன்னகரம் காக்குமிந்தக் கையே!
 பிறவாத நெறியார்க்கே பேற்குமிந்தக் கையே! (உ)

—திரிகூட ராசப்பக் கவிராயர்

பயிற்சி

1. சதுர், மண்டுதல், பிளவு, சினச்சரக்கு, தக்கிணி, அறம்வளர்த்தல், மனையறம், நவநிதி, அணங்கு, பிறவாநெறி.
2. குறவஞ்சி என்றால் என்ன?
3. நான்காம் ஏழாம் வேற்றுமைச் சொற்களை யெடுத்துப் பொருள் கூறு. இரண்டன்தொகைச் சொற்களை எடுத்துக் காட்டு.
4. குறத்தியின் குறிகளை உன் சொந்த மொழிகளில் விளக்கி யெழுதிக்காட்டு.

கஎ. பேராசிரியர் சுந்தரம்பிள்ளை

திருவிதாங்கூரைச் சேர்ந்த துறைமுகப் பட்டினமாகிய ஆலப்புழை யென்னு மூரில் பெருமாள் பிள்ளை என்ற வேளாளப் பெரியார் ஒருவர் இருந்தார். அவர் அறுவைவாணிகம் செய்துகொண் டிருந்தவர். மிகுந்த கடவுட்பற்றும் நன்னறிவும் அமையப்பெற்ற அவர், தேவாரம் முதலிய அருள் நூல்களையும், திருக்குறள் முதலிய நீதிநூல்களையும், நெட்டுருச்செய்து சொல்லுந் திறமுடையவரா யிருந்தார். அத்தகையாரின் அருமை மகனாராகச் சுந்தரம்பிள்ளை யென்பார் 1855-ஆம் ஆண்டிற் பிறந்தார். ஐந்தாண்டு நிறைந்து இவர் பள்ளியிற் பயிலும்போதே இவர்தம் தந்தையார் ஆத்திசூடி முதல் திருக்குறள் ஈறாகவுள்ள நீதிநூல்களையும், தேவாரம் முதலிய அருட் பாடல்களையும் இவருக்கு ஒழுங்காகக் கற்பித்து வந்தார் மேலும், நாகபட்டினம் இயற்றமிழாசிரியர் புத்தகக் கடை நாராயணசாமிப்பிள்ளை இவருக்குத் தமிழாசிரியராக வமைந்து தமிழ் இலக்கிய விலக்கணப் பெருநூல்களையும் முறையாகக் கற்பித்து வந்தார். எனவே, சுந்தரம்பிள்ளை தமது பன்னிரண்டாம் வயதிலேயே தாய்மொழியாகிய தமிழ்மொழிப் பயிற்சியில் தேர்ந்திருந்தனர். இவர் ஆங்கிலக் கல்விச்சாலையிலும், கல்லூரியிலும் சேர்ந்து, அக் கல்வியிலும் நன்கு பயின்று ஒவ்வொரு தேர்தலிலும் முதன்மையாக நின்று, பி.எ. பட்டமும்



பெற்றார். பெற்றபின், தாம் படித்த திருவனந்தபுரம் மகாராஜா கல்லூரியிலேயே, முதன்முதல் இவர் ஓர் ஆசிரியராக அமர்ந்தனர்.

பிறகு பிள்ளையவர்கள் சென்னைக் கல்வித்துறைத் தலைவர் வேண்டுகோட் கிணங்கி 1877- ஆம் ஆண்டிறுதியில் திருநெல்வேலி ஆங்கிலத் தமிழ்க் கல்விச்சாலைக்குத் தலைவராக அமர்ந்தார். இவர் அங்கு எடுத்துக்கொண்ட பெருமுயற்சியின் பயனாகப் பத்தாவது வகுப்புவரை யிருந்த அக்கல்விச்சாலை இரண்டாந்தரக் கல்லூரியாக மாறியது. இவர் இங்கிருக்கும் போதுதான் கோடகநல்லூர் சுந்தரசுவாமிகள் என்னும் பெரியாரைக் கண்டு, அவரோடு பழகி, அவருக்கு மாணவராயமைந்து அவரிடம் சமயநூல்கள் பல கற்று அறிவு நிரம்பப் பெற்றதாகும். இக் காலத்திற்றான் இவர் மனோன்மணீயம், நூற்றொகை விளக்கம் என்னும் ஒப்பரிய இரு நூல்களை எழுதத் தொடங்கினர்.

தொடங்கிய சிறிது காலத்திற்குள், அஃதாவது 1878- ஆம் ஆண்டு மாசித் திங்களில் இவர்தம் அருமை அன்னையார் விண்ணுலகடைந்தார். பெற்றோரிடத்திற் பேரன்பு காட்டும் ஒழுக்கமுடையவராய், 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்னுங் கொள்கையைக் கொண்ட இவர், தந்தையாரை உடன்வைத்துப் பேணும் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டியவரானர். தம் ஆசிரியத் தொழில்மூலம் வரும் ஊதியம் முழுவதையுமே தம் அருமைத் தந்தையாரிடம் கொடுத்து விடுவது இவர் வழக்கம். இவரது ஆங்கிலப் படிப்பானது, பண்டைத் தமிழர்வழக்கத்திற் கிணங்க, இவர் தம் பெற்றோரிடம் காட்டிவந்த வணக்கத்தையும், பணிவையும் ஒருசிறிதுங் குறைக்கக் காரணமா யிருக்கவில்லை.

1879-ஆம் ஆண்டில் திருவனந்தபுரம் மகாராஜா கல்லூரியில் சிறந்த அறிவுநூற் புலவராயிருந்த டாக்டர் ஹார்வி துரையவர்கள் தம் தாய்நாடு சென்றபோது சுந்தரம் பிள்ளையைத் தாமிருந்த வேலையில் அமர்த்திச் சென்றனர். அவ் வேலையி லிருந்தபடியே 1880-ஆம் ஆண்டில் இவர் எம். ஏ. பட்டம் பெற்றார். இவ்வாறு ஆசிரியத் தொழிலில் ஈடுபட்டிருந்த காலத்திலும் தமிழிலக்கிய வளர்ச்சிக்கான உழைப்பை இவர் கைவிடவில்லை. திருநெல்வேலியில் எழுதத் தொடங்கிய மனோன்மணியம், நூற்றொகை விளக்கம் என்னும் நூல்களை இவர் இங்குச் செவ்வனே யெழுதி முடித்தனர்.

இங்கிலையில், திருவனந்தபுரம் அரசர் அவர்கள் இவரது கல்வித் திறத்தைக் கேள்வியுற்றுத் தம் அரண்மனையில் சிரஸ்த தார் என்னும் உயர்ந்த வேலையில் இவரை அமர்த்தினார். இவர்தம் பெருங்கல்விக்கும் மனநிலைமைக்கும் மடிமிக்க அவ்வேலை பொருந்தியதா யில்லை. சின்னாட்களில் டாக்டர் ஹார்வி துரையவர்கள் அரசர்கல்லூரிக்குத் தலைமையாசிரியராகவந்து அமர்ந்தவுடன் அறிவுநூற் புலவர் வேலைக்குத் தக்கவர் சுந்தரம்பிள்ளை யவர்களே யென்று கண்டு அவரை அவ் வேலையில் மறுபடி அமர்த்திக்கொண்டார். பிள்ளையவர்கள் அந்நாள்முதல் தமது இறுதிக்காலம்வரை அப்பேராசிரியர் வேலையிலேயே யிருந்து, அறிவுநூற் பொருள்களை மாணவர்கட்கு அவாவுண்டாம்படி பெருந்திறமையுடன் கற்பித்து வந்தனர். அவருடைய பரந்த நோக்கமும், நகைச்சுவைப் போக்கும், நுண்ணறிவும் கல்லூரியாசிரியர்களாலும், மாணவர்களாலும், ஏனையோராலும் பெரிதும் பாராட்டப்பட்டன.

இவர் கல்வித்திறமையினை யறிந்த சென்னை அரசியலார் இவருக்கு ராய் பகதூர்ப் பட்டத்தை யளித்தனர். சென்

லேப் பல்கலைக் கழகத்தார் இவரை அக்கழகத்தின் உறுப்பின ராகத் தேர்ந்துகொண்டனர்.

பிள்ளையவர்கள் கடவுட்பற்றில் மிக விஞ்சியவ ரென்று முன்சொல்லப்பட்டது. இவர் தாய்மொழி முன்னேற்றத் திற்கென்று ஓயாது பாடுபட்டவர்; எளியவாழ்க்கை நடத்து பவர். இவர் மக்களை நற்பண்புகள்பற்றி மதிப்பவரே யன்றிச் செல்வநிலை யுன்னி மதிப்பவ ரல்லர். மேனாட்டு அறிவுநூற் பயிற்சியும், நாகரிகமும் இவர்தம் கடவுட்பற்றை யும் மொழிப்பற்றையும் நல்லொழுக்கத்தையும் வலுப்படுத்தி னவே யன்றிச் சிறிதுங் குறைக்கவில்லை. இவர் சிறு உதவி செய்தாரையும் மறவாது நன்றிபாராட்டும் இயல்புடையவர்.

ஆசிரியர் சுந்தரம்பிள்ளை நூற்றொகை விளக்கம், மனோன்மணியம் என்னும் இரு நூல்கள் இயற்றியுள்ளார் என்று சொன்னோம். அவற்றுள் நூற்றொகை விளக்கமென் பது தமிழ் உரைநடை நூலுக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்குவது; இதன்கண் தற்கால நிலைமைக்கேற்ப நூல்களை எவ்வெவ்வகையாக வகுத்து அமைக்கலாமென்பதும், அவ்வவ் வகையின் சிறப்பும், முறைமையும், பொருளும் என்ன வென்ப தும் ஒழுங்காக எடுத்து விளக்கிக்காட்டப்பட் டிருக்கின் றன. மற்றொருநூலாகிய மனோன்மணியம் ஒரு நாடகநூல். அது ஷேக்ஸ்பியர் என்னும் ஆங்கிலப் பெருங்கவிஞர் இயற்றி யுள்ள நாடகங்களின் முறையைப் பின்பற்றி அமைக்கப்பட்ட தாய் இலக்கிய நாடகத்தமிழுக்கே ஓர் எடுத்துக்காட்டாகத் தலை சிறந்து விளங்குகின்றது. கற்றோ ரவைக்கண்ணே யன்றி மற் றோரவையில் இதனை நடித்துக்காட்ட வியலாதென்று பிள்ளை யவர்களே சொல்லியுள்ளார்கள். எனினும், ஏனைய வகைகளில் இதன்கண் எவ்வித குறைபாடும் இயம்பவொண்ணாது.

பிள்ளையவர்கள் சிறந்த இந் நூல்களையே யன்றி, பத்துப் பாட்டு என்னும் பொருள்பற்றியும், ஞானசம்பந்தர் காலவாராய்ச்சி என்னும் பொருள்பற்றியும் ஆங்கிலத்தில் சில கட்டுரைகள் சென்னைக் கிறித்தவக் கல்லூரித் திங்களிதழில் எழுதிவைத்துள்ளார்கள். இவற்றுள், பத்துப்பாட்டென்பது மதுரையின்கண் இருந்த கடைச்சங்கப் புலவர்கள் தொகுத்து வைத்த நூல்களில் ஒன்று. இதன்கண் பண்டைத்தமிழர் தெய்வ வழிபாடும், தமிழ்மன்னர் கொடைச் சிறப்பும், தமிழர் நிலப் பாகுபாடும் ஆகிய இவை விரிவாகக் கூறப்பட்டுள்ளன. இந் நூலைச் செவ்வனே ஆராய்ந்து தாம் கண்ட முடிபுகளைப் பிள்ளையவர்கள் ஆங்கில இதழில் எழுதியுள்ளார்கள். சைவ சமயாசாரியர்கள் நால்வரில் ஒருவராகிய திருஞானசம்பந்தர் கி. பி. எழாம் நூற்றாண்டிற் றிகழ்ந்திருந்தார் என்பதை மறுக்கொணாவகையில் ஆராய்ந்து இவர் முடிவுசெய்து எழுதிய சிறந்த ஆங்கிலக் கட்டுரையே, "ஞானசம்பந்தர் காலவாராய்ச்சி" என்பதாகும். இவருக்குப் பின்னல் அறிஞர் பலர் திருஞானசம்பந்தர் காலத்தை ஆராயத் தொடங்கி இவர் கண்டுவைத்த முடிபிற்கே வந்து சேர்ந்தனர். இஃது இவருடைய ஆராய்ச்சித்திறனுக் கொரு சிறந்த சான்றாகும்.

ஆசிரியர் சுந்தரம்பிள்ளை யவர்கள் இத்தகைய அரிய ஆராய்ச்சிப் பேருழைப்பினாலேயே ஆயுள் குன்றித் தமது நாற்பத்திரண்டாம் வயதில் அழியாவாழ்வு பெற்றார்கள். 'நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்,' என்ற முதுமொழிக்கிணங்க அவர்கள் வாழ்நாள் முழுமையும் கழித்து வந்தார்கள். மிக்க பொருள் தேடி ஆரவாரத்துடன் வாழ்வது வாழ்க்கையன்று, கடவுட்பற்றுடன், நல்லறிவு நல்லொழுக்

கங்களைக்கொண்டு எவ்வழியிலும் பிறர்க்குப் பயன்பட வாழ்தலே வாழ்க்கை என்னும் சீரிய கோட்பாட்டிற்கு ஆசிரியர் சுந்தரம்பிள்ளை யவர்களே சிறந்த எடுத்துக்காட்டாவார்கள்.

பயிற்சி

1. அறுவை வாணிகம், அருள்நூல், நெட்டுரு, இயற்றமிழ், மடி, பரந்த நோக்கம், நகைச்சுவைப் போக்கு, எடுத்துக் காட்டு, நாடகத் தமிழ், திங்கள் இதழ், கொடைச்சிறப்பு, பாகுபாடு, சமயாசாரியர், மறுக்கொணு வகை, வையகம், ஆரவாரம், கோட்பாடு.
2. ஆசிரியர் சுந்தரம் பிள்ளையின் இளமைப்பருவத்தைப் பற்றி உனக்கென்ன தெரியும்?
3. அமர்ந்தனர், மாறியது, அரிய, இல்லை, அமர்த்தி, உயர்ந்த, கற்பித்துவந்தனர், பெரிதும், நடத்துபவர், அல்லர், குறைக்க, உடையவர், விளங்குவது, அன்றி, ஒண்ணுது, அழியா—இவை வினைச்சொற்களில் எவ்வெவ்வகையைச் சேர்ந்தன? ஏதாவது நான்கு சொற்களுக்குப் பகுதி விகுதி முதலிய காட்டு.
4. பேராசிரியர் சுந்தரம் பிள்ளையின் கல்வித்திறனைப் பற்றியும் குணதிசயங்களைப் பற்றியும் இரண்டு சிறு கட்டுரைகள் எழுது.

---

௧௮. நீர்வேட்கை

மக்கள் உயிர்வாழ்வதற்கு நீர் மிகவும் இன்றியமையாதது. "நீரின்றமையா துலகு" என்ற ஒரு சிறு தொடரால் ஆசிரியர் திருவள்ளுவர் இவ்வுண்மையை நன்கு ஓதி உணரவைத்தார். தோற்றப் பெற்ற இவ்வுலகத்தைப் புரக்குங் கடவுளாக இந்துமதத்தினர் கொண்டுபோற்றும் திரு.

மால் மாபெரும் நீர்நிலையாகிய கடலின்கண் பள்ளிகொண்டிருப்பதும் இவ்வுண்மையையே விளக்குவது போலும்!

இவ்வுலகம் மூன்றிலொரு பங்கு நிலமாகவும், மற்ற இரண்டு பங்கும் நீராகவும் அமைந்துள்ளதென அறிஞர் கூறுவர். "அண்டத்திலுள்ளது பிண்டத்தில்" என்ற ஆன்றோர் வழக்கின்படி, மக்கள்தம் உடலமைப்பும் அவ்வாறே ஒரு பங்கு என்புந் தசையுமாகவும், இருபங்கு செந்நீராகவும் இருக்கின்றது. எனவே, மக்கள் உடலமைப்பிற்கு நீரே மிகுதியாய் வேண்டப்படும் என்பது தெளிவாகின்றது. உடல்நலங் கெட்டுப் பெருநலிவுற்றுக் கிடக்கும் நோயாளிகள் பலர்க்குத் திங்கட்கணக்காக உண்டிகொடாமல், நீர்சேர்ந்த கஞ்சி, குடிநீர், பழச்சாறு முதலியவற்றைமட்டுங் கொடுத்து அவர்களை உயிரோடிருக்கச் செய்யும் முறையே இதற்குச் சான்றாம். பொதுவாக, மக்கள் ஒருநாளில் உணவை மூன்று தடவைகளே உட்கொள்ள, நீரையோ அடிக்கடி அருந்தக் காண்கின்றோம். உடலுக்குப் போதிய உணவு இல்லாமற் போயின் பசியுண்டாவதுபோன்றே, போதிய நீரில்லாமற் போயின் நீர்வேட்கையும் உண்டாகின்றது.

உடலுக்குட் செல்லும் உணவுப் பொருள்கள் நன்றாகச் செரித்து அவற்றின் சத்துப் பொருள் செந்நீரோடு கலப்புறுதற்கு நெடுநேரம் ஆகின்றது. அவ்வளவு நேரமும் உடலுறுப்புக்கள் ஓய்வென்பதில்லாமல் வேலை செய்துகொண்டே இருக்கின்றன. அதனால் உடல் வெப்பங்கொண்டு அடிக்கடி இளைப்படைகின்றது. இனி உடலுழைப்பையோ, அறிவுழைப்பையோ மேற்கொண் டுழைக்குங்போதும் உடல் இளைப்படைகின்றது. உடல் இவ்வாறு இளைப்புறுவதை ஓயாது வெளிப்படும் வியர்வையாற் காணலாம். வியர்வை.

வெளிப்படுதலால் உடலிலிருக்கவேண்டிய நீரின் அளவு குறைவுறுகின்றது; நீரளவு குறையும்போ தெல்லாம் நீர் வேட்கை யுண்டாகின்றது. இவ்வாறு உண்டாகும் நீர் வேட்கையும் காற்றின் வெப்பதட்பங்களுக் கேற்றவாறு மிக்கோ குறைந்தோ காணப்படும். கோடைகாலத்தில் நீரைப் பன்முறை அருந்துவதுபோன்று மாரிகாலத்தில் மக்கள் அருந்தாமை யாவரும் அறிந்ததே.

பசியை ஒருவாறு அடக்கிக் கொண்டிருந்தாலும் இருக்கலாம்; நீர்வேட்கையைத் தணிக்காமல் இருத்தல் அரிது. பெரியதொரு மணல்வெளியைக் கோடைகாலத்திற் கடந்து செல்வா னொருவன் அருகில் நீர்நிலை யொன்றுங் காணப் பெறுதவிடத்துப் படும்பாட்டிற்கு அளவுமுண்டோ? வெயிற் கொடுமையால் மணற் பரப்பிடைத் தோன்றும் பேய்த்தேர் என்னுங் கானல்நீரை மெய்யான நீரென நம்பி அவன் ஆவலோடு அருந்த முயன்று ஏமாறுகின்ற னல்லனோ? பெருங் கூட்டமாகச் செல்லும் வணிகச் சாத்தினரும் கோடையால் வெம்பி நீர்காணுது தவிக்க நேரிடுங்கால், தாங்கள் ஏறிச் செல்லும் ஒட்டகங்களுள் ஒன்றை வெட்டி அதன் குடரிலுள்ள நீர்ப்பையிற் காணப்படும் நீரை யெடுத்து அருந்துகின்றார்க ளென்று கூறப்படுகின்றதன்றோ? உயிர்க்கொலையாகிய இக் கொடுமையினும் நீர்வேட்கையின் கொடுமை பெரிதென்பது இதனல் நன்கு விளங்கும். மணல்வெளியே யன்றி மக்கள் வாழும் ஊரின்கண் வழிச்செல்வோரும் நாவறட்சி யுற்றுக் குடிக்க நீர் கிட்டுமுன் படும்பாடு சிறிதேயோ? நீர்வேட்கையின் கொடுமை மிகவுங் கொடியதென்று நந்நாட்டார் முன்னர்க் கண்டறிந்தமையினால்தான் விழாக் காலங்களிலும், சாலையோரங்களிலும் தண்ணீர்ப் பந்தர் வைக்கும்

முறையை அறமாகக் கருதிக் கையாண்டுவந்தனர். " தண்ணீரும் வாரும் " என்றார் நம் நகைமுதாட்டியார்.

இனி, அருந்தும் நீர் தூயதாய் இருத்தல் வேண்டுமென்பது கூறாதே யமையும். தூய்மை யல்லாத நீரை அருந்துவதனாலேயே பல்வகைத்தான நச்சுநோய்கள் மக்களை வந்து வாட்டுகின்றன. நீரின் தன்மையோ அது காணப்படும் நிலத்தின் தன்மையைப் பொறுத்தது. எனவே, குடிக்கும் நீரை நன்றாகக் காய்ச்சி வடிகட்டிக் குடித்தல் ஒருபடித்தாக மிகவுஞ் சிறந்த முறையாகும். கலங்கல் நீரைத் தேற்றாங்கொட்டை போட்டுத் தெளியவைத்துக் குடிக்கும் முறை நம் நாட்டிற் சில பகுதிகளிற் கையாளப்பட்டு வருகிறது. நிலையாகத் தங்கியிருக்கும் ஏரி, குளம் முதலியவற்றிலுள்ள நீரைவிட ஓடிக்கொண்டிருக்கும் ஆற்று நீர் சிறந்ததென்பதை யாவரும் அறிவர்.

சிலர் நீர்வேட்கையுற்ற காலத்துக் கொதிக்கின்ற நீரை அருந்த விழைகின்றனர். இஃது அத்துணைச் சிறந்த தன்று. உடற்சூட்டிற்கு மேற்பட்ட சூட்டோடுகூடிய நீரை அருந்துவதால் உடல்நரம்புகள் தளர்வுறும்; மென்மை பொருந்திய சில நுண்ணிய உடலுறுப்புக்கள் புண்படும். கொதிக்கக் காய்ச்சிய நீரை ஆறவைத்து அருந்துதல் உடல்நலமுள்ளோர்க்கும் இல்லோர்க்கும் ஒத்த நன்முறையாம். காப்பி, தேநீர், காற்றூட்டப்பெற்ற தீநீர் முதலியவற்றை வேட்கை தணிக்க உட்கொள்ளுதல் நோயை விலைகொடுத்து வாங்குவது போலாம். நாரத்தை, எலுமிச்சை, கொடிமுந்திரி முதலிய பழங்களின் சாறு கிடைத்து அவற்றை நீரோடு கலந்துண்ணுதலோ உடலுக்கு நன்மை பயப்பதாகும். அவை வேட்கை தணிப்பதுமட்டுமின்றி உடலினுள்ள செந்நீரையுந் தூய்மை செய்து நச்சுப்பூச்சிகள் பலவற்றையும் மாய்க்கின்றன.

பயிற்சி

1. பற்றிக்கொள்ளல், அண்டம், பிண்டம், வெப்பதட்பம், வேட்கை, பேய்த்தேர், வணிகச்சாத்தினர், வறட்சி, விழா, ஒருபடித்து, தூய்மை.
2. நீர்வேட்கையின் கொடுமைக்கு உதாரணங்கள் காட்டு.
3. ஒருமைச் சொற்களுக்குப் பன்மைச்சொற்கள் காண்க.
4. உடலில் நீர்வேட்கை ஏன் உண்டாகின்றது?

கக. புத்தர் பொருண்மொழிகள்

1. பெற்றோர் கடமைகள்

பெற்றோர்களே!

1. மக்களைக் கொடிய வழியினின் றொழிப்பீர்.
2. நற்செயல் களையவர் நாடிடச் செய்வீர்.
3. கருத்தனக் கல்வியைக் கற்றிடச் செய்வீர்.
4. பண்புள பதிபத் தினிகளைச் சேர்ப்பீர்.

2. மக்களின் கடமைகள்

மக்காள்!

1. வளர்த்த பெற்றோரைப்பின் வளர்த்திட நினைமின்.
2. மனைவிமக் கட்கா வருந்தி யுழைமின்.
3. குலத்திற் கியைந்த கடமையைக் கொண்மின்.
4. முன்னோர் தேட்டைப் பொன்னெனப் போற்றுமின்.

3. மாணவர் கடமைகள்

மாணவர்காள்!

1. ஆசிரியரைக்கண் டன்புட னெழுமின்.
2. இருகை கூப்பிப் பிணையடி தொழுமின்.

3. ஏவுகட் டளைக்கே யெதிர்பார்த் திருமின்.
4. போதித் திடுநற் பொருண்மொழி போற்றுமின்.

4. ஆசிரியரின் கடமைகள்

ஆசிரியர்காள் !

1. மாணவர் தமைநல் வழியிற் பயிற்றுமின்.
2. உலகறி வனைத்து மொழியா துணர்த்துமின்.
3. இலக்கிய விலக்கண வெழில்பெறச் செய்மின்.
4. காணு விடத்தவர் கல்வியைப் புகழ்மின்.

5. இல்லறத்தோர்களின் கடமை

இல்லறத்தோர்களே !

1. அன்புடை மொழிகளான் மன்பதை போற்றுமின்
2. விருப்புடைச் செயல்களால் விருந்தினை யளிமின்.
3. அற்றார் தம்மை யுற்று ரென்மின்.
4. அமிழ்தே யாயினு மவர்க்கிட் டுண்மின்.

6. நண்பர்களின் கடமைகள்

நண்பர்காள் !

1. நேசரைப் புறத்தே நெஞ்சாரப் புகழ்மின்.
2. நண்பர்தந் நலனை நாடொறும் நாடுமின்.
3. இடுக்கட் படுங்கால் எதிர்வந்து காமின்.
4. அன்பனை வறுமையி லகல வொண்ணாது.

7. தலைவர்களின் கடமைகள்

தலைவரே !

1. ஊழியர் வலிமைக் குகந்தபணி கொடுப்பீர்.
2. செய்பணிக் கிசைந்த கூலியைச் சிதையேல்.

3. ஊழியர்க் குண்டாம் நோயினை யொழித்திடும்.
4. ஓய்வுநாள் கொடுத்தவ ரூக்கந்தைப் பெருக்கிடும்.

8. தொழிலாளர்களின் கடமை

தொழிலாளர்காள் !
1. காலையில் எழுந்து கருதுமின் செய்தொழில்.
2. பெற்றதைக் கொண்டு பெருமகிழ் வுறுமின்.
3. ஊக்கங் கொண்டே யுயர்நிலை யடைமின்.
4. தலைவனைத் தூற்றுந் தவற்றினை யொழிமின்.

பயிற்சி

1. பதிபத்தினி, தேட்டை, இணையடி, பொருண்மொழி, நெஞ்சார்தல், கா, இடுக்கண், ஓய்வு நாள், தொழில் கருதுதல், மன்பதை.
2. மாணவரையும், நேசரையும் ஏன் புறத்தே புகழ வேண்டும்?
3. ஐந்தாவது, ஆறாவது, ஏழாவது வேற்றுமைகள் கொண்ட மொழிகளை யெடுத்துப் பொருள் கூறு.
4. இரண்டு திறத்தவர்களை யெடுத்துக்கொண்டு அவர்களின் கடமைகளைப் பற்றிக் காரணங்கள் காட்டி உன் சொந்த மொழியிற் பப்பத்து வாக்கியங்கள் எழுது.

---

௨0. எக்ஸ்-ரே (X—Ray)

பகலில் சூரியனது ஒளியும் இராக்காலங்களில் விளக்கு வெளிச்சமும் நமக்கு இன்றியமையாதனவாக இருக்கின்றன. ஒளியின் உதவியினாலேயே உலகிலுள்ள பொருள்கள் அனைத்தையும் நாம் காணுகின்றோம். ஒளி மக்களுக்கு எத்தனையோ வகைகளிற் பயன்படுகின்றது. ஒளியின் தன்மை

களை ஆராய்ந்துபார்க்கும்பொழுது அது ஓர் வியக்கத்தகு பொருளாக இருக்கின்றது.

ஒளியானது மிக நுண்ணிய அலைகளால் ஆகியது. இந்த அலைகளை நீரலைகளுக்கு ஒருவாறு ஒப்பிடலாம். ஒளியலைகள் ஒரே அளவுடையன அல்ல. இவற்றுட் சில நீண்டும், மற்றும் சில குறுகியும் உள்ளன. ஒளியலைகளின் அளவுக்குத் தகுந்தவாறு நிறங்கள் தோன்றுகின்றன. வான வில்லில் சிவப்புமுதல் நீலம் ஈறாக ஏழு நிறங்களைக் காணலாம். சிவப்பு ஒளியின் அலைகள் நீண்டும், நீல வொளியின் அலைகள் குறுகியும் இருக்கின்றன. இவற்றின் இடையில் உள்ள நிறங்களின் அலைகள் நடுத்தரமான அளவுடையவை. நாம் காணும் இவ்வேழு நிறங்களைத் தவிர ஏனைய ஒளிக்கதிர்கள் நம் கண்ணுக்குப் புலப்படாதனவாக இருக்கின்றன. சிவப்பு ஒளிக்கு மேலுள்ள அலைகள் மிகப் பெரியவை யாதலாலும் நீலவொளிக்குக் கீழுள்ள அலைகள் மிகச் சிறியவை யாதலாலும் அவை நம் கண்ணிற் படுவதில்லை. கண்ணுக்கு எட்டாத இவ்வொளிக் கதிர்கள் மிகுந்த ஆற்றல் உடையன வாக இருக்கின்றன.

குறுகிய அலைகளை உடையதும், நிறைந்த ஆற்றல் உடையதுமான நீலவொளிக் கதிர் எக்ஸ்-ரே எனப்படும். இவ்வொளியை 895-ஆம் ஆண்டில் ராண்ட்ஜன் (Rontgen) என்னும் பேரறிஞர் கண்டுபிடித்தார். இவர் ஒருநாள் காற்று நீக்கப்பட்ட கண்ணாடிக் குழாயொன்றில் மின்சாரத்தைப் பாய்ச்சி ஆராய்ச்சி செய்துகொண்டிருந்தார். அக்குழாய் ஒரு கறுப்பு மூடியால் மறைக்கப்பட்டிருந்தது. அதனுள் மின்சாரத்தைப் பாய்ச்சியவுடன் கிடைசென்று அருகில் இருந்த பொருள்கள் எல்லாம் நீலநிறத்துடன் மின்னத் தொடங்கின.

இதனைக் கண்டு அப்பண்டிதர் மிகவும் வியப்புற்றார். சுற்றிலும் இருந்த பொருள்களை மிளிரும்படி செய்தது கண்ணுக்குப் புலப்படாத நீலவொளி என்பதையும், அவ்வொளி கண்ணாடிக்



குழாயினுள்ளே யிருந்து கறுப்பு மூடியைத் துளைத்துக் கொண்டு வெளியே வந்திருத்தல் வேண்டுமென்பதையும் அவர் கண்டறிந்தார்.

எக்ஸ்-ரே என்னும் இவ்வரிய நீலவொளி கல், மரம் முதலிய எல்லாக் கெட்டிப்பொருள்களையும் தங்கு தடையின்றி

ஊடுருவிச் செல்லும் ஆற்றல் வாய்ந்தது. இந்த ஒளியின் உதவியால் நமது உடலைப் படம் பிடித்துப் பார்க்கும் பொழுது உள்ளே இருக்கும் எலும்பு முதலியன நன்கு புலப்படுகின்றன. எக்ஸ்-ரே படத்தில், தசைகளின் நிழல் மெல்லியதாகவும், எலும்புகளின் நிழல் கடிப்பாகவும் தெரிகின்றன. இந் நிழற்படங்களுக்கு எக்ஸ்-ரேடியோக்ராஃப்ஸ் என்று பெயர். உடலின் உள்ளே எலும்புகள் ஏதேனும் முறிந்து போய்விடில் எக்ஸ்-ரேயின் உதவியால் படம் பிடித்து அதிலிருந்து எலும்பு நொறுங்கிய இடத்தைக் கண்டு பிடித்து அதனை எளிதிற் செம்மைப் படுத்திவிடலாம். இதுவுமன்றி நோயுள்ள இடங்களில் இவ்வொளியைப் படும்படி செய்வதால் பல கொடிய நோய்கள் நீங்கிவிடுகின்றன.

எக்ஸ்-ரே என்னும் இவ்வியத்தகு ஒளி கல், மரம், தசை முதலியவற்றை எங்ஙனம் தாண்டிச் செல்கின்றது? ஏனைய ஒளிக்கதிர்கள் ஏன் இங்ஙனம் செல்வதில்லை? எக்ஸ்-ரே என்னும் நீலவொளியின் அலைகள் மிகச் சிறியவை. ஒவ்வொரு அலையும் ஓர் அங்குலத்தில் $\left(\frac{1}{25,00,00,000}\right)$ இருபத்தைந்து கோடியில் ஒருபங்கு இருக்குமெனா அறிவியற் புலவர்கள் கணக்கிட்டிருக்கின்றனர். இதனால்தான் நுண்ணிய நீல அலைகள் கல், மரம் முதலிய எல்லாப் பொருள்களையும் எளிதில் துளைத்துச் செல்கின்றன.

சூரிய வெளிச்சத்தில் நம் கண்ணுக்கு எட்டாது மறைந்து நிற்கும் இந்நீலவொளி மக்கள் உயிர்வாழ்வதற்கு இன்றியமையாததாக இருக்கின்றது. நாம் வெயிலிற் காய்வதால் நம் உடல் நீலவொளியை உறிஞ்சி உரம்பெறுகின்றது. இதனால்தான் பனிமிகுந்த ஆங்கில நாடுகளில் வெயிலிற்காயும் வழக்கம் மிகுதியாக இருக்கின்றது.

சூரியவெளிச்சம் இயற்கையாகவே பல நோய்களைப் போக்கு கின்றது. சூரிய வெளிச்சம் இல்லாத காலங்களில் நில வொளி யைச் செயற்கைமுறையிலும் உண்டாக்கி நோயாளிகளுக்குக் கொடுப்பது முண்டு. நாம் உட்கொள்ளும் உணவிலும் இவ் வொளியைப் பாய்ச்சி அதனை உரம் உடையதாகச்செய்யலாம். இங்ஙனம் உரம் ஏற்றிய உணவைக் குழந்தைகளுக்குக் கொடுத்தால் எலும்புகளும் பற்களும் நன்கு வளர்ச்சி யடையும்.

கண்ணுக்குத் தெரியாத சிவப்பு ஒளியும் (Infra-Red Rays) பலதிறப்பட்ட நோய்களைப் போக்கப் பயன்படுகின் றது. 1929-ஆம் ஆண்டில் ஐந்தாவது ஜார்ஜ் அரசர் நோய் வாய்ப்பட்டிருந்தபொழுது இவ்வொளிதான் மிகவும் பயன் பட்டது. இதன் உதவியால் இருட்டுக் காலங்களிலும், பனிமூடி இருக்கும் வேளைகளிலும் புகைப்படம் பிடிக்கலாம். எதிரி லுள்ள பொருள் பனியினாலோ புகையினாலோ முழுவதும் மறைந்து கிடக்கும்போது அதனை எங்ஙனம் படம் பிடிப் பது? நம் கண்ணுக்குப் புலனாகும் ஒளியலைகளை மட்டும் பனியும் புகையும் தடுத்து விடக்கூடும். ஆயினும் நம் கண் ணுக்குப் புலப்படாத சிவப்பு அலைகளோ மறைக்கும் பொருள் கள் யாவற்றையும் ஊடுருவிக்கொண்டு வெளியில்வருகின்றன. இவ் வொளிக் கதிர்கள் படம் பிடிக்கும் கருவியின்மேல் பட்ட தும் பனியினால் மறைந்திருக்கும் பொருள்களும் படத்தில் பதிகின்றன.

இத்தகைய படம்பிடிக்கும் கருவிகள் கப்பல்களில் வைக்கப்பட்டிருக்கின்றன. கடலில் பனி மூடியிருக்கும் காலங்களில் கப்பலுக்கு எதிரில் மறைந்திருக்கும் பனிமலைக ளும் பாறைகளும் இக் கருவிகளிற் பதிகின்றன. மாலுமி

படத்தைப் பார்த்துக் கொண்டு பனிமலைகளிலும் பாறைகளிலும் கப்பலை மோதவிடாமல் காத்துக் கொள்வான். இக் கருவிகள் எதிரில் வருங் கப்பல்களையும் படம்பிடித்துக் காட்டுவதால்; மாலுமி தன் கப்பலை ஒருபுறமாக விலக்கிக்கொண்டு அவை போவதற்கு வழிவிடுவான். சிவப்பு ஒளிப்படம் இல்லாவிடில் பனிக்காலங்களில் கப்பல்கள் ஒன்றோடொன்று மோதி உடைந்துபோக நேரிடும்.

—N. குழந்தைவேலன்.

பயிற்சி

1. வியத்தகுபொருள், வானவில், ஆய்வுகள், தங்கு தடை, ஊடுருவிச் செல்லல், பலதிறப்பட்ட, உறிஞ்சுதல்.
2. சூரியனுடைய எந்த வொளிகள் மக்கட்கு முதன்மையானவையாய்க் காணப்படுகின்றன? ஏன்?
3. (a) இவை யனைத்தும் ஒரே அளவுடையன அல்ல—இதனை உடன்பாட்டு வாக்கியமாக்கு.

   (b) இதனைக் கண்டு அப்பண்டிதர் பெரிதும் வியப்புற்றார்-இதனை எதிர்மறை வாக்கியமாக்கு.
4. வெயிலிற் காய்வது எவ்வாறு நன்மை பயக்கின்றது?

உக. அறிவியற்புலவர் நால்வர்

க. சர் ஐஸாக் நியூட்டன்

ஆங்கிலநாட்டு லின்கன் மாகாணத்தைச் சேர்ந்த ஊல்ஸ் தார்ப்பு என்னும் பேரூர் ஒன்றின்கண் 1642-ஆம் ஆண்டு சர் ஐஸாக் நியூட்டன் என்னும் பேரறிஞர் பிறந்தார். இவருக்கு மூன்று வயது முடியு முன்னரே இவர்தம் தந்தையார் உயிர் நீப்ப, இவருடைய தாய்மாமன் இவரைப் பள்ளியிலமர்த்திப்

படிக்கச்செய்துவந்தார். நியூட்டன் பள்ளிப்பிள்ளையாக விருந்தபோதே காற்றுப்பொறி யமைப்பது, நீர்க்கடிகாரஞ் செய்வது, வாலில் விளக்குக் கூண்டு கட்டிக் காற்றாடி விடுவது முதலிய பல விந்தையான விளையாட்டுக்களை இயல்பாகவே விளையாடிவந்தார். இவ்வாறு இவர் விந்தையான விளையாட்டிலேயே நோக்கம் வைத்திருந்தமையின், வகுப்புப் பாடங்களி லிவருக்கு ஊக்கங் குறையவே சின்னாட்களி லிவர் பள்ளிக்குச் செல்வதையே விட்டுவிட்டார். எனினும், இவருடைய மாமன் கல்வி கற்காதிருத்தல் கூடாதென்று வற்புறுத்தவே, சில காலத்திற்குப் பிறகு இவர் மறுபடி பள்ளிக்குச் சென்று கல்வி பயின்று, பல்கலைக் கழகத்திலுஞ்சேர்ந்து கலையறிவு நிரம்பப்பெற்றார்.



இருந்தாலும் நடந்தாலும் உண்டாலும் உறங்கினாலும் பொருள்களை ஆராய்வதிலேயே நியூட்டன் கருத்தூன்றினவராயிருந்தார். வானோக்கி யெறியப்பட்ட ஒரு கல் கீழ் நோக்கித் தரையின்கண்ணே வந்து விழுவதேன் என்றது குறித்து இவர் நீண்டதோ ராராய்ச்சிசெய்து, பொருள்களைத் தன்னிடம் இழுத்துக்கொள்ளும் ஆற்றல் இம்மாநிலத்துக் குண்டென்று முடிவுகட்டினார்; இம் முடிபையே அடிப்படையாகக்கொண்டு பெரும்பொருள்கள் சிறுபொருள்களை இழுக்குமென்னுந் தீர்மானத்துக்கும் வந்தார். இவரே, பகல

வனை நிலம் சுற்றி வருவதற்கும், நிலத்தைத் திங்கள் சுற்றி வருவதற்கும் இதுவே காரணமென்றும், இக் கவர்ச்சிவன்மை யின் பயனுக வான்மீன்கள் ஒன்றையொன்று இழுத்துக் கொண்டு ஒன்றைவிட்டொன்று மீறி யகன்றுபோகாமல் வான்வெளியின்கண்ணே தத்தம் இடங்களில் நிலைத்திருக்கின் றன வென்றும் முடிவுகட்டினர். இஃதே இவர் ஆராய்ச்சி களில் தலைசிறந்ததாகும். மேலும், பகலவனொளியிற் பன்னி றக் கதிர்கள் உண்டென்று கண்டுபிடித்துக் காட்டிப் போந்த வரும், 1699-ஆம் ஆண்டில் ஆங்கிலப் பஞ்சாங்கத்தை மாற்றி யமைத்தவரும், **கலிலியோவின்** தொலைநோக்காடியைத் திருத்தி யமைத்தவரும் இவரே. இவர் இலண்டன்மாநகரில் 1727-ஆம் ஆண்டு விண்ணுல கெய்தினர்.

உ. தாமஸ் ஆல்வா எடிசன்

பகலவ ஞெளியினை ஆராய்ச்சி செய்து பாரினுள்ளார்க் குப் பல்பயனளித்த ஆங்கில நாட் டறிஞர்க்குப்பின், அமெ ரிக்கா நாட்டின்கண் தோன் றிய **தாமஸ் ஆல்வா எடிசன்** என்பார் மின்சார வொளியி னாற்றலைப் பற்பலவா றாராய்ந்து, பல சிறப்புற்ற பயனளிக்குங் கருவிகளைக் கண்டுபிடித்துக் குவலயத் தையே மகிழ்ச்சிக் கடலில் திளைக்கவைத்தார். இவர் **ஓஹியோ** மாகாணத்தின் கண் ணுள்ள **மிலான்** நகரில் ஓர் ஏழைக் குடும்பத்தில் 1847-ஆம் ஆண்டு பெப்ரவரித்திங்கள்



11-ஆம் நாள் பிறந்தார். தாயுந் தந்தையுமே இவருக்கு இளமையிற் கல்வியூட்டிவந்தனர். இவ்வளவிலேயே இவர் ஊக்கத்துடன் கலையாராய்ச்சி செய்யத் தொடங்கிவிட்டார். மின்சார வாராய்ச்சியின்கண்ணேயே இவர் கருத்து மிகவும் ஊன்றிச்சென்றது. பொருளின்றி ஆராய்ச்சியைத் தொடர்ந்து செய்ய இயலுமோ! புகைவண்டியிற் செய்தித்தாள் விற்பதும், தாமே யொரு செய்தித்தாளைப் பதிப்பித்துப் பரப்புவதுமாகிய வேலைகளைச் செய்து பொருள் சேகரிப்பதில் முயன்றுவந்தார் எடிசன். இவ்வாறு ஈட்டியபொருள் முழுவதையும் இவர் ஆராய்ச்சிக்கு வேண்டியவற்றை வாங்குவதிலேயே செலவழித்து வந்தார்.

முதன்முதல் எடிசன் தந்திசெலுத்தக் கற்றுக்கொண்டு, தந்திக் கருவிகளைக் குறைந்த செலவிற் சிறந்தமுறையில் அமைக்கவேண்டுமென ஆவல் கொண்டார். இவர் அவ்வலுவலிலேயே அமர்ந்து ஆராய்ச்சியுஞ் செய்து வந்தார். இவரது முதலாராய்ச்சியின் பயனாக ஒரு தந்திக் கம்பியில் ஒரே முகமாகச் செய்தியனுப்புவதற்கு மாறாக எதிரெதிராகச் செய்திகளை யனுப்புஞ் சிக்கனமுறை கண்டுபிடிக்கப்பட்டது. சின்னாட்களில் எடிசன் பொன்வாணிபப் பங்கு விலைகளை அச்சடிக்குங் கருவிகளைக் கண்டுபிடித்துச் செய்து வைக்க, அவற்றைக் கண்டு வியந்த முதலாளிகள் அவருக்கு ஆயிரக்கணக்கான பொன்கொடுத்து அவற்றைத் தங்கட்கே யுரிமையாக்கிக்கொண்டனர். எடிசன் இப்பொருளைக்கொண்டு ஒன்றுக்கிரண்டாகத் தமக்கெனத் தொழிற்சாலைகளை யேற்படுத்திக் கொண்டார்.

இவருடைய புதுப்புனைவுத் தொழின்முயற்சிகள் நாளுக்குநாள் மிகுதிப்பட, இவ்விரு தொழிற்சாலைகளையும்

விட்டொழித்து, மேன்லோ பார்க் என்னு மிடத்தில் இவர் மிகப் பெரிய தொழிற்சாலை யொன்று நிறுவிக்கொண்டார். இங்கிருந்துகொண்டு இவர் கண்டுபிடித்துச் செய்த ஆராய்ச்சிகளின் பயன்களாவன: தொலைபேசுதல், தந்திவிடுப்பைப் பெருக்குதல், கிராமபோன் என்ற இசைப்பெட்டி, மின்சார வண்டி, நீண்டநேர மெரியும் மின்சார விளக்கு முதலியனவாம். இவர் ஆரஞ்சுமலையி னடிவாரத்தில் வேறொரு தொழில் நிலையமும் ஏற்படுத்தி அங்கே படக்காட்சிக்கருவிகளைப் புனைவு செய்தார். இன்னும் பாறைகளிற் பதிந்துகிடக்கும் இரும்பினை வேறாகப் பிரித்தெடுக்கும் வழிகளையுஞ் செய்துகாட்டினர். ஊணுறக்கம் பாராமலும், ஓய்வென்பதை நாடாமலும், உலகத்துக்கென்று இவ்வாறு பல கருவிகளைப் புதிதாகச் செய்து வைத்தார் இப் பெரியார். இதனை மெச்சிப் பற்பல நாடுகளினின்றும் பலப்பல சிறந்த பரிசுகள் இவருக்கு அனுப்பப்பட்டன. இரவென்றும் பகலென்றும் இல்லாமல் பாடுபட்டு வந்த இவ்வாராய்ச்சிவல்லார் எண்பத்துநான்கு ஆண்டுகள் உழைத்து, 1931-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 18-ஆம் நாள் விண்ணுடைந்தார்.

௩. ஜகதீஸ சந்திர போஸ்

எடிசன் என்னும் அமெரிக்கர் மின்சாரத்தின் தன்மையை ஆராய்ந்து அதன் ஆற்றலைக்கொண்டு பற்பல கருவிகள் புனைந்து உலகத்தினர்க்கு உதவியாகும்படி செய்தார்; ஜகதீஸ சந்திர போஸ் என்னும் வங்காளியர் அம்மின்சாரத்தின் தன்மையை மேன்மேலாராய்ந்து அதன் ஆற்றலினால் உலகம் கனவிலுங் கண்டிராத புதுமைகளை மக்கள் பெரிதும் வியக்குமாறு விளக்கிக் காட்டியுள்ளார். இவர் டாக்கா மாகாணத்

தைச் சேர்ந்த விக்ரம்பூரில் 1858-ஆம் ஆண்டிற் பிறந்தவர். இவர் கல்வியி லூக்கங்கொண்டு கற்றுப் பல்கலைக்கழகத்திற் பயின்றார். பின் இங்கிலாந்து சென்று, அறிவியற்றுறையிற் றேர்ச்சி யடைந்து, சிறந்த பட்டங்கள் பெற்றார். பிறகு இந்தியாவிற்குத் திரும்பிவந்து வங்காள மாகாணத்தின் அரசியற் கல்லூரியிற் பொருணூலாசிரியராக வமர்ந்து நாற்பதாண்டுக்காலம் நற்பணி யியற்றினர்.



இந்தியர்கள் அறிவியற்றுறையில் ஆராய்ச்சிசெய்ய வல்லவரல்லர் என்று மேனாட்டினர் கொண்டிருந்த கொள்கையை அறவே மாற்றி வைத்தவர்களிற் சிறந்தவர் ஜகதீஸராவர். இவர் ஆராய்ச்சிக்கு உதவியாகப் புனைந்து கொண்ட கருவிகளைப் பலர்க்கும் பயன்படும்படி தம் ஆராய்ச்சிச்சாலைகளில் யாவருங் கண்டறிய வைத்தனரேயன்றி, எடிசனைப் போன்று அவற்றைப் பிறர்க்கு விலைப்படுத்திக் கொடுத்துவிடவில்லை. அறிவியற் புலமையைப் பொருள் தேடுவதற்குப் பயன்படுத்தலாகா தென்பது இவர்தங் கொள்கை.

ஜகதீஸர் மின்சாரத்தைப் பலவழிகளிலும் ஆராய்ந்து நிலவுலகத்தார்க்குக் காட்டிய உண்மைகள் இவை: ஒளியின் இயக்கத்திற்கும் மின்சார வியக்கத்திற்கும் ஒற்றுமையுண்டு; செடிகொடி மரங்களும், மக்களையும் விலங்குகளையும்போலவே, உயிருடையன; எல்லா உயிர்களுக்குங்

தொடர்பு உண்டு. கம்பிகளின் உதவியின்றியும் மின்சாரம் வேலைசெய்யும் என்பதை இவர் கருவிகள்மூலம் கண்கூடாகச் செய்துகாட்டினர். மின்சாரவாங்கி யென்னுங் கருவியை இவர் மற்றவர்கள் செய்ததைவிடச் சிறக்கச் செய்தார். மின்சாரத்தைக் கொண்டே, இவர் இரும்பு பொன் போன்ற தனிப் பொருள்முதல் மக்களீறாகவுள்ள எல்லாவற்றிற்கும் ஓரேவிதமான உணர்ச்சி யுண்டென்று காட்டியுள்ளார். மக்கள், விலங்கு, பறவை, மரஞ்செடி கொடிகள் ஆகிய இவையெல்லாம் ஒரே வகையில் உயிர்வாழ்வன வென்றும், மரஞ்செடி கொடிகளுக்கும் உறக்கமும் விழிப்பும் உண்டென்றும் கருவிகண் மூலங் காட்டியிருக்கின்றார். இக் கலையறிஞர் 1937-ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 22-ஆம் நாள் இவ்வுலக வாழ்க்கையை நீத்தார்.

௬. சர் சி. வி. இராமன்

அறிவிய லாராய்ச்சித்துறை மேனாட்டாருக்கே யுரியது என்னுங் கோட்பாட்டினை மறுத்து, அதில் கீழ்நாட்டினராகிய இந்தியருக்கும் பங்குண்டு என வெடுத்துக் காட்டிய அறிவியலறிஞர்களில் சர். சி. வி. இராமனும் ஒருவராவர். இவர் திரிசிரபுரத்தில் 1888-ஆம் ஆண்டிற் பிறந்துவளர்ந்து தமது பதினெட்டா மாண்டிலேயே பல்கலைக்கழகத்திற் சிறந்த பட்டம் பெற்றவர். இவர் மாணவரா யிருந்தபோதே பொருளியல்நூல்களில் தனிப்பற் றுடையவராகக் காணப்பட்டார். இவர் ஒளி ஒலிகளைப் பற்றி ஆராய்ச்சிகள் நடாத்திக் கண்ட உண்மைகளை யவ்வப்போது நம் நாட்டுச் செய்தித்தாள்களிலும் பிறநாட்டுத் தாள்களிலும் வெளிப்படுத்தியுள்ளார்.

இவர் அரசாங்க அலுவல்பெற்றுக் கல்கத்தாவில் உதவிக் கருவூலக் கணக்கதிகாரியாக வேலைபார்த்திருந்தபோது முக்கர்ஜி கல்லூரியிற் பொருணூலாசிரியராக அழைக்கப்பட்டார்; அவ்வழைப்பிற்கிணங்கி மிக்க மேம்பாடும் ஊதியமும் பெறக்கூடிய அரசியற்றுறை யலுவலை விடுத்தார்.



அதனானே பொருளாராய்ச்சியில் இவருக்கிருந்த பேராவல் நன்கு புலப்படுகின்றதன்றோ! கல்லூரியிலிருந்துகொண்டே இவர் விளம்பரப்படுத்திய ஆராய்ச்சிகளைப் பேருவகையோடேற்று மதித்து மேனாட்டு அறிவியற்கழகத்தினர் பலர் மிக உயர்ந்த பட்டம் பரிசுகளை இவருக்கு வழங்கலாயினர். உலகத்தாரால் பெரிதும் மதிக்கப்பட்டுவரும் நோபெல் பரிசும் இவருக்கு அளிக்கப்பட்டது.

அப் பரிசுபெற்ற இவர்தம் ஆராய்ச்சிகள் 'இராமன் விளைவு' என்ற பெயருடன் இவரால் வெளியிடப்பட்டுள்ளன. இந்நூல் பொருள்களின் உண்மைத் தன்மைகளையறிந்துகொள்வதற்கு மிகவும் பயன்படுவதாக இருக்கக்கண்ட மேனாட்டு அறிவியற் புலவர் அதனை மெச்சிக்கொள்கின்றனர். இக்காலை இப்பெரியார் பெங்களூரிலுள்ள இந்திய

அறிவியற் கல்லூரியில் பேராசிரியராக இருந்து நற்றொண்டு புரிந்து வருகின்றனர்.

பயிற்சி

1. பல்கலைக் கழகம், விண்ணுலகெய்தல், செய்தித்தாள், தொலைபேசுதல், அறிவியற்றுறை, இயற்கைப் பொருணூல், பண்பும் பயனும், இயல்புநூல், அக்கறை, போதிய ஊதியம், சீரிய ஒழுக்கம், விழிப்பு, கருவூலம்,
2. போஸ், இராமன்-இவர்களால் இந்தியாவுக்குக் கிடைத்த பெருமை என்ன?
3. விளக்கு + கூண்டு, கருத்து + ஊன்றி, மின்சாரம் + ஒளி, சிக்கனம் + முறை, பொன் + கொடுத்து, பொன் + காசு, தொழில் + சாலை, மரம் + செடி, வாயு + அணுக்கள், கண் + புலன் — இவற்றைச் சேர்த்தெழுது.
4. நியூட்டன், எடிசன், போஸ், இராமன்—இவர்கள் ஒவ்வொருவருங் கண்டுபிடித்த அறிவியற்கலை உண்மைகளில் முதன்மையான ஒவ்வொன்று சொல்லு.

உ௨. நயவஞ்சக நாகம்


(கலி விருத்தம்)

வழுத்துகதை யொன்றுண்டோர் மந்தவிடன் எனும்நாகம்
கொழுத்ததவ ளைக்குலத்தைக் கொன்றுதின்ன வேகருதி,
முழுத்ததவ ளைக்கூட்டம் முயங்கியவோ டைக்கரைமேல்
எழுத்தைநினைந் திருப்பவர்போல் இருந்துதுய ரப்படவே. க

சாலபதன் என்கின்ற தவளையர சனுமங்கோர்
கோலவரித் தவளையெனும் குதிரைவா கனம்ஏறி,

நாலுவகைச் சேனைகளும் நல்அமைச்சர் களும்சூழச்
சிலரொடு மேளவகை சிலதவளை சேவிக்க. ௨

பவனிவரும் வேளையிலே பாம்பரசன் ஒருகரைமேல்
கவலையுடன் இருக்கஅவன் கண்டொருதூ தனையனுப்பி,
" இவனிருக்கும் வகையேதிங் கென்றறிந்து வருக!" என
அவனருகில்சென்று "இவண் நீயார்? இருப்பதேது?" என்றான். ௩



"நாகஇறை நான்.என்பேர் நல்லமந்த விடன்என்பார்
போகிபல சூழஒரு புற்றிலிருந்(து) அரசாள்வேன்;
யோகிதனைத் தீண்டிவிட்டேன். யோகி,'தவளையைச் சுமப்பாய்
ஆகி,அது தரஇரையும் அருந்துவைநீ!' எனச்சபித்தான். ௪

சாபத்தி னாலெனது தலையில்விதி தனைநினைந்தேன்
ஆபத்து நீங்கவுங்கள் அரசனைநான் சுமக்கவந்த
சோபத்தால் இங்கிருந்தேன். தூத!அர சர்க்குரைத்தேன்
ஆபத்து நீக்கிஉங்கட்(கு) அடிமையெனத் திரிவேனே." ௫

எனஉரைத்தான். தூதனும்போய் இவ்வாறே சொலமகிழ்ந்து
தனதமைச்சன் தனையழைத்துச் சாலபதன் கேட்ப, அவன்,

"சினமிகுந்த பணியரசன் தினமும்நமைச் சுமந்தால்நம்
இனநிகர்த்த சாதிஇலை என்றுலகம் புகழும்," என்றான். ௬

அப்பொழுதே சாலபதன் அரவரசன் தனையழைத்தே
"எப்பொழுதும் நமைச்சுமந்தால் இரைஉனக்குத் தினமொன்று
தப்பறவே தருவம்," என்று சத்திபெறக் கூறலுமே,
மெய்ப்புடனே மந்தவிடன் மிகக்குளிர்ந்தான் எதிர்புகுந்தே. ௭

ஏறினான் சாலபத னேந்திநின்றான் மந்தவிடன்
தேறினான் இவரைஇனித் தின்னலாம், எனஎண்ணிச்
சாரில்நான் உனைப்பிரியேன்! சாலபத னே!" என்று
கூறினான். மனமகிழ்ந்து கொடுத்தானங்(கு) ஒருதவளை. ௮

இவ்வாறு தினந்தினமும் இதஞ்சொல்லி இரைநுகர
அவ்வாறு தவளையெலாம் அடங்கலுமே விழுங்கிவிட்டான்.
ஒவ்வாத சாலபதன் ஒருத்தனுமே தனித்து, "நமக்(கு)
எவ்வாறு மோசம்வந்த(து)!" எனக்கருதி இருந்தானே. ௯

மந்தவிட னாருமவன் மனக்கவலை தனையறிந்தே
முந்தியதம் வளைவாயில் முகத்தில்மெள்ள விடுதலுமே,
குந்தியவர் வளைபுகுந்தார். கொடியமந்த விடனாரும்
புந்திமகிழ்ந்(து) அவர்தமையும் புசித்துவிட்டார், அறிவீரே! ௰

பயிற்சி

1. வழுத்துதல், எழுத்து, கோலம், நால்வகைச்சேனை, அமைச்சர், சீலம், சேவித்தல், பவனி, யோகி, சோபம், பணி.
2. இக்கதையினால் நீ தெரிந்து கொண்ட பாடம் என்ன?
3. முதல் வேற்றுமைச் சொற்கள் சிலவெடுத்து, அவற்றை விளி வேற்றுமையாக மாற்றிக் காட்டு.
4. இக்கதையை உன் சொந்த மொழியில் சுருக்கி எழுது.

உ௯. குள்ளப்பெருமாள்

(ஒரு பண்டைக்காலப் புனைகதை)

சித்தியாபுரம் என்னுமோர் நகரத்தை யடுத்தது ஒரு பெருங்காடு. அக்காட்டைக் கடந்தால் சிற்றூர் ஒன்று காணப்படும். அச்சிற்றூரிற் கைம்பெண்ணொருத்தி வாழ்ந்துவந்தாள். அவளுடைய ஒரே மகனாகிய சிறுவன் பதினறு வயதுக்கு மேற்பட்டவனாயினும், பிறந்தபோதிருந்த உருவமும் உயரமுமே யுடையவனாய், அன்றுகண்ட மேனிக்கு அழிவில்லாம லிருந்தான். அதனால் அவனை ஊரார் குள்ளப்பெருமாள் என்றே அழைத்துவந்தனர்.

பதினாட்டைக் குள்ளனாகிய இவனுக்கு ஒருநாள், மக்கள் எல்லாரும் திருமணஞ் செய்துகொள்கின்றார்களே, தானும் ஏன் ஒரு பெண்ணை மணந்துகொள்ளக்கூடாது, என்ற எண்ணம் பிறந்தது. பிறந்ததும், அவன் தன் அன்னையினிடம் சென்று, "அம்மா! நாலுபேரைப் போன்று நானும் ஒரு கலியாணத்தைச் செய்து முடித்துக்கொள்ள வேண்டாமா? அதற்கு வேண்டுவனவற்றை உடனே சொல்!" என்று கேட்டான். அதுகேட்ட தாய், "மகனே! கலியாணம் என்றால் கின்னுக்கிரையா! அரிசி பருப்பு அடங்கலும் வேண்டாமா! பெண் தேட வேண்டாமா? 'நாளைக்குக் கலியாணம் பிடி தாம்பூலம்' என்பது போலிருக்கின்றதே, நீ சொல்வது! பதறாதே, சிலநாள் பொறுத்துப் பார்த்துக்கொள்ளலாம், அப்பா!" என்றாள்.

பார்த்தான் குள்ளன்; "நம் காரியத்திற்குத் தாயாரை நம்பினால் தரைமட்டமாக வேண்டியதுதான்; நினைத்ததை

நினைந்தபோதே முனைந்து செய்து முடிப்பதன்றோ ஆண் பிள்ளைகட் கடுத்தது; கால விளம்பனம் காலவும் தீதன்றோ! தாய் சொன்னதைப் பார்த்தால் ஒரு கலியாணத்துக்கு அரிசி, பருப்பு, பெண் ஆகிய மூன்றுதானே முதன்மையாய் வேண்டும்போ லிருக்கின்றன. இனி நாம் காலந்தாழ்த்தாமல் கலியாண வேலையைக் கடுகி முடித்தல்வேண்டும்'' என்று தனக்குள்ளே உறுதிசெய்துகொண்டான்.

உடனே, அவன் வீடெல்லாந் தேடிப் பெருச்சாளி போன்ற பேரெலிகள் இரண்டைப் பிடித்தான்; பிடித்துக் கட்டி, அவைகட்கு அல்லும் பகலும் நல்ல தீனி கொடுத்துக் குண்டுப் பெருச்சாளிபோல் அவற்றைக் கொழுக்கவைத்தான். பிறகு அவன் அவற்றைக் கட்டிபோட்டுவதற் கேற்ற வண்டி யொன்றைச் செய்துகொண்டான்.

அதன்பின் ஒருநாட்காலை, குள்ளன் தன் தாயிடஞ் சென்று, "அம்மா! வீட்டில் இரண்டறைகளை ஒழித்து வை, இரண்டு நாழிகைக்குள் வருகிறேன்,'' என்று சொல்லி, அவளிடம் இரண்டு செப்புக்காசுங் கேட்டு வாங்கிக் கொண்டு, எலிக் குதிரைகளை வண்டியிற் பூட்டி, அதில் ஏறி யுட்கார்ந்து கொண்டு, வண்டியைக் கடைத்தெருவிற்குத் தட்டி விட்டான். கடைமறுகிற் சென்றதும், ஓர் அரிசிமண்டியருகில், அவன் வண்டியை நிறுத்தினான். நிறுத்தி, அவன் வண்டியை விட்டிறங்கி மண்டிக்குட் சென்று, "செட்டியாரே! எனக்கு ஒரு காசுக்கு அரிசி வேண்டு'' மென்றான். குட்டிப்பொம்மை போன்று நின்ற குட்டையனைச் செட்டியார் உற்று நோக்கி, வியந்து அன்பு மீதூரப் பெற்று, "தம்பி! எனக்குத் தம்பிடியும் வேண்டாம். உனக்கு வேண்டும் அரிசி பெற்றுக்கொள்; பை கொண்டுவந்தாயா?'' எனச் சிறுவன், "எனது வலக் காது

நிறையக் கொட்டிவிட்டாற் போதும்" என்றான். செட்டியார் ஓர் ஆளைக் கூப்பிட்டு அப்படியே கொட்டுமாறு கட்டளையிட்டுவிட்டார். அவன் குட்டையனை அரிசியறைக்குக் கூட்டிக்கொண்டுபோய் ஒரு பிடி அரிசியைக் கையிலெடுக்க, இளைஞன் இடதுபக்கமாகப் படுத்துக்கொண்டு 'கொட்டு' என்றான். அந்த ஆள் கொட்டின பிடியரிசி காதிற் போனவிடந் தெரியவில்லை. பிறகு அவன் பிடிபிடியாகக் கொட்டியுங் காது பிடித்துக்கொண்டே இருந்தது; பிறகு படிபடியாகவும் அவன் கொட்டிப் பார்த்தான்; அப்போதுங் காது வெறுமையாகவே காணப்பட்டது. பிறகு அவன் ஒரு மூட்டையை அவிழ்த்து அப்படியே கொட்டினான்; அப்போதும் காது நிறைந்தபாடில்லை. பதினெட்டு மூட்டைகள் கொட்டியும் காதினில் அரிசி இருந்த இடந் தெரியவில்லை. என் செய்வான் வேலைக்காரன்! குட்டையன் காதுநிறையக் கொட்டியனுப்பவேண்டு மென்பது கட்டளையன்றோ? அரிசி கொட்டினவன் அலுத்துப் போனதைக் கண்ட சிறுவன், "அப்பா! இன்னும் இரண்டு மூட்டை கொட்டிவிடு, இருபதாக இருக்கட்டும்" என்றான். இரண்டோடு ஒழியட்டுந்தொல்லை யென அவ் வேலையாள் அப்படியே செய்தான். அவனிடம் ஒரு கந்தைத் துணி வாங்கி அரிசிக் காதை அடைத்துக்கொண்டு, வண்டியேறித் துவரம் பருப்பு மண்டிக்குப் போய், அங்கேயும் அவ்வாறே இருபது மூட்டைப் பருப்பை இடக்காதில் அடக்கிக்கொண்டு விரைவில் வீடுவந்து சேர்ந்தான் குள்ளப்பெருமாள்.

வீட்டுக்குள்ளே நுழைந்ததும் குள்ளன் அன்னையை அழைத்தான்; ஒழிக்கப்பட்ட அறைகளைச் சாத்திப் பூட்டிவிடச் செய்தான்; பின் "அம்மா! என்னைக் கூரைமேற் றூக்கி

விடு," என்றான். தாய், "இஃதென்ன கூத்தோ!" என்று சொல்லிக்கொண்டே மகன் சொன்னபடியே அவனை வீட்டுக் கூரைமீ தேற்றிவிட்டாள். கூரைமேற் சேர்ந்த குள்ளன், இரண்டறைக்கும் இடையிலுள்ள ஓடுகளைப் பிரித்தெடுத்து விட்டுச் சுவரின்மேல் கவிழ்ந்து படுத்துக்கொண்டு இரண்டு காதுகளையும் சாய்த்துச் சாய்த்து இடப்பக்கத்து அறையிற் பருப்பையும், வலப்பக்கத் தறையில் அரிசியையுங் கொட்டி விட்டுத் தாயைக் கூப்பிட, அவள் வந்து பிள்ளையைக் கீழே இறக்கினாள். இறக்கினதும் அவன் அன்னையைப் பார்த்து, "அம்மா! நீ கொடுத்த இரண்டு காசும் இதோ செலவழியாமல் விடுவந்து சேர்ந்துவிட்டன; வாங்கிக்கொள். கலியாணத் துக்கு வேண்டிய அரிசியும் பருப்புங் காசில்லாமலே கிடைத்து விட்டன. நாளைக்கு நான் பெண்பார்த்துக்கொண்டு வரப் போகிறேன். எனக்குக் கொஞ்சம் கட்டுச்சோறு மட்டுங் கட்டி வை" என்று சொல்லிவிட்டு, எலிகளுக்குத் தீனிபோட் டுத் தண்ணீர்காட்டச் சென்றுவிட்டான்.

"நம் பிள்ளை அசகாயசூரனா யிருக்கின்றானே! எருவேனை யாராவதொரு பெண்ணை அவன் தேடிக்கொண்டு வந்தாலும் வந்துவிடுவான்போ லிருக்கிறதே" என்று தனக்குள்ளேயே எண்ணி மகிழ்ந்த தாய், விடியுமுன் தொலைவழிக்கு வேண்டிய தோட்கோப்பையும், இன்னும் குட்டிக் குதிரைகளுக்கு வேண்டிய தீனியையும் வகையாகக் கட்டிவைத்துவிட்டாள். பொழுது புலர்ந்ததும் பெண்கொண்டுவா என்னி எலிகள் பூட்டிய சகடத்தி லேறினான் குள்ளன்; கட்டுச்சோறு முதலிய வற்றை வண்டியில் வாங்கிவைத்தான்; "அம்மா வீட்டைக் குறியாகப் பார்த்துக்கொள்" என்று சொல்லிப் புறப்பட்டு விட்டான்.

சிந்தியாபுரம் நோக்கிப் புறப்பட்ட வண்டி சிறிது நேரத்தில் பெருங் காட்டினுட் புகுந்தது. அப்போது சம்பு ஒன்று சகடத் தருகில் வந்து, "யாரது?" என்று கேட்டது. "நரியண்ணா! என்னை உனக்குத் தெரியாதா? இப் பக்கத்தாரெல்லாம் குள்ளப்பெருமாள் என்றால் யாரென் றறிவார்களே! நான் சித்தியாபுரத் தரசனிடம் பெண் கேட்கப் போகிறேன்" என்றான். "அப்படியானால் என்னையும் உடனழைத்துப்போ; அரண்மனையில் எனக்கு வேண்டிய இரை கிடைக்கும்" என்றது நரி. "சரி, எனது வலக்காதிற்



குள்ளனைப் புலி வினாதல்

புகுந்துகொள்" என்று குள்ளன் சொல்ல, அதுவும் அவ்வாறே அவன் செவிக்குள் நுழைந்துகொண்டது. வண்டி மேற்சென்று நடுக்காட்டிற்கு வந்ததும், வேங்கை யொன்று வழிமறித்து, 'நில்' எனக், குள்ளன், "புலியண்ணா! தடை செய்யாதே, நல்ல காரியமொன்றை நாடி நான் நகர்செல்

கின்றேன்; வேண்டுமானல் எனது வலக்காதிலுள்ள சம்புவைக் கேட்டுச் செய்தி தெரிந்துகொள்" என்றான். உடனே ஓரி தலையை வெளிநீட்டி, "புலியண்ணே! குள்ளனர் பெண் கேட்கப் போகின்றார்; நீயும் என்னுடன் வந்தால் நகரில் நல்ல இரை கிடைக்கும்" என்றது. உழுவையும் அதற்கு ஒத்துக்கொள்ளவே, குள்ளன் அதனையும் ஓரியுடன் வலக்காதிலேயே ஏற்றிக்கொண்டான். சற்று நேரத்தில் காட்டைக் கடந்து வண்டி சித்தியாபுரம் எல்லையை அடைந்தது. சித்தியாபுரம் எல்லையிலோடும் ஆறு அன்று வெள்ளமிகுந்திருந்தது. அந்த வெள்ளத்தில் தன் வண்டி தலைதடுமாறிப் போய்விடும் என்று கண்டுகொண்ட அஞ்சாக் குள்ளன், "கங்கை நங்காய்! செந்தீவண்ணன் செஞ்சடையிற் புகுந்துகொண்ட ஆரணங்கே! இல்லறமென்னும் நல்லறம் நடத்தக் கருதிப் பெண்ணொருத்தியை நாடி அக்கரைக்கண்ணுள்ள சித்தியாபுர வாசனிடஞ் செல்கின்றேன்; இந்த மங்கள காரியத்திற்கு உன் உதவியும் வேண்டியிருந்தாலும் இருக்கும். ஆகையால் என்மீது கருணைவைத்து எனது இடக் காதில் இன்று மாலைவரையிற் புகுந்திருக்க வேண்டுகின்றேன்" எனச் சொல்லி, அக்காதினை ஆற்று வெள்ளத்தின்மேற் சாய்த்தான். உடனே குண்டோதரன் வயிற்றுக்குள் வையையாறு சென்றதுபோன்று அவ்வாற்றுநீரெல்லாம் குள்ளன் காதிற்குள்ளே சென்றுவிட்டது. உள்ளக்களிப்புக் கொண்ட குள்ளன் உடனே ஆற்றைக்கடந்து சடுகுடுவென்று சகடத்தைச் செலுத்தி, நேரே சித்தியாபுரம் அரண்மனை வாயிலை அடைந்தான்.

சித்தியாபுர அரசனுக்கு அழகிற் சிறந்த பெண் ஒருத்தி இருந்தாள். அவளுக்கு அழகிலும் அறிவிலும் சிறந்த மண

மகன் எங்கிருந்து கிடைக்கப்போகின்றானோ என்று அரசனும் அரசியும் கவலைகொண் டிருந்தனர். குள்ளப் பெருமாள் அரண்மனை வாயிலடைந்த சமயம், அரசன் தன் மனைவியுடனும் முதல் மந்திரியுடனும் மகளின் மணத்தைக் குறித்தே ஆலோசித்துக்கொண் டிருந்தான். வண்டியை வெளியில் ஓரமாக நிறுத்திவிட்டுக் காவலையெல்லாம் எளிதிற் கடந்து உள்ளே வந்த குள்ளன், நேரே அரசனிருக்குமிடம் வந்து, "அரசே! வணக்கம். தாங்கள் பெண்ணுக்குப் பிள்ளை தேடி யலையவேண்டுவதில்லை. நானே வந்துவிட்டேன். உங்கள் பெண்ணை மணக்க நான் நெடுநாளாக எண்ணியிருந்தேன்" என்றான். சற்றுநேரம் இச்சொற்கள் எங்கிருந்து வருகின்றன என்று அரசனுக்கும் மற்றையோருக்கும் புலப்படவில்லை; மேலுங் கீழும் சுற்றிச்சுற்றிப் பார்த்தார்கள். பார்த்தவர்கள், அறைக் கதவருகில் ஒரு சிறுகுள்ளன் நிற்கக்கண்டதும் முதலில் வியப்படைந்தனர். பின்னர் அரசன் வியப்புத் தீர்ந்து, சினமிகுந்தவனாய், "அடே! நீ யார்? இங்கெப்படி வந்தாய்?" என்று அதட்டிவிட்டுச் சேவகர்களை விளித்து, "முறை தெரியாத இக்குள்ளப் பயலை ஆட்டுக்கிடையுள் தூக்கியெறியச் செய்யுங்கள்" என்றான். உடனே சேவகர்கள் குள்ளனை இழுத்துக்கொண்டுபோய் ஆட்டுக்கிடையுள் விட்டு அவன்மீது ஆடுகளை விரட்டினர். உடனே குள்ளன், "நரியண்ணா! இங்கே உனக்குச் சரியான இரை, இறங்கிவா" என்ன, நரி காதைவிட்டு வெளியிற்குதித்து இரண்டு மூன்று கடாக்களைக் கடித்துக் கொன்றுபோட, ஏனைய மூலைக்கொன்றாக ஓடிப்போய்விட்டன.

இதுகண்ட சேவகர்கள் விரைந்தோடிச் சென்று, வேந்தனுக்கு நடந்ததைக் கூறினர்; அரசனுஞ் சற்றுத் திகைத்தவ

னய், "அப்படியானல், அப்பயலே மாட்டுமந்தையினுட் கிடத்தி மாடுகளை அவன்மீது விரட்டுங்கள்" என்றான். சேவகர்கள் குள்ளனிடம் திரும்பிச் சென்று சேர்வதற்குள், கொன்ற ஆடுகளைத் தின்றுவிட்டு, நரி குள்ளன் காதினுட் புகுந்துகொண்டது. குள்ளனே வாட்டம் சிறிதுமின்றிப் பாட்டுப் பாடிக்கொண் டிருந்தான். சேவகர்கள் அவனைப் பிடித்துக் கொண்டுபோய் மாட்டுமந்தையினுட் கிடத்தினர். குள்ளன், "புலியண்ணே! உமக்குச் சரியான வேட்டை!" என்றான். உறுமலோசை செய்துகொண்டே வேங்கை வெளியே தாவிக் குதித்து, ஐந்தாறு மாடுகளை அறைந்து கொன்றது; மற்ற மாடுகள் இருந்தவிடந் தெரியவில்லை. சேவகர்களும் அலறிக்கொண்டு தலைகால் தெரியாமல் ஓடிவந்து அரசன்முன் வீழ்ந்து, "அப்பா! பிழைத்தோம்!" என்று பெருமூச்சு விட்டனர். அரசன் நிகழ்ந்த தென்னவென்று கேட்கவே, சேவகர்கள், "ஆண்டவனே! நாங்கள் உயிர்தப்பி வந்தது யார் புண்ணியமோ தெரியவில்லை; முன் அந்தக் குள்ளன் காதிலிருந்து நரியொன்று வெளிவந்து ஆடுகளைக் கொன்றது; இப்பொழுதோ அதே காதிலிருந்தே புலியொன்று வெளிவந்து சில மாடுகளை யறைந்துவிட்டது. நாங்கள் உயிர் தப்பினுற் போதுமென்று ஓடி வந்துவிட்டோம். காட்டு விலங்குகளெல்லாம் அவன் காதுகளிலேதான் குடியிருக்கின்றன போலும்! மற்றொரு தடவை போனல், யானை, சிங்கம், காண்டாமிருகம் முதலிய கொடுவிலங்குகளெல்லாம் ஒவ்வொன்றாய் வெளிவரும்போற் றோன்றுகின்றது. அரசே, எங்களை மன்னியுங்கள்! இப்போதே அவனுக்கு அரசகுமாரியை மணஞ் செய்துகொடுத்து ஊரைக் காப்பாற்றுங்கள்." என்று கதறினர். "அடே! என்ன சொன்னீர்கள்! கத்தரிக்காய்க்குக் காலுங்கையும் முளைத்தது

போலிருக்கிற அப்பயலுக்கு என் மகளைக் கட்டிக்கொடுப்பதை விட அவளை ஆற்றுவெள்ளத்திற் றள்ளிவிடுவேன்," என்று அரசன் வெகுண்டு கூறினன். "அரசே! அதுவே தங்கள் விருப்பமாயின், தாங்கள் ஆற்றைத் தேடிச் செல்வதைவிட அரண்மனைக்குள்ளேயே ஆற்றை வரவழைத்துக் கொடுக்கிறேன். தங்கள் திருக்கைகளாலேயே தங்கள் பெண்ணை அதில் தள்ளிவிடுங்கள் என்ற சொற்கள்" பிறந்தன. குள்ளப் பெருமாள் அறைவாயிலின் வெளிப்புறம் நின்று, "கங்கா பவானியே! அன்று விண்ணினின்றும் விறுடன் இறங்கி மண்ணைப் பெரும்பள்ளமாக்கிய உன் பேராற்றலை இன்று இங்குச் சிறிது காட்டுவாயாக" என்றான். உடனே, குள்ள னுடைய இடச் செவியினின்றும் ஆற்றுவெள்ளம் குபுகுபு வென்று நுங்கும் நுரையுமாகப் பெருகிவந்தது. நொடிப் பொழுதிற் பண்டங்களெல்லாம் வெள்ளத்தில் மிதக்கலாயின, அரசனுக்கும் மற்றவர்களுக்கும் இடுப்புவரை நீரேறி விட்டது. அப்போது குள்ளன் அரசனைப் பார்த்து, "இப்போ தாவது பெண்ணைக் கொடுத்து உம்மைக் காப்பாற்றிக்கொள் ளப்போகிறீரா? அல்லது, உங்களையெல்லாம் வெள்ளத்தில் இழுத்துச்சென்று ஊர்சிரிக்க வைக்கட்டுமா?" என்று கேட் டான். இதற்குள் அரசனுக்குக் கழுத்துவரை நீரேறிவிடவே அரசன், ஓ! அப்படியே பெண் கொடுக்கின்றேன்; இந்த வெள்ளத்தை முதலில் அடங்கச்செய்" என்றான். குள்ளன் உடனே "ஓ ஆறணங்கே! செவிக்குட் செல்வாய்," என்றுகூற நீரெல்லாம் வற்றிவிட்டது. இதனைக் கண்டு அகமகிழ்ந்த அரசன், "குள்ளப் பெருமாள் என்ற பெயர் உனக்கே தகும். உன்போன்றவனுக் கன்றோ என் அருமை மகளை மன முவந்து மணமுடித்துக் கொடுக்கவேண்டும்!" என்று சொல்லி, அன்றைத்தினமே கோதைக்குங் குள்ளனுக்கும் மாலை சூட்டி.

மணமுடித்து இருவரையும் அவர்கள் ஊருக்கு அனுப்பி வைத்தான்.

மணமகனும் மணமகளும் எலிவண்டியேறிச்சென்று வழியில் ஆற்றையும், புலியையும், நரியையும் அதனதனிடத்தில் விட்டுவிட்டு ஊர்சேர்ந்தார்கள். சேர்ந்ததும், பெண்



அரசனும் மற்றையோரும் நீரிலமிழ்தல்.

ணும் பிள்ளையும் வீட்டுக்குள்ளே போக, அவர்களைக் கண்ட அன்னை அகமிக மகிழ்ந்து ஆனந்தக்கண்ணீர் சொரிந்தாள். அப்போது குள்ளமாப்பிள்ளை அவளைப் பார்த்து, "அன்னாய்! அரிசி பருப்பு மில்லாமல், அரைக்காசும் செலவில்லாமல் கலியாணம் நடந்தேறிவிட்டது. உனக்கு வாய்த்துள்ள மருமகளோ சித்தியாபுரத்தரசன் குலமகள். இதோ, உன் மருமகளை உவந்தேற்றுக்கொள்" என்றான். அது கேட்ட தாய்

மக்ளையும் மருமகளையும் இறுகத் தழுவிக்கொண்டு, "சான்ற பிள்ளையானாலும் ஆண்பிள்ளை ஆண்பிள்ளைதான்" என்று சொல்லி, இருவரையும் வாழ்த்தி வரங்கள் தந்தாள்.

பயிற்சி

1. வழிமறித்தல், தலைதடுமாறல், அசகாயசூரன், செந்தீ வண்ணன், உள்ளக் களிப்பு, கழறல், தோட்கோப்பு, வீறு, போற்றல், ஊர்சிரிக்க வைத்தல், மனமுவத்தல், கோதை, அகமகிழ்தல், கண்ணீருகுத்தல், இறுகத் தழுவல்.
2. இஃது, செய்து—இவற்றை யெவ்வெவற்றிற்கு உதாரணங்களாகச் சொல்லலாம்?
3. புரம், சிரிது, யாறென்றரிவார், சத்துநேறம், குரித்து, ஓராமாக நிருத்து, கிகர்க்கிரது, விறைஞ்சி மரைந்தான், குரி சொல்லத் தெறியும், போகிரீரு—இவற்றைத் திருத்துக.
4. (a) குள்ளப் பெருமாள் அரிசி பருப்பு சம்பாதித்த வகையைச் சுருக்கமாக எழுதிக் காட்டு.
   (b) குள்ளப் பெருமாள் எவ்வெவற்றால் எவ்வெவ்வுதவிகளைப் பெற்றான்?

உச. செய்யுட் பாடம்

I

தனிப்பாடல்கள்

பிதாக்கள்

பிறப்பித்தோன், வித்தைதனைப் பேணிக் கொடுத்தோன்,
சிறப்பினுப தேசஞ் செய்தோன்—அறப்பெரிய
பஞ்சத்தி லன்னம் பகிர்ந்தோன், பயந்தீர்த்தோன்
எஞ்சாப் பிதாக்களென வெண். க

இயைந்ததை ஈதலும், இழுக்கடித்து ஈயாமையும்

நல்லவர்கள் வாயால் நவிலுமொழி பொய்யாமல்
இல்லையெனு துள்ளமட்டு மீவார்கள்—நல்லகுணம்
அல்லவர்கள் போவாவென் றுசைசொல்லி நாட்கழித்தே
இல்லையென்பா ரிப்பா ரிலே. உ

துர்க்குணர்க்கில்லாதன

ஞானம், பெருமை, நயங், கருணை, யுண்மை, யபி
மானம், பொறுமை, வணக்க, முயர்—தானமுடன்
சற்குண, மாசாரந், தருகல்வி, நீதிநெறி
துர்க்குணருக் கில்லென்றே சொல். ங

இதற்கிது விளக்கமெனல்

மனைக்கு விளக்கம் மடவார், மடவார்
தமக்குத் தகைசால் புதல்வர்—மனக்கினிய
காதற் புதல்வர்க்குக் கல்வியே, கல்விக்கு
ஓதிற் புகழ்சா லுணர்வு. ச

இதனினுமிது அரிதெனல்

எழுதரிது முன்னம், எழுதியபின் அஃதைப்
பழுதறவா சிப்ப(து) அரிதாம்—முழுதுமதைக்
கற்பரிது, நற்பயனைக் காண்பரிது, கண்டக்கால்
நிற்பரிது தானந் நிலை. ரு

எழுத்துநிலை மாற்றம்

நாலெழுத்துப் பூடு, நடுவே நரம்பிருக்கும்
காலுந் தலையுங் கடைச்சாதி—மேலாக
ஒட்டு முதலெழுத்தும் ஓதுமூன் றாமெழுத்தும்
விட்டாற் பரமனுக்கு வீடு. சூ

சந்திரனுக்குங் கருடனுக்குஞ் சிலேடை

வாலைப் பொருந்துதலால் வல்லரவம் பற்றுதலால்
மாலை யடுத்துநெடு வானுறலால்—மேலைநிலத்(து)
உம்பர்பூ சிக்கவருள் ஒற்றியூ ரன்வரையில்
அம்புலியும் நற்கருடன் ஆம். எ

II

இனியவை ஐம்மூன்று

சலவரைச் சாரா விடுத லினிதே
புலவர்தம் வாய்மொழி போற்ற லினிதே
மலர்தலை ஞாலத்து மன்னுயிர்க் கெல்லாம்
தகுதியால் வாழ்த லினிது. க

பிறன்கைப் பொருள்வெளவான் வாழ்த லினிதே
அறம்புரிந் தல்லவை நீக்க லினிதே